# திருக்கோயில்

மார்ச் 1978 விலை ரூ. 1-25



பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குக்
கேரள ஆளுநர் மேதகு திருமதி ஜோதிவேங்கடாசலம் அவர்கள் வருகை தந்து வழிபட்டபோது,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு அவர்கள்
வரவேற்றுச் சிறப்பித்தல். [22—1—1978]

முகப்பு :

மதுரை மாவட்டம், பழநி,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின்
அழகிய திருவுருவம்

# திருக்கோயில்

மாலை : 20 | பிங்கள ஆண்டு—பங்குனி திங்கள் மார்ச் —1978 | மணி : 6

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் '' சந்தாதாரர் '' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவருமல் தெரிவித்து உதவினுல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருக்கச்சி நம்பிகள்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.

தேவார திருவாசகத் திருமுறைகளின் சிறப்பு
—ஆசிரியர்.

''ஒருத்தி மகனுய்ப் பிறந்து
ஒருத்தி மகனுய் வளர்ந்தான்'' —ஆசிரியர்.

மாறன் அடிபணிந்து உய்ந்த இராமாநுசர்
—திரு. ஏ. ஆர். பார்த்தசாரதி நாயுடு.

வட மலையப்பப் பிள்ளையன்
—திருமுருக கிருபானந்த வாரியார்.

திருவள்ளுவர் விளக்கும் தெய்விகச் செந்நெறி
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

ஆழ்வார்களின் அருளிச் செயல் அழகு
—திரு. என். எஸ். தாத்தாசாரியார்.

வடபழநி ஆண்டவர் அருள் மாட்சிமை
—திரு. விவேகானந்தன்.

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புகள்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

சிவராத்திரி விரதச் சிறப்பு —திரு. சிவநேசன்.

கந்தபுராணக் காப்பிய நலம்
—திரு. க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.

சேக்கிழார் எடுத்த செஞ்சொற்கோயில்
—திரு. சி. சு. கண்ணுயிரம்.

இராமாநுச நூற்றந்தாதி —ஆசிரியர்.

திருமால் நெறியின் சிறப்பு
—திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# திருக்கச்சி நம்பிகள்*

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,

*ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34*

திருக்கச்சி நம்பிகள், இராமாநுசரின் காலத்தில் (கி.பி. 1017—1137), அவரினும் வயதில் மூத்தவராக வாழ்ந்திருந்த, ஒரு சிறந்த வைணவப் பெரியவராவர். இவர் அவதரித்த தலம், சென்னைக்கு அருகில் உள்ள பூந்தண் மலியாகும். இவரது இயற் பெயர் கஜேந்திர தாசர் என்பது. திருக்கோட்டியூர் நம்பிகள், பெரிய நம்பிகள் ஆகிய இருவருக்கும் தொண்டு செய்து, அவர்களது அன்பைப் பெற்ற, இவர் திருவரங்கத்தில் இருந்து கொண்டு அருளாட்சி புரிந்துவந்த ஆளவந்தார் என்னும் வைணவப் பெரியவரின் சீடராக விளங்கினர். வணிக குலத்தில் கமலா என்னும் தாயாருக்கும், வீர ராகவர் என்னும் தந்தையாருக்கும் நான்காம் மைந்தராகப் பிறந்து, பிரமசாரியாகவே வாழ்ந்து வந்த இவர், பெருமாளுக்கு மலர்த் தொண்டும், ஆலவட்டத் தொண்டும் செய்வ தில் மிகவும் ஈடுபட்டவர். தம் வாழ்நாள் முழுதும் அக் கைங்கரியத்தையே செய்து வந்த வர். அத்தொண்டினை, இவர் வைணவ சமயப் பெருஞ் சான்றோராகிய ஆளவந்தாருடன் இருந்து கொண்டு, திருவரங்கத்தில் செய்து வந்தார்.

திருவரங்கநாதர், காவிரிக்கரையில் குளிர்ச் சியாகப் பள்ளி கொண்டுள்ள தமக்கு ஆலவட்ட கைங்கரியம் வேண்டா என்று கூறவே, இவர் திருவேங்கடம் சென்று அங்குள்ள பெருமா ளுக்கு ஆலவட்டம் வீசத் தொடங்கினர். அவரும் ''இது குளிர் அருவி வேங்கடம்' ஆத லால், இங்கே இயல்பாகவே குளிர் அதிகமாக உள்ளது; அதனுல் எனக்கு ஆலவட்டம் வீச வேண்டாம்; கச்சியம்பதியில் அத்திகிரியின் உச்சியில், அசுவமேத வேள்வியில் தோன்றிய அருளாளப் பெருமாள் ஆகிய வரதராஜர் (தேவராஜர்), வேள்வித் தீயில் பிறந்த தம் வெப்பம் தணிய, உமது ஆலவட்ட கைங்கரி யத்தை விரும்புவார், அங்குச் சென்று பணி புரியலாம்'' என்று, இவரை அனுப்பி வைத் தார். அதனுல் இவர் கச்சி என்னும் காஞ்சி புரத்திற்கு வந்து, அங்கேயே நிலையாகத் தங்கிப் பெருமாளுக்குப் பணிபுரிந்து வந்தார். அதனுல் இவருக்குத் ''திருக்கச்சி நம்பிகள்'' என்னும் பெயர் அமைந்தது. நம்பி அல்லது நம்பிகள் என்பதற்கு, எல்லா நற்குணங்களும் நிறைந்து விளங்கும் சான்றோர் என்பது பொருள்.

இவர் வரதராஜப்பெருமாளுடன் நேர்முக மாகப் பேசிப் பழகி மகிழும் பேறு பெற்றவ ராவர். அதனுல் இவர் பெரும் புகழ் பெற்று விளங்கியிருந்தார். இராமாநுசர், யாதவப் பிரகாசர் என்னும் தமது அத்துவைத தத்துவக் குருவினிடமிருந்து மனம் வேறுபட்டுப் பிரிந்த பிறகு, தம் தாயார் கூறியபடி திருக்கச்சி நம்பி களை அடைந்து பழகி, அவருடன் காஞ்சி வரத ராஜப் பெருமாளுக்குத் தொண்டு செய்து வந்தார்.

அப்போது இராமாநுசருக்குச் சாத்திர நூல்களில் பல சந்தேகங்கள் இருந்தன. அந்தச் சந்தேகங்களுக்குத் தக்க விடைகளைப் பெருமா ளிடம் நேர்முகமாகக் கேட்டறிந்து, தமக்குத் தெரிவிக்கும்படி, இராமாநுசர் திருக்கச்சி நம்பி களை வேண்டிக் கொண்டார். அதன்படியே, திருக்கச்சி நம்பிகள், காஞ்சி வரதராஜப் பெரு மாளிடம் இராமாநுசரின் சந்தேகங்களை விண் ணப்பித்தார். அதற்கு விடையாகப்பெருமாள், திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆறு திருவார்த்தை களை இராமாநுசருக்குரிய உபதேசமாக அருளிச் செய்தார். அவைகளாவன :

1. பரதத்துவப் பொருள் நாராயணன் ஆகிய நாமே.

2. சித்து அசித்து ஈசுவரன் என்னும் முப் பொருள்களின் வேறுபாட்டை விளக்குவதுவே, வைணவ சமயத்தின் கொள்கை.

3. இறைவனின் அருளைப் பெறுவதற்கு உரிய உபாயம், சரணுகதி என்னும் பிரபத்தி நெறியே.

4. யாக்கையிலிருந்து உயிர் நீங்கும் இறுதிக் காலத்தில் நாராயணரை நினைத்தால் தான், மோட்சம் என்பது இல்லை. நினையாவிட் டாலும் நாராயணன் மோட்சத்தைக் கொடுத் தருள்வான்.

* பூந்தண்மலிப் பெருமாள் கோயிலில், 29-1-78 அன்று நடைபெற்ற மகாசம்ப்ரோட்சண விழாவில், நமது ஆணையர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்

5. மரணமானல் வைகுந்தம் தரும் பிரான்'' என்றபடி, உடல் இறந்ததுமே வீடு பேறு நிச்சயமாகக் கிடைக்கும்.

6. இராமாநுசன் தனக்கு உரியகுருவாகப் பெரியநம்பிகளின் திருவடிகளையே பற்றக் கடவன்.

இந்த ஆறு திருவார்த்தைகளையும், திருக்கச்சி நம்பிகள் மூலம், காஞ்சி வரதர், இராமாநுசருக்கு அருளிச் செய்தார். இதனல் திருக்கச்சி நம்பிகளின் பெருமை விளங்கும். இவரால் "தேவராஜ அஷ்டகம்'' என்னும் துதி நூல் செய்யப் பெற்றுள்ளது. இவர் 55 ஆண்டுகள் (கி.பி. 1009—1065) இந்நிலவுலகில் வாழ்ந்த தாகத் தெரிகின்றது.

திருக்கச்சிநம்பிகள் காஞ்சிபுரத்தில் நெடுங் காலம் நிலையாக வாழ்ந்ததன் அடையாளமாக, இன்றும் காஞ்சிபுரத்தில் அவர் பெயரால், "திருக்கச்சி நம்பிகள் தெரு'' என்று, தெரு ஒன்றிற்குப் பெயர் அமைந்து விளங்கி வருகின்றது.

"மருவாரும் திருமல்லிவாழவந்தோன் வாழியே!
மாசிமிருக சீரிடத்தில் வந்துதித்தான் வாழியே!
அருளாள ருடன்மொழிசொல் லதிசயத்தோன் வாழியே!
ஆறுமொழி பூதூரர்க்கு அளித்த பிரான் வாழியே!
திருவால வட்டம் செய்து சேவிப்போன் வாழியே!
தேவராச அட்டகத்தைச் செப்புமவன் வாழியே!
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே!
திருக்கச்சி நம்பிஇரு திருவடிகள் வாழியே!''

## பூந்தண்மலிப் பெருமாள் கோயில்

சென்னைக்கு அருகிலுள்ள, பூந்தமல்லி அல்லது பூவிருந்தவல்லி என்னும் ஊர், பண்டைக்காலத்தில் பூந்தண்மலி (தண்—குளிர்ந்த, பூ—மலர்கள், மலி—மலிந்துள்ள இடம்) என்னும் பெயருடையதாக இருந்தது.

பூந்தண்மலி என்னும் அழகிய தமிழ்ப் பெயர், நாளடைவில் பூந்தமலி—பூந்தமல்லி —பூவிருந்தவல்லி என மருவி வழங்கத் தொடங்கியது. 'பூவிருந்தவல்லி' என்னும் பெயர் வழங்கத் தொடங்கிய பின்னர், அங்குள்ள வரதராஜப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியுள்ள தாயார், மல்லிகைப் பூவில் இருந்து தோன்றியதாகத் தலபுராண வரலாறு கூறப் பெறுவதாயிற்று. பூவிருந்தவல்லி என்பது, பூணமல்லி, என்றும், பூவை என்றும் வழங்கப் பெற்று வருகின்றது.

பழைய கல்வெட்டுக்களில் "பூந்தண்மலி'' என்ற பெயரே, அமைந்து காணப்படுகிறது. "புலியூர்க் கோட்டத்துப் பூந்தண்மலி'' என வரும் தொடர், முதற் பராந்தகன் (கி.பி. 907—954) கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.

பூந்தண்மலியிலுள்ள பெருமாள்கோயில், இப்பொழுது வரதராஜப் பெருமாள் கோயில் என்று வழங்குகிறது. ஆயினும் இதற்கு "நெடுஞ்செழிய விண்ணகர்'' என்று பெயர் இருந்ததாகத் தெரிய வருகின்றது. பூந்தண்மலியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல், சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு, கோல்கொண்டா சுல்தானல் கட்டப்பெற்றது. அந்த மசூதியின் தரையில் பதிக்கப்பட்டுள்ள ஒன்பது கருங்கற்களில், தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்லிலும் ஒரே வரிதான் காணப்படுகிறது. அவ் எழுத்துக்களில் அழிந்தமை போக எஞ்சி நிற்பவை,

''புலியூர்க் கோட்டத்துப்
பூந்தண்மலி
நெடுஞ்செழிய
விண்ணகர்''

என்னும் தொடரை உணர்த்துகின்றன. பெருமாள் கோயில்கள், விண்ணகர் (விஷ்ணு நகர்; நகர்–கோயில்) என வழங்கப்படுவதுண்டு. நெடுஞ்செழியன் என்பது, சங்ககாலப் பாண்டிய அரசர்களில் சிலருக்குப் பெயர். இதனல் ஒரு காலத்தில் தொண்டை நாடு வரையில் பாண்டியர்களின் ஆதிக்கம் பரவி இருந்தமை தெரிகிறது.

நெடுஞ்செழிய விண்ணகரம் என்னும் இத் தொடர், முதற் பராந்தக சோழன் (கி.பி. 907—954) கல்வெட்டில் காணப்படுகிறது. நெடுஞ்செழிய விண்ணகர் என்னும் பழைய பெயரைக் கொண்ட இக்கோயில், இந்நாளில் வரதராஜப் பெருமாள் கோயில் என வழங்குகின்றது.

இக்கோயிலில் சீநிவாசன் சந்நிதி, அரங்கநாதன் சந்நிதி என்னும் இரண்டு சந்நிதிகள் உள்ளன. இக்கோயில் திருக்கச்சி நம்பிகள் என்ற வைணவப் பெரியார் பூசித்த கோயில். ஆதலால் அப் பெரியாருக்கு ஒரு சந்நிதியும் இக்கோயிலில் அமைந்துள்ளது. தாயார் பெயர் புஷ்பவல்லித் தாயார் என்பது. அத் தாயார் மல்லிகைப் பூவில் தோன்றிய காரணம் பற்றிப் பூவிருந்தவல்லி எனப் பெயர் பெற்ருர் என்பது வரலாறு. அப் பெயரே காலப் போக்கில் ஊருக்கும் பெயராயிற்று என்று, பெருமாள் கோயில் பட்டர்கள் கூறுகின்றனர்.

பூந்தண்மலிப் பெருமாள் "கோயிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை கி.பி. 13-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவை. அவை குறிக்கும் அரசர்களும், அவர் தம் காலங்களும் வருமாறு :

1. சடைய வர்மன் விக்கிரம பாண்டியன் —(கி.பி. 1249—1258).

2. விசய கண்ட கோபாலன் (கி.பி. 1250—1280).

3. சேரன் இரவி வர்மன் குலசேகரன் —(கி.பி. 1275—1290).

1. சடையவர்மன் விக்கிரம பாண்டியனது ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1254), பெருமாள் கோயில் இருந்த இடம்—சயங் கொண்ட சோழ மண்டலத்து மாங்காடு நாட்டுக் குழுகாணிப்பாக்கத்து அகரம் எனப் பெயர் பெற்றது. அங்கிருந்த பெருமாள் கோயில் பிள்ளைக் கோயில் எனப் பெயர் பெற்றிருந்தது.

2. விசயகண்ட கோபாலனது இருபத்து நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. 1273) செம்பாக்கத்தைச் சேர்ந்த ஒருவன் பிள்ளைக்கோயிலில் ஒரு விளக்கு எரிக்க ஒரு பசுவை வழங்கினான்.

3. இரண்டாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியன் என்பவனை வெற்றி கொண்ட சேர மன்னன் இரவி வர்மன் குலசேகரன், தன்னைச் சேரபாண்டியன் என்று கூறிக்கொண்டான். அவன் கலியுகராமநல்லூர் என்னும் ஊரிலிருந்து அகரத்தைப் பிரித்தான்; அதற்குச் 'சேரபாண்டியன் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயரிட்டான்; அம் மங்கலத்தை மறையவர்களுக்குச் சர்வ மானியமாக வழங்கினான். இந்த நான்கு கல்வெட்டுச் செய்திகளிலும் பெருமாள்கோயிலுள்ள இடத்தின் பெயர் 'பூவிருந்தவல்லி' என்பது காணப்படாமை அறியத்தகும். **

# இராமாநுஜரின் பத்தாம் நூற்றாண்டு விழா

வைணவ சமயத்தின் ஆசாரிய பரம்பரையில் தலைசிறந்தவராகத் திகழ்பவர், இராமாநுசர் ஆவர். இவர் 960 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிங்கள ஆண்டு, சித்திரைத் திருவாதிரையில் உலகம் உய்ய அவதரித்து, இருள்தரு மாஞாலமாகிய இவ்வுலகின் அக இருளைப் போக்கித் தன் உபதேச மொழியால், கலியுகத்தைக் கிருதயுகமாக்கிய சூரியன் ஆவர்.

பரம்பொருள் உண்மையையும், அவனோடு நமக்குள்ள என்றும் ஒழிக்க ஒழியாத உறவையும், தெளிவுற உணர்த்தியவர், இராமாநுசர். நவரத்தினம்போன்ற ஒன்பது நூல்களை இயற்றி, அறிவியல் உலகத்தை உய்வித்தார். அனுதியான வேத ஆதாரங்களிலிருந்தே பெறுப்படுவதான அரிய வேதாந்த விழுப்பொருளை, அதன் முழுவடிவில் மிருதிகளோடு இதிகாச புராணங்களின் இறுதிக் கருத்தாயும், ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப் பொருளாயும் எடுத்துக்கூறி, வைதிக நெறியிலும், வைணவ மரபிலும், இக வாழ்க்கையின் இறையின்பத்தை, நிறையின்பமாகப் பொருத்தமுற இணைத்து, வையகத்தே வைகுந்தப் பெருவாழ்வு வாழ்ந்து காட்டியவர், அனைத்துலகும் வாழப் பெரும்பூதூர் வந்த வள்ளல் நம் இராமாநுசர்.

நூற்றிருபது ஆண்டு நிறைவு வாழ்வு வாழ்ந்த அண்ணல் இராமானுசரின் வாழ்வில், பிற்காலத்திற் காந்தியடிகளின் அரிஜன இயக்கத்தின் முன்னோடியாகத் தீண்டாதாரைத் திருக்குலத்தோராக்கிய செய்தி உண்டு. தொண்டனூர் ஏரியைப் பொறிஇயல் நுணுக்கம் வெளிப்பட அமைத்து, அருளியல் சமுதாயப் பணி செய்த தகவல் உண்டு. சாதி, இன, மொழி வேற்றுமை கடந்து, பாரத ஒருமைப் பாட்டையும், பக்தி இயக்கத்தையும், ''ஊர் ஒற்றுமை கோயிலாலே'' என வழிகண்டு, வேலை வாய்ப்பு, மருத்துவ வசதி உட்பட உடலுக்கும், உயிருக்கும், அதாவது இம்மைக்கும் மறுமைக்குமான எல்லாவற்றையும் கோயிலோடு இணைத்து, கலைச்சிறப்பும், கருணைப் பெருக்கும், தத்துவஞானத் தெளிவும், உயிர்க்குலத்திடை அன்பும், பிணைப்பும் ஏற்பட வழி செய்துள்ளவர் வள்ளல் இராமானுசர்.

இவர் தோன்றியதனால் ''நலியும் நரகமும் நைந்த, நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை''. ''கலியும் கெடும் கண்டுகொள்மின்'' என்ற நம்மாழ்வார் கனவு நனவாகியது. இராமாநுசரின் பெருமை எல்லையற்றது. அது நிலத்தினும் பெரியது; கடலிலும் ஆழ்ந்தது; வானினும் விரிந்தது. வைணவ சமயத்தின் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் ஆகிய அனைவரின் சிறப்பும் பண்பு நலங்களும், இராமாநுசர் பக்கல் ஒருங்கே திரண்டு ஓர் உருவாய் அமைந்திருந்தன. இவ்வாறு தேசமெல்லாம் உயர்ந்திடத் திருப்பெரும்புதூரில் பிங்கள சித்திரையில் ஆதிரை நன்னாளில் அவதரித்த மகாபுருஷர் ஆகிய இராமாநுசரின் ஆயிரமாண்டை நெருங்கி, அவரது அவதார ஆண்டாகப் பிறங்கி நிற்கும் பிங்கள ஆண்டில், 10-வது நூற்றாண்டுவிழா, நாடெங்கும் விழாவெடுத்து நாற்றிசையும் கொண்டாடி மகிழப்படுகிறது. அவற்றுள் இராமாநுசர் எழுந்தருளியிருந்து, தர்சன நிர்வாகம் செய்தருளி, ''தென்னரங்கர் செல்வ முற்றும் திருத்தி வைத்தான்'' என்றபடி, திருவரங்கர் கோயிற் பணிகளை ஒழுங்குபடுத்தி, அடியார்கள் வாழஅரங்கநகர் வாழ வகை செய்தருளிய திருவரங்கத்தில், பகவத் இராமாநுசரின் 10-ஆவது நூற்றாண்டு விழா அவதார மகோத்சவ வைபவங்கள், நாளது பிங்கள ஆண்டு மாசி மாதம் 17-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை அதாவது 1-3-78 புதன் முதல் 12-3-78 ஞாயிறு வரை உலக நலத்துடன் அனைத்து சௌபாக்கியங்கள் உண்டாகவும், சகல தோஷங்களும் நீங்கவும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்த, திரிவேத, வேதாந்த வேதாங்க பாராயணங்களுடன், 108 ஓம குண்டங்களில், ஸ்ரீ மகா சுதர்சன ஓமம், ஸ்ரீபுருஷ சூக்தம், ஸ்ரீசூக்தம், பூ சூக்தம், ஸ்ரீசுதர்சன மகாமந்திரம், ஸ்ரீசுதர்சன மாலா மந்திரம், ஸ்ரீசுதர்சன பீஜாக்ஷரம், ஸ்ரீசுதர்சன காயத்ரீ, திருவஷ்டாட்சரம் ஆகிய ஓமங்கள் பகவத் சாஸ்திரமான ஸ்ரீ பாஞ்சராத்ர விதிப்படி 108 ரிக்விக்குக்களையும், நூற்றுக்கணக்கான வேத விற்பன்னர்களையும் திவ்வியப் பிரபந்த, பகவத் விஷய, ஸ்ரீ பாஷ்ய அதிகாரிகளையும், பௌராணிகர்களையும், வித்வான்களையும் கொண்டு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தனிச் சிறப்பு வாய்ந்த அரிய இம் மஹோத்சவத்தில் பக்திமான்கள் அனைவரும் ஆக்கமும், ஊக்கமும், தந்து ஆசாரிய கிருபைக்கு இலக்காக வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

—ஆசிரியர்.

# தேவார திருவாசகத் திருமுறைகளின் சிறப்பு

**முன்னுரை :**

தமிழ்நாடு எத்துணையோ பல வகைகளில் தனிப் பெருஞ் சிறப்புடையது. ஆயினும், இந்நாளில் அதன் பழம் பெருமைகள் பலவும் அத்துணை விளக்கம் பெற்றிலங்கக் காண்கின் றிலம். எனினும், தமிழ்நாடு இன்னும் ஒரு சிறிதளவாதல் ''இங்குளி வாங்கும் கலம்'' (பெருங்காயச் சிமிழ்) போல, மங்காப் புக ழொளி வீசித் திகழ்ந்து கொண்டுதான் விளங்கி வருகின்றது.

அதற்குரிய சிறந்ததொரு பெருங் காரண மாகத் திகழ்வன ''செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்'' அமைந்த அருந்தமிழ்க் கவிதைகளே யாகும். ''இங்கி லாந்து தேசம் வேறுபிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது'' ( "By nothing is England so glorious as by her poetry" —Matthew Arnold ) என மேத்யூ ஆர்னால்ட் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந் தமை, நம் அருமைத் தமிழ் நாட்டிற்கே மிகவும் இயைந்ததாக உள்ளது.

தமிழ் மக்களின் நயத்தக்க நனிநாகரிகம், தமிழ்க் கவிதைகளின் வாயிலாகத்தான், உலக அரங்கில் இன்று ஓரளவேனும் மதிக்கப்பெற்று விளங்கி வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இற்றை ஞான்றுள்ள பெருமைக ளெல்லாம், பெரும் பாலும் அதன் அழகிய இனிய அரிய கவிதை களினால் எஞ்சி நின்றனவே யாகும்.

**திருமுறைகளின் சிறப்பியல்புகள் :**

தமிழ்க் கவிதைகளோ பலப்பல திறத்தன. அவைகளுள்ளே, சைவத் திருமுறைகள் தனிச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தொளிர்வனவா கும். மொழி (Language), சமயம் (Religion), தத்துவம் (Philosophy), இலக்கியம் (Literature) வரலாறு (History), பண்பாடு (Culture), மன்பதைவாழ்வியல் (Sociology), நுண்கலைகள் ( Fine Arts ) என்னும் பலப்பல துறைகளி லும், சைவத் திருமுறைகள் தமிழ் மக்களின் தனி நாகரிக மேம்பாட்டு நலங்களைத் திறம் பட விளக்கித் தெளிவிக்கும் சிறந்த பெருங் கருவிகளாகத் திகழ்கின்றன எனலாம்.

கவிதை நலத்திற்கு வரம்பாகக் கலைஞர் களாற் கொள்ளப்படும் சங்க காலப் பாடல் களிற் ''பாலிற்படு நெய்போல்'' மறைய நின் றுள்ள தெய்கச் சிறப்பு நலம், திருமுறைப் பாடல்களில் ''ததிநெய்போல்'' தெளிவாக விளங்கிச் சிறந்தினிது நிறைந்து காணப்படுதல், அவற்றின் தனிப் பெருஞ் சிறப்புக்குக் காரண மாகும்.

**அருளியல் நிறைமொழிகள் :**

கலையறிவுணர்வால் மட்டுமே பாடப்பெற்ற ஏனைய பிற சில உலகியற் கவிதைகளைக் காட்டி லும், இறையருளுணர்வாற் பாடப்பெற்ற திரு முறைகளின் நிறைமொழிப் பாடல்கள், எல்லா வகையாலும் ஏற்றம் மிக்குடையன என்பதில் ஐயமில்லை. ''அரிய கற்று ஆசற்றார் கண்ணும்

---

(1) "No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression."

—*Prof. L. D. Barnett*, The Heart of India, p. 82.

(2) " In no literature with which I am acquainted has the individual religious life, has its struggles and dejections, its hopes and fears, its confidence and triumph received a delineation more frank and more profound."

—*Charles Eliot*, Hinduism and Buddhism, Vol. II, p.57

(3) " In the matter of pure devotional outpouring, exuberance and ebullience of language, Tamil has hardly a parallel in the world's literature."

—*Dr. C.P. Ramaswamy Aiyer*, P. E. N. Conference.

(4) " There are, indeed, but few poems in any language that can surpass Thiruvasakam or the holy word of Manikkavasagar, in profundity of thought, in earnestness of feeling, or in that simple childlike trust, in which the struggling human soul, with its burdens of intellectual and moral puzzles, finally finds shelter."

—*Prof. P. Sundaram Pillai, M.A.*, The Age of Thirugnana Sambandar.

(5) " There are few works in Tamil devotional literature that compare with, certainly none that excell the Thiruvasakam, in light and grace, in lofty feeling and fervid piety, in passionate longing for spiritual peace and purity, and in the uplifting faith in divine grace in which the human soul, tossed about on the stormy billows of intellectual and moral puzzles, finds a safe haven of rest."

—*Rev. Dr. G. U. Pope*

தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு'' எனவும் ''பல நல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்லர் ஆகுதல் மாணார்க் கரிது'' எனவும், ''நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை யறிவே மிகும்'' எனவும் ஆசிரியர் திருவள்ளுவர் பலவிடத்தும் பகர்ந்தபடி, எத்துணைதான் சிறந்த கலைநூற் புலவராயினும், அவரெல்லாம் முற்றிலும் பிழையற்ற பெற்றியினராதல் இயலாது. முக்குணவயத்தான்முறை மறந்தறைதல், கலை நூற்புலமையர் எல்லார்க்கும் இயல்பேயாகும்.

ஆனால் 'தவத்தான் மனம் தூயராய்'' — 'பொறிவாயில் ஐந்துஅவித்து'—'ஏகனுகி இறைபணி நின்று' அருள் பெற்றுயர்ந்த 'நிறைமொழி மாந்தர்' தம் அருள்மொழிகள், என்றும் 'பொய்யாமொழியாய்' நின்று நிலவி வையத்துயிர்களை யெல்லாம் வாழ வைத்தருளும் மாட்சிமையுடையன.

திருமுறை நூல்களின் ஆசிரியர்கள், நம்மைப் போன்று மனித நிலையில் இருந்து, அவற்றைப் பாடினர் அல்லர். ''எனதுரை தனதுரையாக'' எனத் திருஞான சம்பந்தர் குறிப்பிடுதற்கேற்ப, இவ்வுலகியல் வாழ்விலேயே சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற்றுச் சீவன்முத்தர்களாக விளங்கி, அந்நிலையில் அவர்களால் திருமுறை நூல்கள் அருளிச் செய்யப்பெற்றன. இவ்வுண்மை,

பாலைநெய்தல் பாடியதும்,
பாம்பொழியப் பாடியதும்,
காலனை அன்றேவிக்
கராங்கொண்ட-பாலன்
மரணம் தவிர்த்ததுவும்,
மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்

என வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுளால் உணரப்படும். திருமுறைகளின் இணையற்ற பெருமைகளுக்கு இதுவும் ஒரு பெருங் காரணமாகும்.

இது பற்றியே, சமய உணர்வும் தெளிவுமுடைய தக்கோர்கள் அனைவருக்கும் திருமுறைகளின் பெருமை, நிலத்தினும் பெரியதாய் — வானினும் உயர்ந்ததாய் — நீரினும் ஆரளவிலதாய்த் தோன்றுகின்றது என்பது திண்ணம். பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரம் ஆயிரம் அறிஞர்களும் ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆகிய அனைவரும், திருமுறைகளை ஓதி ஓதியே சிறப்புற் றுயர்ந் துய்ந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

**தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் :**

அணிமைக் காலத்தே பேரருட் பெருஞ் செல்வராகப் பிறங்கியிருந்த அருட்டிரு இராம லிங்க அடிகளார், தேவார திருவாசகத் திருமுறைகளை நாடோறும் தவறாது ஓதியே உயர் நிலை எய்தினர் என்னும் உண்மையினை, அவர்தம் திருமொழிகளாலேயே நாம் செவ்விதின் உணரப் பெறுகின்றோம்.

தேன்படிக்கும் அமுதாம்நின்
திருப்பாட்டைத் தினம்தோறும்
நான் படிக்கும் போது, என்னை
நான் அறியேன்! நா ஒன்றோ?
ஊன்படிக்கும்! உளம்படிக்கும்!
உயிர்படிக்கும்! உயிர்க்குயிரும்
தான்படிக்கும்! அநுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே!

—இராமலிங்கர்.

இவ்வாறே வேதாந்த சித்தாந்த சமரச ஞானப் சான்றோர் ஆகிய தாயுமான அடிகள் திருமுறைகளைப் பலகாற் பயின்று பாராயணம் செய்து, அவைகள் ''மொழிக்கு மொழி தித்திப்பாக'' இருப்பதனை வியந்து பாராட்டி மொழிந்தருள் கின்றார்.

தேவரெலாம் தொழச்சிவந்த
செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி
தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல்
முற்று மோதான்? —தாயுமானவர்.

வாக்கிற் சிறந்த அருணகிரிநாதர், திருமுறை ஆசிரியர்களுள்ளே திருஞான சம்பந்தர் பால் மிகவும் ஈடுபாடும் பக்தியும் வாய்ந்தவராய், அவரை முருகனின் அவதாரம் எனக் கொண்டு பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியிருப்பதுடன், திருஞான சம்பந்தர் போலச் சிறந்த முறைகளில் பாடும் திறமையினைத் தமக்கு அருள்புரிதல் வேண்டும் என முருகனைப் பரவித் தொழுகின்றார்.

புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல,
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே!

இங்ஙனமே சிவஞான முனிவர், குமரகுரு பரர், சிவப்பிரகாசர் முதலிய செந்தமிழ்ச் சைவச் சான்றோர்கள் அனைவரும், திருமுறைகளின்பாற் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு விளங்கியிருந்தனர்.

நம்பியாண்டார் நம்பிகள், திருமுறைகளைப் போற்றித் தொகுத்து உதவியருளினர். சேக்கிழார் சுவாமிகள், தம்முடைய வாழ்நாள் முழுவதும் திருமுறைகளை நுனித்து ஆராய்ந்து திளைத்துக் களித்தார். திருமுறைகள் என்னும் திருப்பாற் கடலைக் கடைந்து, பெரிய புராணம் என்னும் தெய்விக அமிழ்தத்தினைச் செவ்விதின் நமக்குத் திரட்டிக் கொடுத்தவர் அவரே. பட்டினத்தடிகள் ''வித்தகப் பாடல்'' எனத் திருமுறைகளை வியந்து போற்றிக் குறிப்பிடுகின்றார்.

''நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்''

எனச் சிவபெருமான் திருமுறைகளின்பாற் கொண்டுள்ள சிறந்த ஈடுபாட்டினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நன்கெடுத்து மொழிகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கு முன்பே ''திருமுறை எழுதுவோர் வாசிப்போர்'' பெருகியிருந்தனர் என்பதும், அத்தகையவர்களைத் தக்கவாறு பயிற்றிவிடுத்தல் சிறந்த பெருந்தொண்டாகக் கருதப் பெற்றுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பதும், கணநாத நாயனார் வரலாற்றால் அறியப்படுகின்றன.

## மெய்கண்டார் :

'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும்' தன்மை வாய்ந்த நிறைமொழிகள், எனத்திருமுறைகளைத் தொன்னெடுங் கால முதலே தமிழ்ப் பெரு மக்கள் உறுதியாகத் தெளிந்து கொண்டு, பக்தியுடன் ஓதிப் பயின்று வந்துள்ளனர். திருமுறைகளை ஓதி வழிபடுதலின் வாயிலாக, மக்கள் தாம் தாம் விழைந்த பயன்களை விழைந்தவாறே மிகவும் நிரம்பப் பெற்று, மகிழ்ந்து வந்திருக்கின்றனர். ஆசிரியர் மெய்கண்டார் பெருமானின் வரலாறே, இவ்வுண்மைக்குப் போதிய சான்றாகும். நெடுநாள் மகப்பேறு இன்றி வருந்திய அச்சுதகளப்பாளர், அக் குறை தீரற் பொருட்டுத் திருமுறைகளிற் கயிறு சார்த்திப் பார்த்தபொழுது,

பேயடையா, பிரிவெய்தும்;
 பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர்;
 ஐயுறவேண் டாஒன்றும்;
வேயனதோள் உமைபங்கன்
 வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
 தோயாவாம் தீவினையே!

என்னும் திருஞான சம்பந்தர் பாடல் கிடைக்க, அதன்படியே அவர் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குள நீரில் மூழ்கி இறைவனை வழிபட்டு வர, அதன் பயனாகவே, சைவ சித்தாந்தத் தனிப் பெரு ஞாயிறு ஆகிய ஆசிரியர் மெய்கண்டார், அச்சுதகளப்பாளர்க்கு மைந்தராகத் தோன்றியருளினார் என்பது வரலாறு. திருமுறைகளின் பெருமையை உணர்ந்து கொள்வதற்கு இன்னோரன்ன உண்மை வரலாறுகள், உறுபெருஞ் சான்றுகளாகும்.

## திருமுறைச் சொற்றொடர்கள் :

செந்தமிழ்ச் சான்றோர்கள், திருமுறைகளின்பால் எல்லையில்லாத பத்திமை பூண்டு ஒழுகி வந்திருக்கின்றனர். அதனால் திருமுறைகளில் வரும் சொற்கள், சொற்றொடர்கள் தாமும், மிகவும் மதித்துப் போற்றப் பெற்று உள்ளன. தமிழ் நூல் உரையாசிரியர்களுள்ளே மிகவும் தலைசிறந்த ஒருவர் நச்சினார்க்கினியர். அவர் தம் பெயர், ''நச்சுவார்க் கினியர் போலும் நாக ஈச்சரவனாரே'' என்னும் தேவாரப்பாடலை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை இயற்றியவர் அடியார்க்கு நல்லார் என்பவர். ''கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே'' எனவரும் தேவாரத்தை ஒட்டியே அவர்க்கும் அப்பெயர் வழங்கிற்று. கம்பரை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பரின் இளவல் பெயர் இணையார மார்பன் என்பது. அதுதானும் ''இணையார மார்பன் என் எழில் நலம் உண்டு இகழ்வனோ?'' என வரும் தேவாரப் பாடலை ஒட்டியே அமைக்கப் பெற்றது. இன்னனைய செய்திகள் பலவும், திருமுறைகளின் பெருமையினையும், அவற்றில் நம் முன்னோர்கள் கொண்டிருந்த அளவிறந்த பெருமதிப்பினையும், ஈடுபாட்டினையும் உணர்த்தும்.

நிரம்ப அழகிய தேசிகர் என்பவர், சேது புராணம் முதலியன பாடிய சிறந்த புலவர். சிவஞான சித்தியார்க்கு உரை வகுத்த அறுவர்களுள் அவரும் ஒருவர். அவருக்கு அப் பெயர் ''நித்த மணாளர் நிரம்ப அழகியர் சித்தத் திருப்பரால் அன்னே என்னும்'' என்னும் திருவாசகத் தொடரால் அமைந்தது. சைவ சித்தாந்த நூலாசிரியர்களுள் ஒருவராய், ''உண்மை விளக்கம்'' என்னும் நூலினை இயற்றியுதவியருளியவர், மன வாசகங் கடந்தார் என்பவர். அவருக்கும் அப் பெயர் ''எனை நான் என்பதறியேன் பகல் இரவு ஆவதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்தன் ஆக்கினான்'' என்னும் திருவாசகப் பாடலை ஒட்டியே வழங்கப்பெற்றது. இவைகளெல்லாம், நம் முன்னோர்கள் திருமுறைகளில் எத்துணைப் பத்திமை மிக்கு விளங்கியிருந்தனர் என்பதனை, நமக்கு நன்கினிது உணர்த்தும்.

## மண்ணகத்தில் விண்ணகம் :

இங்ஙனமே, திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்களும் தலங்களுமே, சிறப்பும் முதன்மையும் தெய்விகமும் மிக்கனவாகத் தமிழ் மக்களாலும் தமிழ் மன்னர்களாலும் பாராட்டப் பெற்று, மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. திருமுறை ஆசிரியர்கள் தோன்றி நடந்து உலவி வாழ்ந்ததன் பயனாகவே, நம் தென்றமிழ்த் திருநாடானது ''சித்திக்கு வித்தாகிய தென்னாடு'' என அறிவறிந்த மேலோர்களாற் சாலவும் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்றது. திருமுறைகளின் பயனாகவே, உலகில் வேறு எங்கணும் காண்டற்கரிய நிலையில், எண்ணில்லாத பல பெருங் கோயில்கள் கலைநலஞ் சிறந்த நுண்ணிய பல வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, நம் நாடானது''மண்ணகத்தில் விண்ணகம்'' (Paradise on Earth) என்று வியக்கும்படி மாட்சிமை யுற்று வயங்குகின்றது. இம்மட்டோ! தாம் தோன்றிய காலம் முதல் இதுகாறும் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக, எண்ணிறந்த பல கோடிக் கணக்கான தமிழ்

மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தித் தூய்மை செய்து, அவர் தம் வாழ்க்கையினைவளமுறுத்திப் புனிதமாக்கி உயர்வித்து, உய்வித்து வந்துள்ளவை திருமுறை நூல்களே எனின், அத் திருமுறைகளின் பெருமையினை அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ?

## மறுமலர்ச்சி நூல்கள் :

இனி, திருமுறைகளின் பெருமையினை இஞ்ஞான்றை முறையிலும் நாம் ஒரு சிறிது ஆராய்ந்து காண்டல் இயலும். இக்கால மக்கள் சிலர் ''மறுமலர்ச்சி நூல்கள்'' (Renaissance Literature) என ஒரு சில நூல்களைப் பெரிதும் புகழ்ந்து போற்றக் காண்கின்றோம். உண்மையாக ஆராய்ந்தால், சைவத் திருமுறைகள் மறுமலர்ச்சி நூல்கள் எனப் போற்றப்படுதல் மிகவும் தகுதியும் உரிமையும் உடையன எனலாம்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் திருமுறை ஆசிரியர்கள் இந்நிலவுலகில் தோன்றி வாழ்ந்தபொழுது, தமிழ் வேந்தர்களாகிய தென்னர் சேரர் சோழர்களின் ஆட்சி நிலை குலைந்தது. தமிழர் அல்லாத பல்லவர் களப்பிரர் முதலிய வேற்றரசர்களின் ஆட்சி தமிழகத்தில் தலைஎடுத்து நின்றது. அதுபொழுது வடநாட்டில் ஹர்ஷன் என்னும் பேரரசன் (கி.பி. 606—647) ஆண்டு வந்தான். சாளுக்கிய நாட்டில் இரண்டாம் புலிகேசி (கி.பி. 610—642) என்னும் மன்னன் செங்கோல் செலுத்தினன். காஞ்சிபுரத்தில் மகேந்திரவர்ம பல்லவனும் (கி.பி. 600—630), அவனது மகனாகிய நரசிம்ம வர்ம பல்லவனும் (கி.பி. 630—668) அரசோச்சினர். மதுரையில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் (கி.பி. 640—670) அரசுகட்டில் வீற்றிருந்தான். சிறுத்தொண்டர் பம்பாய்க்கு அருகேயுள்ள வாதாபி என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் (கி.பி. 642) இரண்டாம் புலிகேசியை வென்று, அந்நகரை அழித்து அங்கே வெற்றித் தூணை நாட்டினார். அதுபோது வேற்று நாட்டு மக்கள் பலர் தமிழகத்தில் பெருந் திரளாகப் புகுந்து கலந்து, தங்களது பொருந்தாத கொள்கைகள் தீய பழக்க வழக்கச் செயல்கள் முதலியவற்றைத் தமிழ் மக்களிடையே திணித்துப் பரப்பி வந்தார்கள்.

இங்ஙனம் சங்க காலத்திற்குப் பின்னர்த் தமிழ் நாட்டில் நிலவிய இருண்ட காலச் சூழ்நிலைகளால் மங்கி மழுங்கிக் கிடந்த, தமிழ் மொழியும் இலக்கியமும் கவிதையும் கலைகளும் தமிழர் வாழ்வும் ஆகியன எல்லாம், திருமுறைகளால்தான் மீண்டும் பொங்கிப் பொலிவுற்றுச் செழித்துச் சிறந்தன. இவைகளெல்லாம் புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சியும், புதுப்புது வகையான அமைப்புகளும் சிறப்புகளும் பெற்று வளர்தற்குத் திருமுறை ஆசிரியர்களே காரணர்கள் ஆவர். சங்க கால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும், திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும் வடிவால் வேறுபட்டுத் தோன்றுதல் ஒன்றே, கால நிலையின் விளைவாக எழுந்து சாலத் தழைத்துப் பெருகிய திருமுறைகளை, மறுமலர்ச்சி நூல்கள் என வற்புறுத்துதற்குப் போதிய சான்றுபகரும்.

## புதுமை இலக்கியங்கள் :

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பலவகை மாறுதல்களையும், அந் நாட்டு மொழியில் வழங்கும் இலக்கியங்களின் நடை மாறுதல்கள், நன்கினிது விளங்கக் காட்டும் என்பர் அறிஞர். திருமுறை யாசிரியர்கள் மக்களியக்கத் தலைவர்கள். பற்பல ஆயிரம் தொண்டர்கள் சூழ நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர்கள். திருமுறைப் பாடல்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மூலை முடுக்கர்களிலும் சென்று பாடப்பெற்று, மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு பரவிய மக்கள் இலக்கியங்கள்! திருமுறைகளின் சொல் புதிது, பொருள் புதிது, நடை புதிது, சுவை புதிது! சங்க கால நூல்களோடு ஒப்பிட்டு நோக்கின், திருமுறை நூல்கள் பல வகைகளிற் புதுமை மிக்குத் திகழும் புத்திலக்கியங்களே யாகும் என்று செவ்விதில் தெளிந்து கொள்ளலாம். சங்க காலச் செந்தமிழ், திருமுறைகளின் காலத்தில் 'தெய்வச் செந்தமிழ்' எனப் புதுமைப் பொலிவு நலம் எய்தியது எனலாம். சங்க கால இலக்கியங்களிற் காண முடியாத இசை நலஞ் சான்ற அரிய இனிய அழகிய செந்தமிழ்ச் செய்யுள் வகைகளை, நாம் முதன் முதலாகத் திருமுறைகளிலேயே காணப்பெறுகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவிராகம் | 9. | திருவெழுகூற்றிருக்கை |
| 2. | வழிமொழித் திருவிராகம் | 10. | சக்கரமாற்று |
| 3. | திருஇருக்குக்குறள் | 11. | சந்த இயமகம் |
| 4. | மொழிமாற்று | 12. | கூடசதுக்கம் |
| 5. | மாலைமாற்று | 13. | திருநேரிசை |
| 6. | திருத்தாளச் சதி | 14. | திருக்குறுந்தொகை |
| 7. | யாழ்மூரி | 15. | திருத்தாண்டகம் |
| 8. | ஏகபாதம் | | |

என்பன போலும் பலதிற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப் பாடல்கள், முதன் முதலாகத் திருமுறை நூல்களில்தான் காணப்படுகின்றன. எனவே, திருமுறைகளை நாம் புதுமை இலக்கியங்கள் அல்லது மறுமலர்ச்சி இலக்கியங்கள் எனச் சிறப்பித்துக் கூறுதல் பெரிதும் பொருந்துவதேயாகும்!

(தொடரும்)

—ஆசிரியர்.

# "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்தான்"*

"ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர்இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்,
தரிக்கிலான் ஆகித்தான் தீங்கு நினைந்த,
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்,
நெருப்புஎன்ன நின்ற நெடுமாலே, உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி ஆகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"
—திருப்பாவை, 25

வேதம் அனைத்துக்கும் வித்தாகும் வண்ணம், கோதை என்னும் ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவையின்கண் வரும் அழகிய இனிய சிறந்த பாசுரங்களுள் ஒன்றாகிய, இத் திருப்பாடலின் ஒரு சில பொருள் நலங்களை மட்டும், இங்கு இயன்றவரை முயன்று கண்டு மகிழ்வோம்.

**சொற்பொருள் நயங்கள்:**

(1) தசரதச் சக்கரவர்த்தி ஆகிய ஒருவன் சாதன அனுட்டானங்களைப் பண்ணி, மாணிக்கம் போல நாலு பிள்ளைகளைப் பெற்றான். வசுதேவர் தேவகி நந்தகோபர் யசோதை என்னும் நால்வரும் சேர்ந்து தவம் புரிந்து, கண்ணபிரானாகிய ஒரு மகனைப் பெற்றெடுத்தனர். எல்லா உலகங்களுக்கும் நியாமகன் ஆனவனையும் கூட நியமிக்கும் அவளாய், நாட்டில் தனக்கு ஒப்பற்று இருப்பவள் தேவகி. ஆதலின், அவள் "ஒருத்தி" எனச் சிறப்பிக்கப் பெற்றனள்.

(2) அனைத்துலகங்களுக்கும் தந்தையாக இருப்பவன், ஒருத்திக்குப் புதல்வன் ஆவதே என்ற வியப்பை 'மகன்' எனும் சொல் புலப்படுத்துகின்றது. தாய் தந்தையர் ஏவியதைச் செய்வது புதல்வர்க்குக் கடமை. அம் முறையில் தேவகியின் குறிப்பறிந்து தன்னுடைய நான்கு கைகளை இரண்டாகக் குறைத்தும், அவற்றில் பற்றியிருந்த சங்கு சக்கரங்களை மறைத்தும், எளிய குழந்தை போல விளங்கிய சிறப்பையும், 'மகன்' என்ற சொல் உணர்த்துகின்றது.

(3) சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன் பாலப் பருவத்தனாய்ப் பக்குவனான பின்னரே, தந்தையின் கட்டளையைக் கடைப்பிடித்து நின்றான். ஆனால், கண்ணபிரானோ, பிறந்த அளவிலேயே, சங்கு சக்கரங்களையும் தோள்களையும் மறைத்துத் தாயின் கருத்தை நிறைவேற்றினான். இவ்வருமைப் பாட்டினைப் 'பிறந்து' என்னும் சொல் குறிக்கின்றது. வினை வயத்தால் உயிர்கள் படுவனவற்றை யெல்லாம், அருள் வயத்தால் கண்ணபிரான் பட்டான் என்றபடி. ஏனைய மனிதர்களைப் போலப் பத்து மாதம் அல்லாமல், அவன் பன்னிரண்டு மாதம் வயிற்றிலே இருந்து, கருணையால் பிறந்தான் என்பதும் உணர்த்தியவாறு!

(4) காலதத்துவம் கடந்த அவன் காலத்துக்கு உட்பட்டுப் பிறந்தருளினான். அவன் பிறந்தருளிய அவ்விரவை ஒக்கும் இரவு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. ஆதலின் 'ஓர் இரவு' என்றார்.

(5) தேவகி இவனை மகவாகப் பெற வேண்டும் என்று ஆச்ரயித்தாள். ஆதலின் அவளுக்கு அவதார ரஸத்தைக்கொடுத்தான்; யசோதைக்கு லீலா ரஸத்தை அநுபவிப்பித்தான். ஓர் அவதாரத்திலேயே யாதவ சஜாதியனுமாய்க் கோப ஜாதியனும் ஆனான். தேவகியின்பாற் பிறந்து பிறப்பில் புரையில்லாமை போலவே, யசோதையின்பால் வளர்ந்த இடத்தினும் புரையற்று இருந்தான். இதனை 'ஒருத்தி மகனாய் வளர்ந்தான்' என்பது உணர்த்திற்று.

(6) கம்சனுடைய தீய விஷப் பார்வை படாதபடி 'ஒளித்து வளர்ந்து' நாட்டார் செய்வன செய்யப் பெறாமல், கள்ளர் பட்டது தான் பட்டான்.

(7) "அத்தத்தின் பத்தாம் நாள்" என்ற பெரியாழ்வார் மகள் ஆனதனால், தேவகி யசோதை என்று பேர் சொல்லாமல் 'ஒருத்தி' என்று குறிப்பாற் கூறியபடி.

(8) பெற்றெடுத்த தேவகியைக் காட்டிலும், வளர்த்துப் போற்றிய யசோதை சிறப்புடையவள் ஆயினாள். எங்ஙனமெனில், முதலில் கோயில் கட்டியவர்களைக் காட்டிலும், பின்னர் அது பழுதுற்றபோது திருப்பணி செய்து போற்றிப் பாதுகாப்பவரே, சிறப்பும் புண்ணியமும் உடையவராவர், அதுபோல என்பது.

"திருப்ரதிஷ்டை பண்ணினவர்களிலுங் காட்டில்
ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களே முக்யர்"

### கண்ணபிரான் வரலாறு :

இப்பாடலில், கண்ணபிரான் இரவில் பிறந்ததும் கம்சனின் பொருட்டு ஒளித்து வளர்ந்ததுமாகிய செய்திகள், சிறப்பாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன. எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருஅவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது.

கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் ஒப்புமை உடையதாக விளங்குகின்றது. (1) இருவரும் இரவிலேயே பிறந்தனர். (2) கண்ணன், கம்சன் பொருட்டு ஒளித்து வளர்ந்தான். இயேசுநாதர் ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைந்து வளர்க்கப் பெற்றார். (3) கம்சனைப் போலவே ஏரோது அரசனும் தன் உயிர்ப்பாதுகாப்பின்பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். (4) கம்சனுக்குக் கண்ணபிரான் அவதாரம் பற்றிய அறிவிப்பு முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப்பெற்றது. (5) கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்தில் பிறந்தார். (6) இயேசுநாதரை 'நல்ல மேய்ப்பன்' (Good Shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரான் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாக விளங்கினான். (7) இயேசு மலைச் சொற்பொழிவு (Sermon on the Mount) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருக்கேத்திரத்தில் தேர்த் தட்டில் கீதை உபதேசம் புரிந்தார். இத்தகைய பல ஒப்புமைகள் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.

### முடிவுரை :

இங்ஙனம், அரிய பெரிய பொருள் நலங்கள் இனிது செறிந்து அமைந்த, இதுபோன்ற அற்புதப் பாடல்கள் பற்பலவற்றைக் கொண்டு விளங்கும் திருப்பாவை ஆகிய, சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே முறையாக ஓதி, நாம் அனைவரும், செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால், இம்மை மறுமையாகிய எங்கும் திருவருள் பெற்று, இன்புற்று உய்ய முயல்வோமாக!

*பழநியில், அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயிலில், நமது ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் தலைமையில் நடைபெற்ற "பாவை விழா"விற் கலந்து கொண்டு, ஆசிரியர் நிகழ்த்திய உரையினைத் தழுவியது. (1—2—78).

---

"The birth stories of Buddha, Krishna and Jesus have certain striking resemblances suggestive of mutual borrowing.

The similarities in the teaching of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study.

The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion...."

—Dr. S. RADHAKRISHNAN.

—ஆசிரியர்.

---


The following particulars are furnished regarding the OWNERSHIP of **"THIRUKKOIL"** the monthly newspaper published as called for, by **Rule 8** of the Registration of Newspapers (Central) **Rules 1956.**

**FORM IV**

(*See* Rule 8)

| | |
|---|---|
| 1. *Place of Publication* .. .. .. | 21-B, Nungambakkam High Road, Madras-600 034. |
| 2. *Periodicity of Publication* .. .. .. | Monthly. |
| 3. *Printer's Name* .. .. .. .. | **Thiru M. N. Shanmugam,** L.P.T., Asst. Works Manager. |
| *Nationality* .. .. .. .. | Indian. |
| *Address* .. .. .. .. | Tamil Arasu Press, Govt. Estate, Madras-600 002. |
| 4. *Publisher's Name* .. .. .. .. | **Thiru M. K. Balasubramaniam,** I.A.S., |
| *Nationality* .. .. .. .. | Indian. |
| *Address* .. .. .. .. | H.R. & C.E. (Admn.) Department, Madras-600 034. |
| 5. *Editor's Name* .. .. .. .. | **Thiru N. R. Murugavell,** M.A., M.O.L. H.R. & C.E. (Admn.) Department. |
| *Address* .. .. .. .. | 21-B, Nungambakkam High Road, Madras-600 034. |
| *Nationality* .. .. .. .. | Indian. |
| 6. *Name and Address of the individuals who own the Newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.* | **Thiru M. K. Balasubramaniam,** I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras-600 034. |

I, **M. K. Balasubramaniam,** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Sd.* **M. K. BALASUBRMANIAM**
*Publisher*

*Dated* : 17—2—1978.

## மாறன் அடிபணிந்து உய்ந்த

# இராமாநுசர்*

திரு. A. R. பார்த்தசாரதி நாயுடு அவர்கள்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இப்பிங்கள ஆண்டு மிகப் புனிதமானது ! நமது காரேய் கருணை இராமாநுசர் இக்கடல் இடத்தில் அவதரித்து 961 ஆண்டுகள் நிறைவு பெறும் இப்பிங்கள ஆண்டில், ஸ்ரீ வைணவ உலகெங்கும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

அறுசமயம் வெல்லும் பரமர் நம் இராமாநுசர் இந்நிலவுலகில் வந்து அவதரித்தருளிய மையால்,

''நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன நாரணனைக் காட்டியவேதம் களிப்புற் றது! தென் குருகைவள்ளல் வாட்ட மிலாவண் தமிழ்மறை வாழ்ந்தது! மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமா நுசன்தன் இயல்வுகண்டே''

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டது எதனுல்? நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றதும் எதனுல்? ஈட்டிய சீலத்து நம் இராமாநுசரால் தென்குருகை வள்ளலான நம் மாழ்வாரின் வாட்டமிலா வண்தமிழ் மறை உலகில் வாழ்ந்ததே காரணம்!

எனவே, திருவரங்கத்து அமுதனர் பணித்தருள் கின்றுர்!

நெஞ்சே! இராமாநுசரின் திருநாமங்களைச் சொல்லுவோமாக! பல புலமை உடையவரும் தம் புலமைகளை வெறுத்துத் தள்ளி, நம் இராமாநுசரையல்லவா பற்றுகின்றனர்! நம் இராமாநுசரும் சாரமற்றவை எனப் பலவற்றையும் தள்ளி, நம்மாழ்வாரின் திருவடிகளை யல்லவா உச்சி மேற்கொள்ளுகின்றுர்! அதற்குக் காரணம், நம்மாழ்வாரும் தமது திருவாய்மொழி முதலான அருளிச் செயல்களின் மூலம் பூமன்னு மாது பொருந்திய மார்பனின் அளவற்ற புகழைப் பரப்புவதால்தானே!

பூமன்னு மாது பொருந்திய
மார்பன்! புகழ்மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந்து
உய்ந்தவன், பல்கலையோர்
தாம்மன்ன வந்த இராமா
நுசன்சர ணரவிந்தம்
நாம்மன்னி வாழநெஞ் சே! சொல்லு
வோம் அவன் நாமங்களே!

நம்மாழ்வாரின் திருவாய் மொழிதான் இராமாநுசருக்குக் கிடைத்த பெரு நிதி ; தந்தை! தாய்! ஆசாரியன்! ஏன், திருமகள் கேள்வனன திருமாலுங் கூடத்தான்! நாடும் நகரமும் நன்கறிய இப்படித் திகழும் இராமாநுசர் எனக்குத் தெவிட்டாத அமுதமே!

உறுபெருஞ் செல்வமும், தந்தையும்
தாயும், உயர்குருவும்,
வெறிதரு பூமகள் நாதனும்,
மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழ் ஆரண மே!
என்றுஇந் நீள்நிலத்தோர்
அறிதர நின்ற இராமா நுசன்
எனக்கு ஆரமுதே!

இவ்விதமாக இராமாநுசரால் போற்றப்படும் திருவாய் மொழியின் ஏற்றந்தான் என்ன? இத்தமிழ் வேதமான திருவாய்மொழி நமக்கு அர்த்த பஞ்சக ஞானம் அளிப்பதுதான் காரணம்.

மிக்க இறைநிலையும் (1) மெய்யாம் உயிர்நிலையும்(2)
தக்க நெறியும்(3) தடையாகித்-தொக்கியலும்
ஊழ்வினையும்(4) வாழ்வினையும்(5) ஓதும் குருகை
யர்கோன்
யாழின் இசை வேதத்து இயல்!

திருவரங்கத்து அமுதனர் தமது இராமாநுச நூற்றந்தாதி மூலமாக ; ஸ்ரீ வைணவ தரிசனத்தின் அடிப்படையான அர்த்த பஞ்சக ஞான அமுதத்தை, பராங்குச பரகால தரிசன அமுதை, எம்பெருமானர் தரிசன அமுதாகவே அளித்தருள்கிறுர்!

### 1. மிக்க இறை நிலை :

இறைவனின் நிலை யாது? இரட்சகத் தன்மையே. அதாவது காப்பாற்றியருளலே. நாம், மோட்சம் கிடைக்குமென்றுல் மகிழ்ச்சியும், நரகந்தான் முடிவு என்றுல் துக்கமும் அடைகிறோம். இதற்குக் காரணம், ''நம் முயற்சியால் நாம் வாழவேண்டும்! விரும்பும் பலன்களை அடைய வேண்டும்!'' என்று எண்ணுவதால்தான்.

''ஆசாரிய கடாட்சத்தினுல்தான் நாம் வாழ்கிறோம்!'' என்ற திட நம்பிக்கையும், மனப்பணிவும் ஏற்பட்டுவிட்டால், மோட்சமும், நரகமும் நம் உணர்ச்சிகளைப் பாதிக்கமாட்டா!

இராமாநுசரான ஆசாரியர் தம் கடாட்சத்தினுல் செய்வது :

''அசித்தால் ஆன, அநாதிகாலமாக உள்ள இந்த உலகத்தில் பொருந்தி வாழ்கின்ற எல்லா ஆன்மாக்களுக்கும் ரட்சகனுனவன்—காப்பாற்றும் நிலையில் உள்ளவன்—ஆச்சரியமான குணங்களை உடைய திருமால்தான்!'' என்று போதித்தருள்கிறுர்!

இன்பந் தருபெரு வீடுவந்து
எய்தில்என்! எண்ணிறந்த
துன்பந் தருநிர யம்பல
சூழில்என்? தொல்லுலகில்
மன்னுபல் உயிர்கட்கு இறையவன்
மாயன்! எனமொழிந்த
அன்பன், அனகன், இராமா
நுசனைப் பொருந்தினமே!

ஆசாரியரான இராமாநுசரது கடாட்சம் ஏற்பட்டுவிட்டதா? இனி அவரே நம்மை ரட்சிப்பார்! நம்முடைய சுயநல அபிமானத்தைக் கண்டு வெறுப்படைந்த இறைவனின் கடாட்சமே குலைந்தாலும் சரி! ஆசாரியக் கடாட்சமே நம்மை உய்விக்கும்!

''ஸ்வ அபிமானத்தாலே ஈச்வர அபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசாரிய அபிமானம் ஒழியக் கதியில்லை!'' என்று (வலிக்குத் திருவீதிப்)பிள்ளை பலகாலும் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாய் இருக்கும்!

—ஸ்ரீவசன பூஷணம் 446

ஆகவே, இறைவனின் நிலையும், ஆசாரியனின் நிலையும், ரட்சகத்துவமே!

ஆன்மாக்களை இறைவன் ஏன் ரட்சிக்க வேணும்? இது அவனது கடமையா?

ஆம்! இது அவன் கடமையே! உயிர் உடலை ரட்சிப்பது போல, உயிர் உடலுக்கு உற்ற துன்பத்தை விலக்குவது போல, இறைவன் ஆன்மாக்களை ரட்சிக்க வேணும்! இறைவன் ஆன்மாக்களுக்கு உற்ற துன்பத்தை விலக்கியருள வேணும்! இதற்குக் காரணம், ஆன்மாக்களைத் தன் உடலாகக் கொண்டு இறைவன் உயிராய் விளங்குவதே!

உயிர் வேறு, உடல் வேறு ஆனாலும், உடலில் உயிர் பொருந்தி ஒன்றாய்க் காணப்படுகிறது! உடலும் உயிரோடு ஒட்டியுள்ளது!

உலகம் சித், அசித்தாலானது. இந்த உலகம் இறைவனது உடல்; அவன் இவ்வுலகத்தின் உயிர். இந்த சரீர சரீரி சம்பந்தத்தைச் சிறப்பித்துக் காட்டியவர் நம் இராமாநுசரே!

அத்துவைத—துவைத மதங்களின் கருத்துகளை இணைத்து விசிட்டாத்வைத மதத்தின் மேன்மையை வெளியிட்டவர் நம் இராமாநுசரே!

இது ஓர் அற்புதந்தானே! அஞ்ஞானத்தால் ஏற்பட்ட இக்கலக்கத்தை விலக்கி, செம்மைப்படுத்தியது அற்புதந்தானே! இந்த ஞானத்தை நமக்கு அளித்தல்லவா நம்மை ஆட்கொண்டருளினர், மெய்ம் மதிக் கடலான நம் இராமாநுசர்!

அற்புதன்! செம்மை இராமாநு சன்!
என்னை ஆளவந்த
கற்பகம்! கற்றவர் காமுறு
சீலன்! கருதஅரிய
பற்பல உயிர்களும், பல்உலகு
யாவும் பரனது என்னும்
நற்பொருள் தன்னை, இந் நானிலத் தே
வந்து நாட்டினனே!

## 2. மெய்யான உயிர் நிலை :

**இறைவனின் குணம் : ரட்சகத்துவம்—காப்பாற்றுகை**

**ஆன்மாவின் குணம் : சேஷத்துவம்—அதாவது காப்பாற்றும் இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தல்.**

அரங்கனாகிய இறைவனது மலர் அடிக்கு ஆள் உற்றவராக இருந்து வாழ்தல்தான் உயிர்களின் குணம்.

ஞானமும், ஆனந்தமும் ஆத்மாவின்குணங்களாக மேலெழுந்த வாரியாகத் தோன்றும். ஆயினும், ''வடவேங்கடமலை கோயில் கொண்டதனோடும், மீமிசை அண்டமாண்டிருப்பாற்கு அடிமைத் தொழில் பூண்டாயே'' என இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தலே, ஆத்மாவின் தேர்ந்த குணமாகும்.

உடலில் உள்ள ஆத்மா, அடிமைத்தொழில் பூண்டது. இதனையே 'அடியேன் உள்ளான் உடலுள்ளான்' எனத் திருவுள்ளம் பற்றினர் திருவாய்மொழியில் (88.2) நம்மாழ்வார். திருகோட்டியூர் நம்பி திருவடிகளிலே கூரத்தாழ்வான் ஆறு மாதங்கள் சேவித்து நின்று மகா நிதியாகப் பெற்ற அர்த்தம் இது!

'அஹம்' (ஆத்மா) அர்த்தத்துக்கு ஞானாநந்தங்கள் தடஸ்தம் (வெளித்தோற்றம்) ; தாஸ்யமிறே (அடிமை பூண்டிருத்தலே) அந்தரங்க நிருபகம் (உட்பொருள்) :

—ஸ்ரீவசன பூஷணம், 74.

இவ்விதமான ஆன்ம லட்சணத்துடன் வாழ்பவர்களே மதிக்கத் தக்கவர்கள். நம்மால் விரும்பி அடையத் தக்கவர்களுங் கூட! இப்படியாக வாழ்ந்தருளிய ஆழ்வார் — ஆசார்யர்களான பெரியோர்களையே ஆன்ம உறவினர்களாகத் துணைக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் நம் இராமாநுசர்.

இறைவனுக்கு அடிமைப்பட்டு இருத்தலாகிய சேஷத்துவ ஞானத்தைப் பெற்ற பிறகு, வேறு ஒரு அஞ்ஞானம் நமது மதிப்பிற்கு இலக்காகுமா?

மற்றொரு பேறு மதியாது,
அரங்கன்மலர் அடிக்குஆள்
உற்றவ ரேதனக்கு உற்றவ ராக்
கொள்ளும் உத்தமனை,
நற்றவர் போற்றும் இராமா
நுசனை இந் நானிலத்தே
பெற்றனன்; பெற்றபின் மற்று
அறி யேன் ஒரு பேதைமையே!

காப்பாற்றுகின்ற இறைவன் வேறு ; அவனால் காக்கப்படுகின்ற ஆன்மா வேறு ; ஆட்சி

செய்கின்ற இறைவன் வேறு ; அடிமை செய்கின்ற (அடிமை பூண்ட) ஆன்மா வேறு ; இவை இரண்டும் தனித்த தன்மை உடையவை. ஒன்றில் ஒன்று கலந்து விடாது!

இதற்கு மாறுக, ''ஆன்மா இறைவனிடம் இரண்டறக் கலந்து விடுகிறது. ஜீவான்மாக்கள் எல்லாம் பரப்பிரம்மத்தின் ஓர் பகுதிதான். பிரிவு ஒரு பொய்த் தோற்றமே. இப்பொய்த் தோற்றம் மறைந்தால் ஜீவனும், பிரம்மமும் ஒன்ருவதைக் காணலாம்!'' என்றெல்லாம் வேதப் பொருளைத் தவருகவும் திரித்தும் கூறுவது பேதைமைதான்!

''தத் த்வமஸி'' என்றும் ''ப்ரஹ்ம வேதப் ரஹ்மைவ பவதி'' என்றும் வேத வாக்கியங்களை இப்படியாக அர்த்தம் செய்வது தவறு.

இந்த வினைகளை எல்லாம் (தவருன கருத்துக்களை எல்லாம்) தம் முடைய தர்க்க ஞானத்திஞல் வாதத்தில் வென்றவர் நம் இராமாநுசர்.

சித், அசித் ஈஸ்வரன் என்ற மூன்றும் மூலங்கள். இவை மூன்றும் சத்தியமும், நித்தியமுமாகும். சித், அசித் என்பவை ஈஸ்வரனுக்குச் சரீரங்கள். எம்பெருமான் திருவருளால் நம் வினைகள் ஒழிந்து பரமபதத்தில் குற்றேவல் புரிவதும் பல்லாண்டு பாடுவதுமே மோட்ச நிலை. இதைத் தமது வாதத் திறமையினுல் நிலை நாட்டி வெற்றி பெற்ருர் இராமாநுசர்.

பேதையர், ''வேதப் பொருள்இது!'' என்று
உன்னி, ''பிரமம் நன்று'' என்று
ஓதி; ''மற்று எல்லா உயிரும் அஃது!'' என்று
''உயிர்கள் மெய்விட்டு
ஆதிப் பரனேடு ஒன் ரும்!'' என்று சொல்லும் அவ்
அல்லல் எல்லாம்
வாதில்வென் ருன்! எம் இராமா நுசன் மெய்ம்
மதிக்கடலே!

### 3. தக்க நெறி :

''சர்வதர்மாந் பரித்யஜ்ய; மாமேகம், சரணம், வ்ரஜ!''

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

என்ற ஆறு பதங்களைக் கொண்ட சரம சுலோகத்தாலே, நாம் கடைப்பிடிக்கத் தக்க நெறியை, கீதையில் போதித்தவன் பஞ்சபாண்டவர்களின் பிரதிநிதியான, அர்ச்சுனனுடைய தேர்த்தட்டில் எழுந்தருளிய கண்ணன்.

தன்னையே சரணுகப் பற்ற வேண்டுமென்று, நமக்கெல்லாம் காட்டித்தந்தான் கண்ணன், அர்ச்சுனன் மூலமாக.

''கையும், உழவு கோலும், பிடித்த சிறு வாய்க் கயிறும், சேனு தூளி தூசரிதமான திருக் குழலும், தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற சாரத்திய வேஷத்தை ''மாம்! என்று காட்டுகிருன்! —முமுட்சுப்படி, 218.

இறைவன், கீதையில் உபதேசித்தருளிய —நாம் அடையத் தக்க நெறியை, எளிதில் நாம் புரிந்து கொள்ளும் வகையில் இராமாநுசர் கீதாபாஷ்யம் அளிருச் செய்தார். கீதையின் செம்மைப் பொருளை நமக்கு உபதேசித்து அருளிய இராமாநுசர் பரமகருணைக்குத் தோற்று அவரையும், அவரைப் பணியும் நல்லோர்களையும் பணிகின்றன ''எனது ஆவியோடு சிந்தையும்!'' என்று அகம் கரைகிருர்—உயிர் உருகுகின்ருர். திருவரங்கத்து அமுதனர்!

ஆர் எனக்கு நிகர் சொல்லில்?
மாயவன் அன்று ஐவர் தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின்
செம்மைப் பொருள்தெரியப்
பாரினில் சொன்ன இராமா
நுசனைப் பணியும் நல்லோர்
சீரினில் சென்று பணிந்தது! என்
ஆவியும் சிந்தையுமே!

—(தொடரும்)

[சென்னையில் 24—12—77 அன்று நடைபெற்ற 52-ஆம் ஸ்ரீவைணவ மாநாட்டின் தலைமையுரை.] —ஆசிரியர்.

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,

**மருதமலை—கோவை-641041.**

**பக்தர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு !**

**பாரம்பர்யப் பூசைக் கட்டளை துவங்கப்பட்டுள்ளது !**

பாரம்பர்யமாகத் தொடர்ந்து மருதமலை ஆண்டவரது திருவருள் கிடைத்து வரப் பாரம்பர்யக் கட்டளைதாரர்கள்ஆக, பிறந்த நாளன்ருே அல்லது கடை திறப்பு நாளன்ருே, அல்லது கட்டளைதாரர்கள் விரும்பும் வேறு எந்த நாட்களிலோ, மருதமலை ஆண்டவருக்குப் பூசை அபிடேக ஆராதனை நைவேத்தியம் செய்யவும், நேரில் ஆராதனையைத் தரிசனம் செய்யவும், அல்லது தபால் மூலம் திருவருட் பிரசாதம் பெறவும், ஆங்கிலத் தேதி, மாதம், நட்சத்திரம் முதலிய விபரங்களுடன் ரூ. 1,000 (ஒரு ஆயிரம் மட்டும்), வைப்பு நிதியாக அமைக்க, இத்திருக்கோயிலின் பெயருக்கு அனுப்பி வைக்குமாறு, அன்பர்கள் வேண்டப்படுகின்றனர்.

விரும்பும் அன்பர்கள், இத்திருக்கோயிலின் பெயருக்கு ரொக்கமாகவும், காசோலை மூலமும் பணம் செலுத்தி வைப்புநிதி ஏற்படுத்தி, இந்தப் பாரம்பர்ய பூசைக் கட்டளைதாரர்களாக ஆகலாம்!.

மற்ற விபரங்களுக்கு, அன்பர்கள் இத்திருக்கோயிலின் செயல் அலுவலருடன் தொடர்பு கொள்ள வேண்டிக் கொள்ளப் பெறுகின்றனர்.

**எஸ். பட்டாபிராமன்**
செயல் அலுவலர்

# வடமலையப்பப் பிள்ளையன்

''அருண்மொழியரசு''

திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன் கிழக்கிந்தியக் கம்பெனியர்களாகிய ஆங்கிலேயர்களின் படை வன்மையாலும், சூழ்ச்சியாலும் தென்னாடு அவர்கள் வசப்பட்டு இருந்தது. அக்காலத்தில் அவர்களுடைய அலுவலராக வடமலையப்பப் பிள்ளையன் என்பவர் இருந்தார். அவர் நெல்லை மாவட்ட மன்னவராகப் பெருமிதத்துடன் விளங்கினார்.

இவர் கார்காத்த வேளாள மரபினர்; பெரும் புலவர். தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் தயாள சிந்தையுடையவர். மச்சபுராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர் என்றும் கூறுவர். செந்தில் மேவிய கந்த நாயகனைத் தமது குலதெய்வமாகக் கொண்டவர். இனிய பண்புகளை உடையவர். அடிக்கடி திருச்செந்தூர் சென்று, அமரர் போற்றும் குமரக் கடவுளை, மன மொழி மெய்களால் வழிபடுவார். ''முருகா முருகா'' என்று கூறி உருகா நிற்பர்.

அக்காலத்தில் தமிழ்நாடு, தக்க பேரரசர்களின்றி, பற்பல குறுநில மன்னர்களால், அச்சமும் குழப்பமும் மிகுந்து, அமைதியின்றி இருந்தது. அப்பொழுது உலாந்தாக்காரர்கள் என்று வழங்கப்படும் டச்சுக்காரர்கள் கூட்டங் கூட்டமாக வந்து, துறைமுகங்களில் உள்ள ஊர்களில் கொள்ளையிட்டும், கடல் வழிச் செல்லும் மரக்கல மக்களுக்கு இடர் விளைவித்தும், கடற்கரையில் அமைந்துள்ள திருக்கோயில்களில் நுழைந்து மூலபண்டாரங்களையும், விக்கிரகங்களையும் கொள்ளையிட்டும் வந்தார்கள்.

ஒரு முறை இந்தக் கொள்ளைக் குழுவினர் திருச்செந்தூரில் இறங்கி ஊருக்குள் சென்று, ஊர் நடுவே அமைந்திருக்கும் சிவக்கொழுந்தீச்சுரர் கோயிலில் கொள்ளையிட்டனர். அக்கோயிலின் முன்மண்டபத்தின் தூண்களில் மிக்க அழகுடன் அமைந்த கல் திருவுருவங்களின், கை, கால், மூக்கு முதலிய உறுப்புக்களையும் உடைத்தனர். பின்னர் கடற்கரையில் விளங்கும் முருகன் திருக்கோயிலில் நுழைந்து அங்குள்ள பொருள்களையும் கொள்ளையிட்டனர். மூலத்தான சிலாமூர்த்தியையும் உடைத்தனர்.

பின்னர் ஆறுமுகப் பெருமானது செப்புத் திருவுருவம் அவர்களது உள்ளத்தை உருக்கியபடியால், அவ்வுருவத்திற்குத் தீங்கு செய்யாமல் தங்கள் மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும் பெரும்புயலும், மழையும், இடியும், மின்னலும் தோன்றிக் கடல் கொந்தளிப்புற்றது. அதனால் மரக்கலம் தத்தளித்தது. டச்சுக்காரர் மதி கலங்கி நங்கூர மிட்டனர். அதனாலும் மரக்கலம் அமைதி பெறவில்லை. கடுங்காற்று வீசியது. மரக்கலத் தலைவன் மனம் கலங்கினான்.

திருச்செந்தூர்க் கோயிலில் நாம் எடுத்த ஆறுமுக விக்கிரகத்தின் மகிமையால் இந்த இடர் எய்தியதோ என்று கருதினான். தன்னுடைய ஏவலரை அழைத்து ''அந்த விக்கிரகத்தை எடுத்துக் கடலில் இடுக'' என்று ஆணையிட்டான். அவ்வாறு செய்தும் புயலின் கொடுமை குறையவில்லை. மரக்கலம் கடலின் கொந்தளிப்பால் தவித்தவாறே இருந்தது. மரக்கலத் தலைவன் மேலும் மருட்சியுற்று அந்த விக்கிரகத்தைக் கடலில் எறிந்தும் இடர் நீங்கவில்லையே என்று வருந்தி மரக்கலத்தின் அடித்தட்டில் வந்து பார்த்தான். அங்கு ஆறுமுக விக்கிரகம் இருக்கக் கண்டான். வேலையாளை நோக்கிச் சினந்து, ''மூடனே! நீ கடலில் திருநள்ளாற்றிலிருந்த நொண்டி விக்கிரகத்தையா எறிந்தனை? நான் இந்த ஆறுமுக விக்கிரகத்தை யல்லவா எறியச் சொன்னேன். நீ எறிந்த விக்கிரகம் நாம் திருநள்ளாற்றில் கொள்ளையடித்த நொண்டி (நடராஜ) விக்கிரகம் ஆயிற்றே. தாமதிக்காமல் இந்த விக்கிரகத்தை எடுத்துப்போடு'' என்று கட்டளையிட்டான். அவ்வாறு ஆறுமுகப் பெருமானைக் கடலில் இட்டவுடன், கடல் கொந்தளிப்பு நின்றது. டச்சுக்காரர் மரக்கலத்தைச் செலுத்திக் கொண்டு சென்று விட்டார்கள்.

இச்செய்தியை, பிரான்ஸ் நாட்டுப்புலவர் எம். ரென்னல் என்பவர், ஜெர்மனி தலைநகர் பெர்லின் நகரத்தில், ஆயிரத்து எழுநூற்று எண்பத்தைந்தாம் ஆண்டில் (1785), தான் ஒரு டச்சு மாலுமியிடம் தெரிந்துகொண்ட ஒரு உண்மை நிகழ்ச்சியென்று வெளியிட்டிருக்கின்றார். இந்த நிகழ்ச்சி 1648-ல் நிகழ்ந்ததென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

திருச்செந்தூரிலுள்ள அடியார்களும், திரிசுதந்தரான் என்ற முக்காணியர்களும், கோயில் பூசிக்கும் போற்றிகளும், மூலத்திருவுருவம் உடைபட்டும், ஆறுமுகத் திருவுருவம் கொள்ளைக்காரரால் கவரப்பட்டும், திருவாபரணம் மூலபண்டாரங்கள் முதலியவைகள் சூறையாடப்பட்டும், இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்கள்; மனம் பதறினர்கள்; முருகா முருகா என்று கதறினர்கள். ஊணும் உறக்கமும் துறந்து, குடும்பங்களையும் மறந்து, திருநெல்வேலிக்குச் சென்று அங்குப் பெருமிதமாக வீற்றிருக்கும் வடமலையப்பப் பிள்ளையன் அவர்களிடம் கூறி முறையிட்டார்கள்.

வடமலையப்பன் கேட்டு உள்ளம் வருந்தினர். கண்ணீர் வடித்தார். தமது குல தெய்வமாகிய திருச்செந்தூர் முருகப் பெருமானுடைய திருக்கோயிலின் மூலத்தானத் திருவுருவம் சிலையினலும், ஆறுமுகப்பெருமான் திருவுருவம் செம்பினலும் உடனே செய்வதற்கு ஏற்பாடு செய்தார். சிற்ப வல்லுநர்களை அழைத்து, கல் எங்கே இருந்து எடுக்கலாம் என்று உசாவினர். சிற்பக் கலைஞர் பொருநையாற்றின் (தாம்பிரபரணி) நடுவே உள்ள கல் சிறந்ததென்று கூறினர்கள்.

வடமலையப்பன் அவர்களின் தாயாரை, எல்லோரும் 'ஆச்சி' என்று மரியாதையாக அழைப்பர். அவ்வம்மையார் நாள்தோறும் பொருநையாற்றில் நீராடி நதியின் நடுவிலுள்ள ஒரு பாறையில் இருந்து சிவபூசை செய்வது வழக்கம். அதனல் அப்பாறையை ஆச்சிப் பாறை என்று கூறுவர். சிற்பக் கலைஞர் கூறுவதை அறிந்த அம்மையார், புதல்வரை நோக்கி நதியின் நடுவில் நாள்தோறும் தான் சிவபூசை செய்துவரும் பாறையிலிருந்தே சிலை எடுத்து திருவுருவம் செய்யுமாறு கட்டளையிட்டனர்.

பிள்ளையவர்கள் தாய் செல்லைத் தலைமேற் கொண்டு, உறுதியும் வளமையுமுடைய அப் பாறையிலிருந்து சிலை எடுத்துத் திருவுருவத்தைச் செய்வித்தார். பின்னர் தாயாருடைய வேண்டுகோளின்படி எஞ்சியுள்ள அப்பாறையில் முருகன் திருவுருவத்தைச் செதுக்கி வைத்தார். அது பின்னர் கோயிலாக அமைந்தது. அதுதான் இப்போது குறுக்குத்துறைக் கோயிலென்று வழங்கப் பெறுகிறது. அதுமுதல் ஆச்சிப்பாறை என்ற பெயர் மாறித் திருவுருவமாமலை என்ற திருப்பெயர் ஏற்பட்டது.

திருவுருவமாமலையிலிருந்து சிலை எடுத்துச் சிற்பிகள் உருவத்தைச் செய்து முடித்தனர். செம்பினல் ஆறுமுக நயினர் திருவுருவத்தைச் செய்து முடித்தனர். இரு திருவுருவங்களையும் அலங்கரித்து மேளதாளம் முதலிய எல்லாவகை ஆடம்பரங்களுடன் எழுந்தருளப் புரிந்து ஊர் வலம் செய்வித்தனர். முதல்நாள் வீரராகவபுரத்தில் சாலைக்குமாரசுவாமி கோயிலில் திருவுருவங்களுடன் தங்கினர். மறுநாள் பாளையங்கோட்டையில் தங்கினர்.

வடமலையப்பன் அவர்கள், பரிவாரங்களுடன் அன்று இரவு துயில் புரிந்தனர். அவர் கனவில் கடலில் மூழ்கிக் கிடக்கும் செந்தில் ஆறுமுகப் பெருமான் காட்சி அளித்து, திருச்செந்தூர் கோயிலின் கிழக்கு வாயிலின் நேரே அமைந்துள்ள, வதனரம்ப தீர்த்தக் கட்டத்தைக் காட்டி அதற்கு நேரேயுள்ள கடலில் சிறிது தொலைவில் ஒரு பாறையின்மீது தான் படிந்து கிடப்பதையும், அதற்கு நேர் கடல் அலைமீது எலுமிச்சம்பழ மாலை ஒன்று மிதப்பதையும், அதற்கு மேல் விண்ணில் இருகருடர் வட்டமிடுவதையும் காட்டி, அங்கு வந்துதன்னை எடுத்துக் கோயிலுள் எழுந்தருளச் செய்யுமாறு கூறி மறைந்தருளினர். கனவு தெளிந்தெழுந்து முருகன் திருவருளை நினைந்து ஆடினர். கண்ணீர் மல்கினர். திசையை நோக்கித் தொழுதார். அருகில் இருந்த புலவர்களிடம் கூறி மகிழ்ந்தார். செப்புத் திருவுருவத்தை அவ்விடமே வைத்துவிட்டு, மூலத்தானத் திருவுருவத்தை மட்டும் எடுத்துக் கொண்டு விரைந்து திருச்செந்தூர் வந்தார்.

R. RAJU, Dy. Commissioner, H.R. & C.E. Admn. Dept.

பரிவாரங்களுடன் படகுகளை அமைத்துக் கொண்டு கடலில் புறப்பட்டனர். கிழக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்றவுடன் ஒரு இடத்தில் எலுமிச்சம்பழ மாலை மிதந்துகொண்ருந்தது. அதற்கு நேரே இரு கருடப் பறவைகள் வட்டமிட்டுக் கொண்டு இருந்தன. இந்த அடையாளங்களைக் கண்டவுடன் பிள்ளையன் பிள்ளையவர்கள் ''முருகா முருகா'' என்று ஓலமிட்டனர். ஓடங்களை நிறுத்தி ஓடக்காரர்களைக் கடலில் மூழ்கித் தேடச் செய்தனர். திருவுருவம் கிடைக்கவில்லை. பிள்ளையவர்கள் திகைத்தனர். முருகனை நினைத்துக் கண்ணீர் வடித்தனர். இறுதியில் உறுதியுடன் தானே கடலில் குதித்துத் தேடினர். ஒரு திருவுருவம் தட்டுப்பட, அதனைத் தண்ணீக்கு மேல் எடுத்தனர். அது நடராஜ மூர்த்தியாக இருந்தது. அதனை ஓடத்தில் வைத்துவிட்டு மீண்டும் கடலில் மூழ்கித் தேடினர். ஆறுமுக நயினர் திருவுருவம் கிடைக்க எடுத்து, கரைக்குக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

நடராஜ மூர்த்தியையும் ஆறுமுக நயினரையும் மூலத்தான மூர்த்தியையும் கோயிலில் பிரதிஷ்டை செய்து கொல்லம் ஆண்டு 829 தை 29 (கி. பி. 1653)ல் கும்பாபிஷேகம் செய்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் 'ஹர ஹர' என்று முழக்கம் செய்து அஞ்சலி கூப்பிக் கண்ணீர் பெருக்கி வழிபட்டார்கள். நடராஜ விக்கிரக பீடத்தில் திருநள்ளாறு நடராஜர் என்று, பொறிக்கப்பட்டு இருப்பதனல், அம்மூர்த்தி திருநள்ளாற்றிலிருந்து கொள்ளைக்காரர் கொண்டு வந்து கடலில் போட்டிருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டனர். பிள்ளையன் பிள்ளையவர்களைஎல்லோரும் கொண்டாடிப் பாராட்டினர்கள்.

பின்னர் பிள்ளையவர்கள் தாம் செய்த ஆறுமுக நயினர் செப்புத் திருவுருவத்தைப் பாளையங்கோட்டை வெங்குபாச்சா அவர்களின் திரிபுராந்தகேசுவரர் என்ற சிவாலயத்தில் பிரதிஷ்டை செய்து, நித்திய நைமித்திகங்

களுக்கு ஏற்பாடு செய்தனர். அத்திருவுருவத்தை இன்றும் அங்குக் காணலாம்.

கடலில் இருந்து ஆறுமுகப் பெருமானை எடுத்த நாள், தைமாதம் புனர்பூசமாகும். ஆதலின் திருச்செந்தூரில் நடைபெறும் மாசிப் பெருவிழாவில் ஏழாம் நாள் புனர்பூசம் கூடிய நன்னுளில் ஆறுமுகப் பெருமானை எழுந்தருளப் புரிந்து ஷண்முக விலாசத்தில் இருத்தி அபிஷேக ஆராதனைகள் செய்து வெட்டிவேர் விமானத்தில் எழுந்தருளச் செய்து சகலவிதமான மேள தாளங்களுடன் தூண்டிவிநாயகர் கோயிலுக்கு அருகிலுள்ள பிள்ளையன் பிள்ளையவர்களின் மண்டபத்தில் எழுந்தருளப் புரிவார்கள். நமது ஆறுமுகப் பெருமான் அம் மண்டபத்தில் அன்று பகல் முழுவதும் இருந்து அடியவர்க்கு அருள்புரிவர்.

ஆறுமுகப் பெருமான் உருத்திர மூர்த்தமாக நின்று, உலகங்களை எல்லாம் அழித்தற்றெழிலைச் செய்கின்ருர் என்ற குறிப்பை உணர்த்தும் பொருட்டு ஏழாம் திருநாளன்று மாலை, பெருமானுக்குச் சிவப்புப் பட்டு, சிவப்பு மலர் புனைந்து செம்பொன் விமானத்தில் எழுந்தருளப் புரிந்து, பிள்ளையவர்கள் மண்டபத்திலிருந்து புறப்பாடு செய்து ஊர்வலம் புரிவர்.

பிரமதேவராக நின்று உலகங்களைப் படைத்தற்றெழிலை முருகப் பெருமானே செய்கின்ருர் என்பதை உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டு ஆறுமுகப் பெருமானை வெள்ளி விமானத்தில் வெண்பட்டு, வெண்ணிற மலர்களுடன், அலங்கரித்து எட்டாந் திருநாளன்று விடியற்காலையில் ஊர்வலம் புரிவார்கள்.

திருமாலாக நின்று உலகங்களை எல்லாம் காத்தற்றெழிலைப் புரிபவர் அப்பரமனே என்பதை உணர்த்தும் பொருட்டு, எட்டாம் திருநாளன்று நண்பகல் பெருமானைப் பச்சை விமானத்தில் எழுந்தருளப் புரிந்து, பச்சைப் பட்டு பச்சை மாலைகள் சாத்தி, மிகுந்த கோலாகலத்துடன், மாலை திருக்கோயிலுக்குள் சேர்ப்பர். அப்பொழுது அடியார்கள் ''வேல் வேல்'' என்று முழக்கும் ஒலி விண்ணைப் பிளக்கும். அப்போது பெருமானுடைய காட்சி கண் கொள்ளாததாக அமைந்திருக்கும்.

பொன்னுரு வமைந்து கஞ்சப் புங்கவ ஞகி நல்கும்;
என்னுரு வாகிக் காக்கும்;ஈசன்போ லிறுதிசெய்யும்;
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படை போலு மன்னுன்
தன்னுரு மறைக ளாலுஞ் சாற்றுதற் கரிய தன்றே.

என்ற கந்தபுராணத் திருவிருத்தத்தால் அயன் அரி அரன் என்ற மூவரையும் அதிட்டித்து முத்தொழிலையும் புரிந்தருள் பரம்பொருள் முருகவேளே என்பதை உணர்க. எனவே சிவப்புச் சாத்துப்படி, வெள்ளைச் சாத்துப்படி, பச்சைச் சாத்துபடி என்ற மூன்று அலங்காரங்களால் முறையே உருத்திரர், பிரமர், திருமால், என்ற மூவுருவும் முருகவேளே என்பதை மாசிப் பெருவிழாவிலும், ஆவணித் திருவிழாவிலும், 7-ஆம், 8-ஆம் நாட்களில் உலகிற்கு உணர்த்துகிருர்கள்.

இவ்வாறு வடமலையப்பன் பிள்ளையவர்கள் கந்தவேளைக் கடலிலிருந்து எடுத்து, பெரும் புகழும் புண்ணியமும் பெற்று, நெடுங்காலம் வாழ்ந்து, முருகப் பெருமான் திருவடி சார்ந்தார்.

---

# பக்தி நெறி வகைகள்

எல்லாம் வல்ல இறைவன்பால், அவனது மெய்யடியார்கள் செய்தொழுகும் அன்பாகிய பக்தியானது, பலவகை நெறிகள் அல்லது உணர்வுகளில் இயங்கும். அவற்றைத் தாஸ்யபாவம், சக்யபாவம், வாத்சல்யபாவம், சாந்தபாவம், காந்தபாவம், மதுரபாவம் என ஆறு வகைகளாகப் பெரியோர்கள் கூறுவதுண்டு.

**(1)** தாஸ்யம் : அடியவன் தலைவன்பாற் செலுத்தும் அன்பு; இராமனிடத்தில் ஆஞ்சனேயன் செலுத்திய அன்பு.

**(2)** சக்யம் : நண்பன் நண்பன்பாற் செலுத்தும் அன்பு; குசேலமுனிவரும் கண்ணபிரானும் தம்முள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு.

**(3)** வாத்சல்யம் : குழந்தையின் மேல் தாய்க்குள்ள பரிவு; கண்ணபிரானிடம் யசோதைப் பிராட்டியார் செலுத்திய பரிவு.

**(4)** சாந்தம் : குழந்தைக்குத் தாயின் மேலுள்ள பாசம்; துருவனும் பிரகலாதனும் இறைவன்பாற் கொண்டிருந்த அன்பு.

**(5)** காந்தம் : மனைவி கணவன் மேலும், கணவன் மனைவி மேலும் வைக்கும் நேசம்; சீதைக்கும் இராமபிரானுக்கும், கண்ணனுக்கும் உருக்குமிணிக்கும் இடையே நிலவிய நேசம்.

**(6)** மதுரம் : காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள காதல் உணர்வு; இராதைக்கும் கண்ணனுக்கும் இடையே நிலவிய காதலன்பின் நிலை.

இந்த ஆறு வகை உணர்வுகளின் நெறியினைத் தமிழில், முறையே, அடிமை நெறி, நட்புநெறி, தாய்மைநெறி, குழந்தைமைநெறி, கணவன்மனைவி நெறி, காதலன் காதலிநெறி எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.

—ஆசிரியர்

## திருவள்ளுவர் விளக்கும்

# தெய்விகச் செந்நெறி

ந. ரா. முருகவேல், எம். ஏ., எம். ஓ. எல்.

### முன்னுரை :

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும், தலைசிறந்த ஒருவராவர். திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளின் கருத்துக்களையும் சொற்பொருள்களையும், அவருக்குப் பின்னர் வந்தசான்றோர்கள் அனைவருமே, மிகவும் வியந்து போற்றி உவந்து தழுவிக் கொண்டுள்ளனர். அருளியற் சான்றோர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும்கூட, திருவள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்குத் தத்தம் பாடல்களில் எடுத்துப் போற்றிச் சிறப்பித்திருக்கின்றனர்!

திருவள்ளுவர் ஒரு சிறந்த கவிஞர்; ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர்; மிகச் சிறந்த தத்துவ ஞானி; இலக்கியப் பேராசிரியர், அரசியல் அறிஞர்; பொருளியல் மேதை; பல்கலைக் குரிசில்! உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டி! காலமும் இடமும் கடந்து சாலவும் நிலைபெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பெருநூலை இயற்றி அளித்த பெருவள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

### பொதுமறை :

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள சிறந்த கருத்துக்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் உவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில், உயர்வற உயர்ந்த உண்மைகளை, நடுநிலை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். அவர்தம் நூல், நவில்தொறும் நயம் பயக்கின்றது; தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கற்றனைத் தூறும் நற் கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒருநாடு-ஒருகாலம்-ஒரு மொழி ஓர்-இனம் என்பனவற்றிற்கே உரியதாகி விடாமல், எல்லாக் காலமும், நாடும் மொழியும் இனமும் ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

### விழுமிய முழுநூல் :

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே நூல்கள் எல்லாம் பொதுவாக விளக்கும். வாழ்க்கையின் பல திறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடு பின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், கற்றான், கல்லாதான், கள்ளுண்பான், சூதாடுவான், இரவலன், புரவலன், உழவன், வணிகன், ஆண் பெண் முதலிய அனைவர்க்குமே அறிவுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெருநூலாகத் திருக்குறள் சிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் துறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர்க்கு நிகராவார் எவருமே இலர்!

### சமரச ஞானச் சான்றோர்:

இத்தகைய ஆசிரியர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை, நாம் பல துறைகளிலும் ஆராய்ந்துணரும் கடப்பாடு உடையவர்கள் ஆவோம். ஆதலின், அவர் கடைப்பிடித்த சமயக் கொள்கைகள் யாவை? என ஆராய்ந்தறிய முற்படுதல், நம்மனோர்க்கு மிகவும் நலம் பயப்பதேயாகும்.

திருவள்ளுவர் தம்து சமயத்தைச் சார்ந்தவரே என்றும், திருக்குறள் தமக்கே சிறப்பாக உரிய நூல் என்றும், பல்வேறு சமயத்தவரும் உரிமை கொண்டாடி வருகின்றனர். ஆனல், அவரோ, தமது நூலின்கண் எந்தச் சமயம் பற்றியும், குறிப்பாகவேனும், கிளந்து கூறக் காண்கிலோம். எந்த ஒரு சமயத்தையும் சாராமல், எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படைக் கொள்கைகளை மட்டுமே, அவர் கூறிச்

செல்லக் காண்கின்ருேம். அதனுலேயே,

> ''சமயக் கணக்கர் மதிவழி கூருது
> உலகியல் கூறிப் பொருளிது என்ற
> தெய்வப் புலவர் திருவள்ளுவனுர்''

என்று, கல்லாட்னர் என்னும் புலவர், கல்லாடம் என்னும் தமது நூலின்கண் திருவள்ளுவரைப் புகழ்ந்து போற்றினர்.

இந்நாளில் நம் இந்திய நாட்டில் எத்தனேயோ பல சமயங்களும், சமயக் கோட்பாடுகளும், அவற்றிற்குரிய ஒழுகலாறுகளும் நிலவி வருகின்றன. திருவள்ளுவர் இவற்றுள் ஏதேனும் ஒன்றனேயே சார்ந்தவராகத் தெரியவில்லே. திருவள்ளுவரின் காலத்தில், இந்நாளேய சமயங்களும் சமயக் கோட்பாடுகளும், ஒழுகலாறுகளும் இருந்தன என்று கூறுதற்குரிய சான்றுகள் ஏதும் இல்லே. இவைகள் யாவும் திருவள்ளுவருக்குப் பின்னரே, நாளடைவில் காலப்போக்கில் படிமுறையே வளரலுற்றன என்று தெரிகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டிருந்த சமயநிலேயும், இப்போது உள்ள சமயங்களின் நிலேயும், தம்முள் ஒரு தன்மையுடையன அல்ல. உலக இயற்கைப் பொருள்களெல்லாம், காலந்தோறும் வேறுபட்டுச் செல்லுதல் போலவே, சமயங்களும் காலநிலேக்கு ஏற்ப வெவ்வேறு வகையில் வேறுபட்டுச் செல்லும் தன்மை வாய்ந்தவை. ஆதலின், இக்காலத்தில் உள்ள சமயங்களுள் ஒன்றன்பால் வைத்துத் திருவள்ளுவரின் சமயம் இதுவே என்று முடிவுகட்டித் துணிந்துரைத்தல் சாலாது. திருவள்ளுவர் சமயங் கடந்த, சமயாதீத சமரச ஞானச் சான்ருேர் எனலாம்.

எனவே, திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளின்கண், ஆங்காங்கே வரும் நுண்ணிய அரிய குறிப்புக்களேத் தெள்ளிதின் ஆராய்ந்தே, அவர்தம் சமயச் செந்நெறியின் சால்பினே, நாம் ஒருவாறு அறிதல்கூடும். ஆதலின், அம்முறை பற்றி, இங்கு ஒரு சில கருத்துக்களே மட்டும், இயன்றவரை முயன்று காண்போம்.

**திருக்குறளில் சமயநுண் கருத்துக்கள் :**

*(1)* திருவள்ளுவர் கடவுள் ஒருவர் உண்டு என்னும் கொள்கையுடையவராகக் காணப்படுகின்ருர். திருக்குறளில் உள்ள 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, வேறு பிற சான்றுகளாலும் இவ்வுண்மை புலனுகின்றது. 'உலகு இயற்றியான்' 'வகுத்தான் வகுத்தவகை' 'உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான்' 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' எனவரும் திருக்குறள்கள் இதனே வலியுறுத்தும்.

*(2)* கடவுள் ஒருவர் உண்டு என நிறுவும் ஒரு சான்ருகவே, அவர் 'வான் சிறப்பு' என்னும் ஒரு தலேப்பை அமைத்திருப்பதாகத் தெரிகின்றது. ''மாரி வறப்பில் தருவாரும் இல்லே; சிறப்பில் தணிப்பாரும் இல்'' என்றபடி, மழை மிகுதியாகப் பெய்தாலும் நம்மால் தடுக்க இயலாது; பெய்யாமலே இருந்து விட்டாலும், நம்மால் அதனேப் பெய்விக்க முடியாது. கடவுளின் அருளாற்றலே யுணர்த்துவனவற்றுள் மழையும் ஒன்று எனத் திருவள்ளுவர் கருதுகின்ருர் எனலாம்!

*(3)* கடவுளின் உருவம் பற்றித் திருவள்ளுவர் ஏதும் விவரமாகக் கூறிற்றிலராயினும், கடவுளின் திருவடியைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தலால், கடவுளுக்கு அருவநிலேயேயன்றி, உருவநிலேயும் உண்டு எனத் திருவள்ளுவர் கருதுதல் புலனுகின்றது.

*(4)* 'சிறப்பொடு பூசனே செல்லாது' என்பதனுல், கோயில்களேயும், அக்கோயில்களில் நிகழும் நித்தியம் நைமித்திகம் என்னும் வழிபாடு விழாக்கள் முதலியனவற்றையும், திருவள்ளுவர் உடன்படுதல் காணலாம்.

*(5)* இறைவனின் அருளினுலும், அவன் வகுத்தருளிய இயற்கை நியதியாகிய ஒழுங்கு முறையினுலுமே, உலகம் இயங்கி வருகின்றது; உயிர்களெல்லாம் வாழ்ந்து வருகின்றன; 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதனேத் திருவள்ளுவரும் வற்புறுத்துகின்ருர். 'ஊழ்' (Divinity, Fate, Destiny) என்னும் தலேப்பினே, அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் நடுவில், தனித்த ஓர் இயலாகவே திருவள்ளுவர் அமைத்து வைத்திருத்தல் இவ்வுண்மையைத் தெளிவிக்கும். நாம் எவ்வளவு முயன்ருலும், நம்மை அறியாமலே நம் வாழ்க்கையை உருவாக்கும் ஒரு தெய்விக சக்தி உள்ளது ("There is a Divinity that shapes our ends, rough hew them how we will."–**Shakespeare**) என்பதனேயே திருவள்ளுவர் ''ஊழியல்'' என்னும் பகுதியில் விளக்குகின்ருர்.

*(6)* இறைவனிடம் மட்டுமேயன்றி, அவனது அருள்பெற்ற சான்ருேர்கள் மாட்டும், திருவள்ளுவர்க்கு மிக்க மதிப்பும் ஈடுபாடும் உள்ளமை, ''நீத்தார் பெருமை'' என்னும் தலேப்பால் அறியப்படும். ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்'' என்னும் குறளால், 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பதனேத் திருவள்ளுவரும் உடன்படுகின்றனர் எனலாம்.

*(7)* பொருளேயும் இன்பத்தையும் பற்றி மிகமிக விதந்து கூறி விளக்கியபோதிலும், அவை இரண்டும் அறத்தின் வழியாகவே வருதல் வேண்டும் என்றும்; அறமே அவ்விரண்டினும் மிக்க வலிமை யுடையதாகும் என்றும்; திருவள்ளுவர் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்ருர். 'அன்பிலதனே அறம்காயும்' 'அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பன போன்ற குறள்களால், அறத்தையே கடவுள் என்றும்; அறவாழ்வே சமய வாழ்வு என்றும்; அறவோர் ஆகிய அந்தணரே சமயச் சான்ருேர்கள் என்றும், திருவள்ளுவர் குறிப்பிடுகின்ருர் எனலாம்.

(8) 'வானோர்' அமரர்' 'இமையார்' 'புத்தேளிர்' 'தேவர்' என்பன போன்ற சொற்களால், முழுமுதற் கடவுளின் வேருக, அவர் தம் அருளைப் பெற்ற தெய்வகணங்கள் ஆகிய தேவர்கள் பலர் உளர் என்பதும்; அவர்கள் வாழும் உலகம் வானுலகம் முதலிய பெயர்களால் வழங்கப்படும் என்பதும், புலனுகின்றன.

(9) 'உயிர் உடம்பின் நீக்கியார்' 'உடம்போடு உயிரிடை நட்பு' என்பன போன்ற குறள்களால், உடம்பே உயிர் என்பாரை மறுத்து, உடம்பின் வேருக உயிர் என்ப தொன்றுண்டு, உடம்பும் உயிரும் வெவ்வேறு இயல்புடையன, என்பன போன்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் உணர்த்துகின்ருர்.

(10) 'எழுமையும் ஏமாப்புடைத்து' 'எழு பிறப்பும் தீயவை தீண்டா' என்னும் குறள்களால், பிறந்த உயிர் மீளப் பிறவாது என்பாரை மறுத்து, உயிர்க்குப் பல பிறவிகள் மாறி மாறி வரும் என உணர்த்துகின்ருர். (Metampsychosis, Transmigration).

(11) 'இருள்சேர் இருவினை' 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்' 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்பனவற்ருல் நல்வினை தீவினைகளாகிய பாவபுண்ணியங்களையும், அவற்றிற்கேற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை வழுவாது அடைதலையும், திருவள்ளுவர் தெற்றெனத் திறம் தெரிந்து விளக்குகின்ருர்.

(12) 'மறுமையும் இம்மையும் இன்பம் தரும்' 'எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு' 'பெறுவர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு' என்னும் குறள்களால், சுவர்க்கம் நரகம்-இம்மை மறுமை ஆகியவற்றையும் திருவள்ளுவர் உடன்படுதல் உணரலாம்.

(13) 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' 'ஊனைக் குறித்த உயிரெல்லாம்' என்பனவற்ருல் உயிர்கள் பல என்பதும்; 'மன்னுயிர் எல்லாம் துயிற்றி' 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்' என்பனவற்ருல் அவ்வுயிர்கள் அழியாத் தன்மையன என்பதும், பிறவும் தெளியப்படும்

(14) 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதனுல், கடவுளே உலகம் அன்று (Pantheism), உலகம் வேறு, கடவுள் வேறு என்பது தெளிவிக்கப் பெறுகின்றது.

(15) 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம்கெடக் கெடும் நோய்' 'அவா என்ப தவாஅப் பிறப்பீனும் வித்து' என்பன வற்ருல், உயிர்களின் பிறப்பிறப்புகளுக்குக் காரணமாவன பலவும் சுட்டப் பெற்றுள்ளன.

(16) 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்' என்பதனுல், உயிர்களைப் பற்றியுள்ள மல மாசுகள் ஆகிய குற்றங்களும், அவைகளினின்று நாம் தப்பியுய்தற்குரிய சரியை கிரியை யோக ஞானம் முதலிய பலவகைச் சமய ஒழுகலாற்று முறைகளும், அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுல் உயிர்கள் எய்தும் நலங்களும், குறிப்பிடப்படுகின்றன.

(17) 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'; 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு' என்னும் குறள்களால், நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் இயற்கை முதற் பொருள்களும், அவற்றிற்குக் காரணமான நுண் பொருள்கள், அறிகருவிகள், தொழிற்கருவிகள் அகக்கருவிகள் முதலிய தத்துவ ஆராய்ச்சிச் செய்திகளும், அனுபவங்களும் உண்டு என, உணர்த்தப் பெறுகின்றன.

(18) 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி' 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்பனவற்ருல், ஒழுக்கநெறியாகிய சமய வாழ்வும், அதனுல் விளையும் ஆற்றல் ஆகிய பயனும், பிறவும் தெளியப்படும்.

(19) 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து' என்னும் குறளால், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கள் ஆகிய சீவன் முத்தர்கள் நிலை, செவ்விதின் விளக்கப் பெற்றது.

(20) 'ஒன்ருர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்' என்பதனுல், தவவாழ்வினுல் விளையும் பேராற்றல் விளங்கும்.

(21) 'உண்ணுமை வேண்டும் புலால்' 'அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' என்பவற்ருல், புலால் உண்ணுமை சமய வாழ்விற்கு இன்றியமையாத ஒரு பண்பாதல் வற்புறுத்தப்பட்டது.

(22) இல்லறம் துறவறம் என்னும் இரு வகை நெறியாலும், இறையருளைப் பெறலாம்; இவை இரண்டும் தம்முள் ஒன்றினென்று முரண்படுவன அல்ல; இல்லற வாழ்வின் வளர்ச்சிப் பயனே துறவறம்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி நலம்புரியும் பெரும் செயலும் பண்புமே, செந்தண்மை (சீவகாருண்யம்) எனப்படும்.

(23) சமய வாழ்வுக்கு ஒரு ஞானசிரியனின் துணை இன்றியமையாதது. 'குருவருள் இன்றித் திருவருள் இல்லை'. அதுபற்றியே 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என அறிவுறுத்துகின்ருர் திருவள்ளுவர். 'பற்றற்ருன்' என்னும் சொல், ஞானசிரியனுகிய குருவினைக் குறிப்பதாகும். குருவின் உபதேசமாகிய திருமொழியால், நாம் பெறுவதற்குரிய பேற்றினையே 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்பதனுல், திருவள்ளுவர் குறித்தருளினர் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

(24) மக்களின் வாழ்க்கையில் சமய ஒழுகலாறு அல்லது கடவுள் வழிபாடு என்பது மிகமிக இன்றியமையாதது. மனக்கவலைகளை மாற்றுதற்குரிய ஒரேவழி, கடவுளை வழிபடுவது தான் என்க் கட்டுரைக்கின்றார் திருவள்ளுவர்.

(25) எவ்வுயிர்க்கும் சிறு தீங்கும் செய்யாமல் இருத்தல், சிறந்த சமய நெறிப் பண்பாடாகும். 'உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்பது திருக்குறள். இதனையே 'மன்னுயிர் ஓம்பி அருளாள்தல்' எனப் பிறிதோர் இடத்தும் சிறப்புறக் கூறுவர் திருவள்ளுவர். சிற்றுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை மட்டுமன்று, அவைகளுக்கு நலஞ் செய்து பாதுகாத்தலும் இன்றியமையாதது என்பது கருத்து. (Reverance for Life—Albert Schweitzer) 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்றதும், இத்தகைய உயர்ந்த சமய வாழ்வேயாகும்.

(26) எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்டல் என்பது, சமய வாழ்வில் மிக மேலான உயர்ந்த சிறந்த பெருநிலை. ஞானிகள் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் காண்பார்கள். அவர்களுக்கு எல்லாம் இறைமயமாய், தெய்வ வடிவமாகக் காணப்பெறும். இத்தகைய இறையருளனுபவ ஞானப் பெருநிலையையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது திருக்குறள். 'எப்பொருளின் கண்ணும் மெய்ப்பொருளைக் காணப் பெறுவது ஞானம்' என்க. (*)

(27) திருக்குறள் ஒரு நீதிநூல், ஒழுக்க நூல் என்பதனை யாவரும் அறிவர். அவ்வளவில் மட்டுமே, அதன் பெருமை அமைவதன்று. உயரிய நீதிகளையும் ஒழுக்கங்களையும் புத்தர் பெருமானும் கூறிச் சென்றார். ஆனால் அவர் இறைவனின் இயல்பு பற்றியோ, உயிரின் இயல்புகள் பற்றியோ ஏதும் விளக்கிக் கூறினார் இல்லை. 'உயிரிரக்கம்' ஆகிய சீவகாருண்யம் என்பதனை மட்டுமே பெரிதும் அறிவுறுத்திப் போந்தார். ஆதலின் பௌத்தம் முதலியன, ஒரு நல்லொழுக்க நெறியே யன்றிச் சமயம் ஆகாது என்பர் சிலர். சமுதாய சேவை (Social Service) என்பது, சமய வாழ்வின் ஒரு பகுதியே யன்றி, அதுவே முழுச் சமய விழுமிய வாழ்வு ஆகிவிடாது. (*)

(28) ஒரு சிலர் கடவுளும் சமயமும் எதற்கு? நல்லவர்களாக, ஒழுக்கமுடையவர்களாக இருந்தால், அதுவே போதாதா? என வினவுகின்றனர். ஒழுக்கம் சமய வாழ்விற்கு வேண்டப்படுவதேயாயினும், ஒழுக்கமே சமய வாழ்வு அன்று. ஒழுக்கம் தரும் உயர்வினும், ஒழுக்கத்துடன் கூடிய சமய வாழ்வு தரும் உயர்வு, மிக மிகப் பெரியது என்பது அறிதற்குரியது. (†)

(29) திருவள்ளுவர் வெறும் நீதி நூலாசிரியர் மட்டுமேயல்லர். அவர் ஒரு பெருஞ் சமய நூல் ஆசிரியரும் ஆவார். கடவுள் உயிர் உலகம் நல்வினை தீவினை பிறப்பு இறப்பு அறம் மறம் தவம் ஞானம் துறக்கம் நிரயம் தேவர் முனிவர் நரகர் முதலிய பல்வேறு சமயத் துறைப் பொருள்களையும் பற்றி, அவர் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

## முடிவுரை:

இத்தகைய பெருஞ் சிறப்புடைமை பற்றியே, திருவள்ளுவரை எல்லாச் சமயத்தவரும், தத்தமக்குரிய சான்றோராகப் போற்ற முற்படுகின்றனர். இங்ஙனம் எல்லாச் சமயத்தவரும் ஏற்றுப் போற்றும் வண்ணம், அவர் தமது திருக்குறளின்கண் விளக்கியருளிய தெய்விகச் செந்நெறி, சிறப்புற்றுத் திகழ்கின்றது. அச்செந்நெறியின் அருமை பெருமைகளையுணர்ந்தும், உள்ளபடியே அதனைக் கடைப்பிடித்தொழுகியும், நலம்பலவும் எய்தி, நாம் அனைவரும் உய்ய முயலுவோமாக ! **

---

(*) " To perceive all that is unusual and exceptional, all that is wonderful, in the midst of the ordinary things of everyday life, is the beginning of philosophy or religious consciousness."

—JOSEPH PIPER,
*—The Philosophical Act.*

(*) " Pure religion and undefiled, before God the Father, is this. To visit and help the orphans and the diseased in their affliction, and above all this to keep oneself unspotted in the world. Mere social service alone cannot be equated with real religious life and spiritualism."

—PROF. WILLIAM JAMES,
*—Varieties of Religious Experience*

(†) " Call it what you will, there is in most human lives an attitude toward the Determiner of Destiny which simply is not to be identified with social righteous ness or anyother kind of morality . . . Religion, if taken seriously and rationally, will be deeply moral ; but is not mere morality."

—PROF. J. B. PRATT,
*—The Religious Consciousness*

# ஆழ்வார்களின் அருளிச் செயல் அழகு

திரு. என். எஸ். தாத்தாசாரியார், தஞ்சை.

R. RAJU, Dy. Commissioner H.Qrs. (Retired), HR&CE Administration Dept.

முன்னுரை:

வைணவர்கள், ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களைச் சிறப்பாக ''அருளிச் செயல்'' என்று வழங்குவர். அரிய பெரிய வேதாந்த நுண்பொருட் கருத்துக்களை, ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் தேன்சுவை ததும்பும் இன்பத் தமிழில் எளிதில் விளக்கியிருப்பதால், ஆழ்வார்களின் பாசுரங்களில் சொல்லழகு, நடையழகு, தொடையழகு, கருத்தருமை, மெய்ப் பொருள் நுட்பம் என்பவைகள், நிரம்ப அமைந்திருக்கும். அவற்றோடு மட்டுமன்றிச் சங்ககாலத்துக் கருத்துக்களும், இலக்கிய நயங்களும்கூட, ஆழ்வார்களின் பாசுரங்களில் அமைந்திருக்கக் காணலாம்.

சொல்லேர் உழவர்களான ஆழ்வார்களும் நாயன்மார்களும், செந்நெற் கவரி வீசும் தெய்வத் தமிழ்ப் பண்ணையில், திருவருட் செழுங்கதிர்களை முதிர விளைவித்து அளித்தருளியுள்ளனர். பாலும் தெளிதேனும் கலந்தமை போல, ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களில் பக்திச் சுவைநலமும், இலக்கிய வளமும் நிறைந்து விளங்கும். ஆழ்வார்களின் கற்பனைகளைப் புறக்கற்பனை, அகக் கற்பனை, கற்பனையில் கற்பனை என மூன்று பிரிவுகளில் ஒருவாறு அடக்கிக் காணலாம். இவ்வகையில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நால்வகை நிலங்கள் பற்றிய கற்பனைகளை, இங்கு ஒரு சிறிது இயன்றவரையில் ஆராய்ந்து காண்போம்.

## (1) குறிஞ்சி நிலக் காட்சி:

தமிழ் இலக்கணங்கள் கூறும் நால்வகை நிலங்களில் குறிஞ்சி நிலம் ஒன்று. குறிஞ்சி என்பது மலையும் மலையைச் சார்ந்த இடமும் ஆகும். உலகப் படைப்பில் குறிஞ்சி நிலமே முதன்முதலில் தோன்றியது என்பர். இக் குறிஞ்சி நிலக்காட்சியில் திருமங்கையாழ்வார் தம் பாடல்களில் அழகுற வருணித்துள்ளார்.

''கரியமாமுகில் படலங்கள் கிடந்து அவைமுழங்கிடக்
களிறுஎன்று பெரியமாசுணம் வரைஎனப் பெயர்
தருபிரிதி''

என்ற பாசுரத்தில் வடநாட்டில் இமயத்தில் உள்ள பிரிதி என்ற திவ்விய தேசத்தின் இயலினை வருணிக்கின்றார் ஆழ்வார். இப்பாடலுக்கு நஞ்சீயர் என்னும் பேராசிரியர் ''மலைப் பாம்புகள் யானைக்கு அஞ்சிப் புற்றிலே புகுந்து ஒளிக்கும்'' என்று உரைவிளக்கம் செய்தார். அதுகேட்ட நம்பிள்ளை ''இதுவோ இதற்கு அருளிச் செய்யும்படி?'' என்றார். அதற்கு நஞ்சீயர் ''நீர் இப்படி கேட்கும்பொழுது ஒன்றை நினைத்தல்லது கேளீர், அத்தைச் சொல்லும்'' என்றார். அதற்கு நம்பிள்ளை ''பெயருகையாவது, போக்கு வரவு இரண்டுக்கும் சாதாரணம். இனி மலைக்குச் சிறப்புச் சொல்லும் அவர்கள், மலைப்பாம்புகள் யானையை விழுங்கும் என்னக் கடவர்கள், ஆகையால் கரிய மாமுகிற் படலங்களைப் பெரிய யானை என்று எண்ணி, மலைப்பாம்புகள் மலைபெயர்ந்தாற் போலக் கால்வாங்கி வந்து கிட்டாநிற்கும்'' எனப் பொருள் விளக்கினர். இக்கருத்து, ''நால்வாய்க் களிறு பாந்தள் பட்டெனத் துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்'' என நற்றிணையிலும், ''பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்கு இருள் கூர்ந்த கரிய மிடற்றர் செய்ய மேனிக் கயிலை மலையாரே'' எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரத்திலும், பயின்று வந்துள்ளது.

''இடிகொள் வேழத்தை எயிற்றொடும்
எடுத்து உடன்விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந்
தவர் எனஅடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர்
தாம் மிதித்து ஏறப்
படிகள் தாமெனத் தாழ்வரை
கிடப்பன பாராய்''

எனவரும் கம்பராமாயணப் பாடலும், மலைப் பாம்புகள் யானையை விழுங்கும் என்னும் கருத்துக்கு அரண்செய்து நிற்றல் காணலாம். இவற்றால் ஆழ்வார்களின் பாசுரங்கள் சங்க இலக்கியப் பாடல்களின் சுவையும் நலமும் பெற்றிருத்தல் காணலாம்.

## (2) மருத நிலக் காட்சி:

பெரிய திருமொழியில் திருநறையூர் என்ற நாச்சியார்கோயில் பதிகத்தில்,

''பள்ளிக் கமலத்து இடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம்நோக்கி
நள்ளி ஊடும் வயல்சூழ்ந்த நறையூரே''

என்ற பாசுரவரிகளில், திருமங்கையாழ்வார் ஓர் மருதநிலக் காட்சியை வருணனை செய்கின்றார். மாலை நேரம், திருநறையூர்ப் பாதையில் ஓர் அல்லிக்குளம். அவ்வல்லி மலரில் வாழ்கின்ற தலைவன், தலைவியாகிய இரண்டு நண்டுகள். பெண் நண்டு கருவுற்றது. சூல் உற்ற பெண்களுக்கு ஏற்படும் ஒருவகை மயக்கத்தால், பெண்நண்டு தேனை விரும்பியது. அதனை உணர்ந்த ஆண் நண்டு, அத்தேனைக் கொணரத் தேன் தங்கும் தாமரை மலரினை நாடிச் சென்றது. நீர்வளமும் நிலவளமும், திருமாலின் அருள்வளமும் கொண்ட அக்குளத்திலேயே, இயற்கைக்கு மாறாகத் தாமரைக்காடு மற்றொரு பக்கம் பூத்திருந்தது. தாமரையில் இருந்து கொண்டு, ஆண்நண்டு தேனை மனைவிக்காகத் தன் வாயில் தேக்கிக்கொண்டது. அந்நிலையில் இரவு வந்தது. தாமரை மலர்கள் குவிந்தன. தன் மனைவிக்குத் தேன் தொகுத்த அருமையினால், ஆண்நண்டு தாமரை மலரிலேயே தங்கி, இரவெல்லாம் மனைவியை நினைந்து விழித்திருந்தது. பொழுது புலர்ந்தது. தாமரை அலர்ந்தது. உடனே ஆண் நண்டு அரைகுலைய நிலைகுலையக் களைத்த உடலுடனும், சிவந்த கண்களுடனும், சோர்ந்த நடையுடனும் பையப் பையப் பயந்து கொண்டு நள்ளியை நோக்கி வந்தது. அல்லிமலரில்

அமர்ந்திருந்த நள்ளியோ, தன் கணவனைக் காணாது இரவெல்லாம் ஏங்கிக் கண்விழித்துக் காலைநேரம் வந்ததும் வழிமேல்விழி வைத்துப் பார்த்து நின்றது. காலை நேரமானதால் அல்லி மலர் மூடிக் கொண்டது. இதைக் கண்ணுற்ற ஆழ்வாரின் கற்பனையில், நள்ளிப்பெண், நண்டு தூரத்தில் வரும் தன் கணவனின் நிலையைக் கண்டு, அதனிடம் பிற பெண்நண்டுகளின் தொடர்பு ஏற்பட்டிருக்கும் என்ற ஐயப்பாடு கொண்டு, ஊடல் மிகுதியினால் தன் கதவைத் தாளிட்டுக் கொண்டதோ? என்ற ஓர் உணர்வு தோன்றியது. பெண்ணரசு நாடான நாச்சியார் கோயிலாதலின், அங்குப் பெண்நண்டுகளும் ஊடல்கொண்டு ஆண்நண்டுகளை அடக்கியாள முற்பட்டனபோலும்! என்று இவ்வரிகளுக்கு அழகுறப் பொருள் விளக்குகின்றார், பட்டர் என்னும் வைணவப் பேராசிரியர்.

**(3) முல்லை நிலக் காட்சி :**

திருவாய்மொழியில் திருப்புலியூர்ப் பதிகத்தில்,

''மெல்லிலைச் செல்வ, வண்கொடிப் புல்க
வீங்கு இளந்தாட் கமுகின்
மல் இலைமடல் வாழை ஈன்கனி
சூழ்ந்து மணம் கமழ்ந்து,
புல் இலைத் தெங்கின் ஊடு கால் உலவும்
தண் திருப் புலியூர்,
மல்அலம் செல்வக் கண்ணன் தாள்
அடைந்தாள் இம் மடவரலே''

திருப்புலியூரைச் சுற்றி நெருங்கி அடர்ந்த சோலை. சோலையில் வெற்றிலைக் கொடிக்கால். கொடிக்காலில் வெற்றிலைக்கொடி, அருகே உள்ள ஒரு தருணப் பாக்குமரத்தைத் தானே தாவி, அம்மரத்தை இறுகப் புல்லிக்கிடக்கிறது. தாவரங்களுக்கு உணர்ச்சி உண்டு. இனம் இனத்தைச் சாரும் என்ற பண்பு உண்டு என்பது, நம் முன்னோர்கள் முன்பே அறிந்த கொள்கை. அதனால்தான் வடமொழியில் சிறந்த கொடிகளுக்கு லதா எனவும், சிறப்புற்ற கொடிகளுக்கு 'வீருத்' எனவும் பெயர் ஏற்பட்டது. உதாரணமாக ஒரு முல்லைக்கொடி எப்பொழுதும் மாங்கன்றையே நாடுவதையும், புல்லுருவிக்கொடிகள் எட்டி, நெட்டி, எருக்கம் போன்ற செடிகளையே நாடுவதும் இயல்பாக உண்டு. வெற்றிலைக் கொடிக்கு வடமொழியில் ஸ்ரீலதா என்று பெயருண்டு. அதனால் அக் கொடி திருமகளாயிற்று. பாக்குமரமோ, செவ்வாய்ப் பச்சை வண்ணனாகிய ஓங்கி உலகளந்த திருமாலாகியது. இதைக் கண்ணுற்ற ஆழ்வாரின் திருக்கண்கள், பாக்கும் வெற்றிலைக் கொடியும் புல்லிக் கிடப்பதைத் திருமாலும் திருமகளும் கலந்து, திருவும்-மாலும் கூடி இருப்பதாகவும், இதைக்கண்டு அங்கேயே தனித்துப் பழக் குலையுடன் வணங்கிக் காணும் வாழை மரங்கள், பக்தர்கள் குழாமெனக் கனிந்த வாழைத் தாருடன், காணிக்கைப் பழங்களைத் தலைகள்மேல் தாங்கித் தாம்பூலத் தட்டுடன் நின்று காளாஞ்சி என்ற இலை மடலையும் தாங்கி நிற்பதாகவும், காண்கின்றன. மற்றும் அங்கே உள்ள ஒரு தென்னம் தோப்பில் உள்ள தென்னைமரங்கள், கொடித் தலைவிக்குப் பாங்கிகள் போல், ஆடாமலும் அசையாமலும் வரிசையாக நின்று பணி செய்கின்றன. மெல்லிய தென்றல், வண்டுகளின் ரீங்காரத்துடன் மெல்லிசைபாடுகின்றது.

**(4) நெய்தல் நிலக் காட்சி :**

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தத்தில், ஓர் நெய்தல் நிலக்காட்சி, கவின்மிகு கற்பனைநலத்துடன் வருணனை செய்யப் பெற்றுள்ளது.

''அழைக்கும் கருங்கடல் வெண்திரைக் கை
கொண்டு போய் அலர்வாய்
இழைக்கண் மடந்தை அரவணை ஏற மண்
மாதர் விண்வாய்
அழைத்துப் புலம்பி முலைமலைமேல்
நின்றும் ஆறுகளாய்
மழைக்கண்ண நீர், திருமால் கொடியான்
என்று வார்கின்றன''

ஆழ்வாரும் ஆண்டாளும் கலியனும் சிற்சில இடங்களில், எம்பெருமானிடத்தில் உள்ள பிரேமை மிகுதியாலும், உரிமைச் சிறப்பாலும் திருமாலைத் தூற்றுவதுபோல் போற்றுவார்கள். இதனாலேயே திருமாலுக்குக் ''கொள்ளக் குறைவிலன்'' என்ற ஒரு திருப்பெயரை நம்மாழ்வார் சூட்டி மகிழ்ந்தார். கொள்ளக் குறைவிலன் என்ற சொல்லுக்கு, நாம் எம்பெருமானை எப்படி அழைத்தாலும் அத்துணைக்கும் கொள்கலனாக விளங்கும் பரமபுருஷன் என்றே பெரியோர் உரை. அவனை இடையன் என அழைத்தாலும், அது அவன் சிறப்பையே காட்டும். அப்புடையில் வருணனை ஈங்குக் காணக்கிடக்கிறது: பெண் தன்மைபூண்ட பராங்குசநாயகி என்ற நம்மாழ்வார், திருமால் ஒரு கொடியர் என்றார். இதே ஆழ்வார் திருவாய்மொழி 5.35.பாசுரத்தில், திருமாலைக் ''கடியன் கொடியன் நெடியமால்'' என்றும்; ஆண்டாள் ''கொடிய கடிய திருமால்'' என்றும் பேசிய பக்திவகையை அறியலாம். கொடியவராகிய திருமால், பாற்கடலில் திருமகளுடன் கூடிக் குலாவுகிறாராம். இதைக் கண்ணுற்ற நிலமங்கை வருந்தி அழுகின்றாளாம். திருமால் பாற்கடலுக்குள் தங்கினார். கடல் அரசன் ஓசையிட்டுத் தன் மகளாகிய இலக்குமியை அழைத்து, அலைகளாகிய கைகளில் ஏந்தி, அந்தப் பாலாழிவண்ணனுக்குத் திருமணம் செய்விக்கிறாராம். இலக்குமியும் மகிழ்ச்சியுடன் கண்ணீர் பெருக, அலைகளாகிய படிக்கட்டில் ஏறித்திருமாலின் பக்கத்தில் பாங்காக அமர்கிறாள். இதனைக் கண்ட நிலமங்கை, நாம் நித்தம் ஏங்கிக் கடலையும் இவர்களையும் தாங்கி இருக்க, இத் திருமால் மற்றொரு பெண்ணுடன் நம் முன்பேயே குலாவும் கொடுமைதான் என்னே! என வருந்தி, விண்மீது முகிலாய்ச் சென்று ஊரார் கேட்கத் திருமாலின்மீது அலர் தூற்றுமாறு இடித்து மழைக்கண்ணீர் விட்டழுகிறாள். அக்கண்ணீர் அருவிகளாகிப் பூமியின் தனங்களாகிய மலைகளின் மேல் ஆறாகப் பாய்கிறது என்று அருளுகின்றார். தலைவி ஆற்றாமை விஞ்சி நெய்தல் நிலத்தில் உலவுவது என்பது, சங்க நூல்களின் குறிப்பு. அதனைப் பின்பற்றி ஆழ்வார் ஈண்டு அருளிச் செய்தபடி, இங்ஙனமெல்லாம் ஆழ்வார்களின் பாசுரங்களில் நம் பழம் பெருஞ் சங்கநூல் இலக்கியக் காட்சிகளும், மரபுகளும், இலைமறை காய்கள்போல் அழகு மிக அமைந்திருக்கின்றன! **

# வடபழநி ஆண்டவர் அருள் மாட்சிமை

[விவேகானந்தன்]

## "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" — அப்பர்.

### முன்னுரை :

''வேண்டிய வரங் கொடுப்பான்! மெய் கண்ட தெய்வம், இத் தெய்வமல்லால் புவியில் வேறு இல்லை என்று உணர்திரால்'' என்று குமரகுருபர சுவாமிகளால் புகழ்ந்து பாடப் பெற்ற கண்கண்ட தெய்வமும், கலியுக வரதனுமாகிய முருகப்பெருமான், எழுந்தருளி விளங்கும் அருட்டலங்களுக்கு அளவில்லை. ஆயினும், அவற்றுள் மிக்க பழமையும் பெருமையும் திருவருட் சிறப்பும் வாய்ந்தனவாகப், பெரியோர்களால் தொன்றுதொட்டுப் புகழ்ந்து போற்றப்பெற்றுவரும் முருகனின் தலங்களில், மிகவும் சிறப்புடையவை, ஆறுபடை வீடுகள் எனப்படும். அவைகளாவன: திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோருடல் (திருத்தணிகை, கதிர்காமம் முதலிய பல மலைகள்), பழமுதிர் சோலை (அழகர்கோயில்) என்பன.

### பழநி :

இந்தப் பழமையும் பெருமையும் வாய்ந்த ஆறு படைவீடுகளுள், திருவாவினன்குடி என்னும் பழநியானது, பலவகைப் பெருமைகளை உடையது. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே, பழநியம் பதியானது ''பொதினி'' என்று பெருஞ் சிறப்புடன் விளங்கியிருந்தது. சங்ககாலத்தில் வாழ்ந்த வையாவிக்கோப்பெரும் பேகன் என்னும் பெருவள்ளலும், அவனைச் சார்ந்த வேளிர் குலத்தினரும், பழநியிலும், பழநியைச் சூழ்ந்த இடங்களிலும் வாழ்ந்து வந்தனர் எனச் சங்க இலக்கியங்கள் சாற்றுகின்றன.

சங்ககாலத் தலைமைப் புலவராக விளங்கியிருந்த ஆசிரியர் நக்கீரர், ''தவநலஞ்சான்ற முனிவர்களும், கற்புமாட்சிமையுடைய கந்தருவ மகளிரும், 'புள்ளணி நீள்கொடிச் செல்வன்' ஆகிய திருமாலும், 'மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வன்' ஆகிய உருத்திரனும், 'நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்தன்' ஆகிய தேவேந்திரனும், நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர் ஆகிய முப்பத்து முக்கோடித் தேவர்களும், பதினெண்வகைத் தேவகணங்களும் ஆகிய எல்லோரும் சென்று முருகப்பெருமானைப் பணிந்து வழிபட்டு அருள்பெற்று உய்யும் தலம்'' என்று, திருவாவினன்குடியாகிய பழநியம்பதியின் சிறப்பைத் தம் திருமுருகாற்றுப் படையில் புகழ்ந்து போற்றியுள்ளார். அருணகிரிநாதர் ''அதிசயம் அனேகம் உற்ற பழநி'', ''காசியின் மீறிய பழநி'' என்றெல்லாம் பல வகைகளில் பழநியம்பதியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். முருகப்பெருமானுகிய எல்லாம் வல்ல சித்தனும், போகர் புலிப்பாணி முதலிய எண்ணிறந்த பலசித்தர்களும், இடைவிடாது தங்கியிருந்து வாழ்ந்துவரும் சிறப்பினுல், பழநிக்குச் ''சித்தன்வாழ்வு'' என்றும் ஒரு பெயர் உண்டு.

### வடபழநி :

இத்தகைய பழநியம்பதி, சென்னைக்குத் தெற்கே மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அங்கு எழுந்தருளித் தொன்னெடுங்காலமாகத் தன் அடியவர்களுக்கு அருள்புரிந்துவரும் அருள்மிகு பழநியாண்டவர், ''எங்கே நினைப்பினும் அங்கே வந்து எதிர் நிற்பனே'' என்று அருணகிரிநாதர் பாடியவாறு போல, நாமெல்லாம் உய்யும்பொருட்டு, நம் சென்னை மாநகரிலும், புலியூர்க் கோடலம்பாக்கம் என்னும் பகுதியில், அண்மைக்காலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்புரிந்து வருகின்ருர். அதனுல் தெற்கேயுள்ளது தென்பழநி என்றும், வடக்கே அமைந்தது வடபழநி என்றும் பெயர் பெறுவனவாயின. தென்மதுரை வடமதுரை, தென்காசி வடகாசி, தென்திருமுல்லைவாயில் வடதிருமுல்லைவாயில், தென்குரங்காடுதுறை வடகுரங்காடுதுறை, தென்திருநாகேச்சுரம் வடதிருநாகேச்சுரம் என்று முன்பே பல தலங்கள் இருத்தல்போன்று, தென்பழநி வடபழநி என்னும் தலங்களும், முருகனின் புகழ்மிக்க பெருந் தலங்களாகத் தெய்விகப் பொலிவுற்றுச் சிறந்து விளங்கி வருகின்றன.

வடபழநி என்னும் தலமும், அங்குள்ள பழநியாண்டவரின் திருக்கோயிலும், சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர், அண்மைக் காலத்திலேயே தோன்றியதாயினும், அவற்றின் அரு

ளாற்றல் நலங்களின் மிகுதியினால், மிக விரைவில் ஓங்கி வளர்ந்து செழித்துச் சிறப்புற்று வருகின்றது. தவப்பெருஞ் சான்றோர்களாகிய அண்ணாசாமித் தம்பிரான், இரத்தினசாமித் தம்பிரான், பாக்கியலிங்கத் தம்பிரான் ஆகிய பெருமக்களின் தவஅருள் வலிமையினால், இத் தலமும், கோயிலும் பல்வகைகளிலும் உயர்ந்தோங்கிப் பெரிதும் வளர்ந்து வருகின்றன.

> கண்டார்தம் மனங்கவரும் முண்டிதமாம்
> சிரத்தழகும், காணக் காணக்
> கொண்டாடத் தக்கதிரு நீற்றழகும்,
> கண்டிகையின் கோலச் சீரும்,
> பண்டாய நான்மறைக்கோ வணச்சிறப்பும்
> கொண்டு, வட பழநி மேவும்
> தண்டாயு தப்பெருமான் திருவடிக்கே
> அகழ்குழைந்து தழைந்து வாழ்வாம் !

என்று, தணிகைமணி திரு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், வடபழநியாண்டவரின் திருவுருவச் சிறப்பைப் புகழ்ந்து போற்றித் துதித்துள்ளார்.

**வடபழநியாண்டவர் அருள்மாட்சி :**

வடபழநியாண்டவர் தம்மை அன்புடன் வழிபட்டுவரும் அடியார்களுக்கெல்லாம் அளவற்ற நன்மைகளை அளித்து வருகின்றார். வடபழநிக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருமே, தத்தம் வாழ்க்கையில் எத்தனையோ பலவகையான நலங்களையும் வரங்களையும் பெற்று உய்ந்து வருகின்றனர். வடபழநியாண்டவர் அன்பர்களுக்குத் தீராத நோய்களையெல்லாம் தீர்க்கின்றார். போகாத கவலைகளையெல்லாம் போக்குகின்றார்; கல்வி தருகின்றார்; செல்வம் வழங்குகின்றார்; பதவியளிக்கின்றார்; புகழ் விளைவிக்கின்றார்;

பழநியாண்டவரை வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்ளும் பக்தர்கள், தமக்கு நேரும் இடர்களிலிருந்து விடுபடுகின்றனர்; இன்பப் பேறுகள் பலப்பல எய்தி மகிழ்கின்றனர். திருமணம் ஆகாத ஆண் பெண் இருபாலரும் திருமணம் நிகழப்பெறுகின்றனர். கணவனும் மனைவியுமாய்க் கலந்தினிது வாழாதோர், தம்குறைகள் நீங்கிக் காதலிற் களித்து வாழ்கின்றனர். மணவாழ்வு கூடியும், மக்கட்பேறின்றி வருந்துவோர் மக்கட் செல்வம் பெறுகின்றனர். குடும்பப் பூசல்களால் உள்ளம் குலைந்து கலங்கி வருந்துபவர், குடும்ப ஒற்றுமையுற்றுக் குலாவி மகிழ்ந்து வளமுற வாழ்கின்றனர்.

வடபழநியாண்டவர், தம்மை வணங்கி வழிபடும் பக்தர்களுக்கு, வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்தருள்கின்றார். உழவு கைத்தொழில் வாணிபம் முதலியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு, முறையே அவ்வவற்றின் தொழில் வளம் பெருகிச் சிறந்தோங்கச் செய்கின்றார். மாணவர்களுக்குத் தேர்வில் வெற்றிகளை வழங்குகின்றார். தத்தம் அலுவல்களில் பதவி உயர்வு எளிதாகவும் விரைவாகவும் கிடைக்கத் திருவருள்பாலிக்கின்றார். இங்ஙனமெல்லாம் வடபழநியாண்டவர் தம் பக்தர்களுக்குச் செய்து வரும் நலங்களுக்கு அளவேயில்லை. இவ்வுண்மையினை அன்பர்கள் தத்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் அனுபவித்துக் கண்டுணர்ந்து மகிழ்ந்து வருகின்றனர்.

**முடிவுரை :**

ஆதலின் அன்பர்கள் அனைவரையும் வடபழநிக்கு வாருங்கள்! அங்கே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பழநியாண்டவர் பெருமானைப் பக்தியுடன் பணிந்து நம்பி வணங்குங்கள்! நீங்கள் எல்லா நலங்களையும் பெறுவீர்கள்! வடபழநியாண்டவர் நும்மைக் கைவிடாது காப்பாற்றி அருள்புரிவார் என்று மிகவும் அன்புடன் அறைகூவி அழைக்கின்றோம். வருக! வருக! முருகன் அருள் பெறுக! பெறுக!

> சென்னைவட பழநியினில் திகழ்பழநி
> ஆண்டவர்தம் சிறப்பை எல்லாம்,
> நன்னர்எடுத்து ஆய்ந்தளந்து நவிலுதலும்
> இயலுமோ? நல்ல அன்பர்
> உன்னுவன எல்லாமும் உடன்ஒருங்கே
> நிறைவேற்றி உதவ வல்லார்
> என்னில், அவர் கலியுகத்தும் கண்கண்ட
> கடவுள்எனற்கு, ஐயம் என்னே !

— ஆசிரியர்.

---

( வேறு )

> தனம்தரும் ; கல்வி தரும்; ஒரு நாளும் தளர்வறியா
> மனம்தரும் ; தெய்வ வடிவம் தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
> இனம்தரும் ; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
> கனம்தரும் ; வள்ளல் வடபழநி ஆண்டார் கழல்இணையே !

( வேறு )

> அருளார் வடபழநி ஆண்டவர்தாம், அன்பர்
> இருளார் இடர்களெலாம் நீக்கிப், — பொருளார்
> புலமையார் என்றே பொலிந்தோங்கும் வாழ்க்கை
> நலம்அமையக் காப்பர் நயந்து.

— ஆசிரியர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புக்கள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.] (முற்றொடர்ச்சி)

## 39) ஆனூர் :

### அஸ்தபுரீசுவரர் கோயில்

செங்கற்பட்டிலிருந்து 10 கல்தொலைவில் உள்ளது. கோயிலின் பரப்பு 970 சதுர அடி. 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. நன்செய் நிலங்களிலிருந்து 75 மூட்டை நெல்லும், புன்செய் நிலத்திலிருந்து 600 ரூபாயும் கிடைக்கின்றது. ஆருத்திரா தரிசனவிழா மட்டும் நடைபெறுகின்றது. ஓர் அறங்காவலர் உள்ளார்.

## 40) தத்தலூர் :

### பிடாரிசெல்லியம்மன் கோயில்

செங்கல்பட்டிலிருந்து 11 கல் தொலைவில் உள்ளது. திருக்கழுக்குன்றத்திலிருந்து 3 கல். 10 செண்ட் நிலப்பரப்பில், 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. 1.50 ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டுக்கு 3 வண்டி நெல் வருவாய் கிடைக்கின்றது. அறங்காவலர் குழு ஒன்று இதனை நிர்வகித்து வருகின்றது.

## 41) விளாகம் :

### கரியமாணிக்கப்பெருமாள் கோயில்

ஒத்திவாக்கத்திலிருந்து 8 கல். 15 செண்ட் பரப்பு. 150 ஆண்டுகளுக்கு முற்பட்டது. நிலங்கள் மூலம் ஆண்டு வருவாய் ரூ. 1,000. ஒரு தனி அறங்காவலர் மட்டும் உள்ளார்.

## 42) சதுரங்கப்பட்டினம் :

### அ) திருவராகசுவாமி கோயில்

செங்கற்பட்டிலிருந்து 18கல். 80 செண்ட்பரப்பு. 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. திருமாங்கல்ய நகைமட்டுமே உள்ளது. நிலங்கள் கடைகள் மூலம் ஆண்டுவருவாய். 1030. மர வாகனங்களும் பல்லக்கும் உள்ளன. மார்கழியில் ஆருத்திரா, பங்குனியில் உத்திரம் ஆகிய விழாக்கள் மட்டும் நடக்கின்றன. ஒரு தனி அறங்காவலர் உள்ளார்.

### ஆ) ஏகாம்பரேசுவரர் கோயில்

250 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 80 செண்ட் பரப்பு. ஆண்டு வருவாய் ரூ.1000. பரம்பரை அறங்காவலர் உள்ளார். பங்குனி உத்திர உற்சவம் மட்டும் நடைபெறுகிறது.

## 43) மெய்யூர் :

### அ) ஆதிகேசவப் பெருமாள் கோயில்

1826-ஆம் ஆண்டில் நவாப் காலத்தில் கட்டப்பட்டது. பரப்பு 2 ஏக்கர். மூலவர் நின்ற கோலம். 1.75 ஏக்கர் நன்செய்யும் 1.86 ஏக்கர் புன்செய்யும் உள்ளன. ஆண்டு வருவாய் ரூ. 200. மாசிமக விழா மட்டும் நடைபெறுகிறது. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

### ஆ) வெள்ளீசுவரர் கோயில்

இக்கோயிலின் இலிங்கம் சுயம்பு. கோயிலின் பரப்பு 1.5 ஏக்கர். வெள்ளி என்னும் சுக்கிரன் இங்கு வழிபட்டு அருள் பெற்றார். குருக்களுக்கு 300 மரக்கால் ஆண்டு ஒன்றுக்குத் தரப்படுகின்றது. 4.40 ஏக்கர் நன்செய்யும், 3 ஏக்கர் புன்செய்யும், 40 செண்ட் தோட்டமும் உள்ளன. ஆண்டு வருவாய், ரூ. 775. ரிஷபம் குதிரை கேடயம் முதலிய மரவாகனங்கள் உள்ளன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

## 44) கருநிலம் :

### அ) கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

சிங்கப்பெருமாள் கோயிலில் இருந்து 4 கல். உந்தூர்திகள் செல்லுகின்றன. கோயிலின் பரப்பு 2 செண்ட். 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. நித்திய பூசை நடக்கின்றது. 6 ஏக்கர் புன்செய் நிலங்கள் உள்ளன. 4 வண்டி நெல் கிடைக்கின்றது. கிராம மக்களே இதனைப் பராமரிக்கின்றனர்.

### ஆ) இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பரப்பு 2 செண்ட். 6 ஏக்கர் புன்

செய் நிலங்கள் உள்ளன. நான்கு வண்டி நெல் கிடைக்கின்றது. தினமும் ஒருவேளை பூசை நடைபெறுகின்றது.

## 45) எடையூர் :

### பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயில்

ஒத்திவாக்கத்திலிருந்து 3 கல். 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பரப்பு 15 சென்ட், 6 வண்டி நெல் கிடைக்கின்றது. விழாக்கள் எதுவும் நடைபெறுவதில்லை. ஓர் அறங்காவலர் உள்ளார்.

## 46) ஆனூர் எலுமிச்சம்பட்டு :

### கந்தசுவாமி கோயில்

இக்கோயில் 4400 சதுர அடிப் பரப்புள்ளது. ஆனூர் அஸ்தபுரீசுவரர் கோயில் கட்டிய பொழுதே இதுவும் கட்டப்பெற்றது. கிருத்திகைகளில் உற்சவம் நடக்கின்றது. ஓர் அறங்காவலர் உள்ளார்.

## 47) வழுதாவூர் :

### அக்கினிபுரீசுவரர் கோயில்

ஒத்திவாக்கத்திலிருந்து 6 கல். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு காந்திமதியம்மாள் என்பவரால் கட்டப்பெற்றது. 1.92 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. 16 கலம் நெல் கிடைக்கின்றது. தினமும் பூசை நடைபெறுகிறது.

## 48) கீழ்ப்பாக்கம் :

### கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

இது படாளம் நிலையத்திலிருந்து 7 கல் தொலைவில் உள்ளது. 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 5 சென்ட் பரப்பில் அமைந்தது. இதற்கு வாகனங்களோ நகைகளோ இல்லை. 0.74 ஏக்கர் நிலம் மட்டும் உள்ளது. அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 6 கலம் நெல் கிடைக்கிறது. பரம்பரைப் பட்டாசாரியர் ஒருவர் தினமும் பூசை செய்து வருகின்றார். எப்பொழுதேனும் பக்தர்கள் பிரார்த்தனை செய்துகொண்டால் விழாக்கள் நடைபெறும்.

**(செங்கற்பட்டு வட்டக் கோயில்கள் முற்றும்)**

# காஞ்சிபுரம் வட்டம்

## 1. காஞ்சிபுரம் :

இது சென்னைக்குத் தென்மேற்கே 45 கல் தொலைவில், வேகவதி ஆற்றின் கரையில் உள்ளது. ''மலர்களில் முல்லையும், தேவமாதர்களில் அரம்பையும், அறங்களில் இல்லறமும் போல, நகரங்களில் காஞ்சிபுரம் தலைசிறந்து விளங்குகின்றது'' எனக் காளிதாசர் இதனைப் புகழ்ந்துள்ளார். 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்பது அப்பர் தேவாரம்.

கி. மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்நகரம் பெரும் புகழ்பெற்று விளங்கியிருந்தது. பதஞ்சலி முனிவரின் மகாபாஷ்யத்திலும், மணிமேகலை, பெரும்பாணாற்றுப்படை என்னும் சங்க நூல்களிலும், இந்நகரம் புகழப் பெற்றுள்ளது. கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசனின் தலைநகராக விளங்கியது. கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையில், இது பல்லவர்களின் தலைநகராக விளங்கியிருந்தது. கி. பி. 642-ஆம் ஆண்டில் யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் இந்நகரைப் பார்வையிட்டு இதனைப் புகழ்ந்துள்ளார். நாலந்தா பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்களாக விளங்கியிருந்த திக்கநாகர், போதி தருமர், தருமபாலர் முதலியவர்களும், சந்திர குப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி அர்த்த சாத்திரம் எழுதிய சாணக்கியர் என்னும் கௌடில்யரும், காஞ்சி மாநகரில், தோன்றியவர்களே யாவர். 10 முதல் 13 வரையுள்ள நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சியிலும், 14 முதல் 17 வரை விஜய நகர அரசர்களின் ஆட்சியிலும், பின்னர் படிப்படியே ஆங்கில ஆட்சியின் கீழும், இந்நகரம் இருந்து வந்தது. பொய்கை யாழ்வார், வேதாந்த தேசிகர், (கி. பி. 1268) ஆகியவர்களின் அவதாரத் தலம். திருமழிசை யாழ்வார் கணிகண்ணர், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமாநுஜர் முதலிய வைணவச் சான்றோர்கள் பலர் வாழ்ந்திருந்த தலம்.

திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் உலகளந்த பெருமாள் கோயிலில் அருச்சகராக விளங்கியவர் ஆவர். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் குமர கோட்டத்தில் அருச்சகராக விளங்கினார். சிவஞான சுவாமிகள் தம்து சிவஞான போதப் பேருரையை இங்குத் தங்கி இருந்த பொழுதே இயற்றினார்.

ஆதி சங்கரர், இங்குக் காமகோடி பீடத்தை நிறுவியருளினார். இங்குப் பெரிய காஞ்சிபுரத்தில் நிமந்தகாரத் தெருவில், தொண்டை மண்டல ஆதீன குருமகாசந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்களின் திருமடம் அமைந்திருக்கின்றது. அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் பட்டினத்தார் அருணகிரி நாதர் முதலிய சான்றோர்கள் பலரும், இத்தலத்தைப் பாடிப் போற்றியுள்ளனர். க-பிரமன்; அஞ்சித்தல்-பூசித்தல். பிரமன் பூசித்ததினால் இதற்குக் காஞ்சி எனப் பெயர் அமைந்தது என்பர். காஞ்சி என்னும் ஒருவகை மரம், வளர்ந்து நிறைந்த இடம் என்றும், நில மகளுக்குக் காஞ்சி என்னும் இடையணிகலனைப் போன்று திகழுவது என்றும், பொருள் கூறப் படுவதுண்டு. காஞ்சிபுரத்திற்குப் புவனசாரம். மும்மூர்த்தி வாசம், விண்டுபுரம், கலிசித்து, இலயசித்து, தபோமயம், பிரமபுரம், ஆதி பீடம், கன்னிகாப்பு, சிவபுரம், என வேறுபல பெயர்களும் உண்டு.

இங்குள்ள பாலிமேடு என்னும் இடத்தில், பல்லவர்களின் அரண்மனை இருந்தமைக்குரிய வரலாற்று அறி குறிகள் காணப்படுகின்றன.

## காமாட்சியம்மை கோயில்

மதுரையில் மீனாட்சியம்மை போன்று, காஞ்சியில் சிறப்புற்று விளங்கும் அம்பிகை, காமாட்சியம்மை யாவர். கா-கலைமகள்; மா-திருமகள். அட்சம்-கண். கலைமகளையும் திருமகளையும் தனக்குக் கண்களாகக் கொண்டவள் ஆதலின், காமாட்சி என அம்பிகை இங்குப் பெயர் பெற்று விளங்குகின்றாள்.

ஏனைய தலங்களைப்போல இல்லாமல், இங்கு அம்பிகை அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கின்றாள். அந்நிலையில், அவளது நான்கு திருக்கைகளிலும் முறையே, பாசம் அங்குசம் மலரம்பு கரும்புவில் என்பவற்றை ஏந்தியுள்ளாள். காமாட்சி அம்மையின் கோயில், காஞ்சி மாநகரின் நடுவில் உள்ளது. எல்லாக் கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும், காமாட்சியம்மையே நடுநாயகமாகத் திகழ்கின்றாள். கோயிற் கருவறையில் பிலாகாசம் என்னும் ஒரு புனித இடம் உள்ளது. அதன்கண் அம்பிகை, தவம் புரியும் நிலையில் விளங்குகின்றாள். அத்திருவுருவைத் 'தபசு காமாட்சி' என்பர். இவ்விடத்திற்குக் காமகோடிபீடம் என்பது பெயர். தன்னிடத்துச் செய்த காமிய தருமத்தை ஒன்று கோடியாகப் பெருகச் செய்வதினாலும், விருப்பம்(காமம்)மிக்க செல்வத்திற்குத் தலைவராகிய குபேரர்கள் போன்ற அனேகரைத் தோற்றுவித்து அருள் புரிதலாலும்; தன்னை வணங்கியவர்க்கு விருப்பம் (காமம்) தரும் பல வகைச் செல்வங்களைக் கோடி கோடியாக வழங்குவதனாலும்; தருமம் அர்த்தம் காமம் மோட்சம் என்னும் உறுதிப் பொருள் நான்கில், காமத்திற்குக் கோடியிலுள்ள வீடுபேற்றைத் தருவதாலும்; க-என்னும் பிரமனையும், அ என்னும் திருமாலையும், ம என்னும் உருத்திரனையும் கோடி முறை இறைவி தன் விழியிற் படைத்ததனாலும், இதற்குக் காமகோடி பீடம் எனப் பெயரமைந்தது என்று, திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான சுவாமிகள் தாம் பாடிய காஞ்சிப்புராணத்தின்கண் விளக்கி யிருக்கின்றார். இங்குள்ள திருக்குளம், உலகாணித் தீர்த்தம், பஞ்ச கங்கைத் தீர்த்தம் எனப் பெயர் பெறும்.

அம்பிகை இறைவன்பால் இரு நாழி நெல் பெற்று, இங்கு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளினள். அதற்கு இடையூறு செய்த பூதம் ஒன்றைத் திருமால் அடக்குகிறார். அதன் பொருட்டு அவர், நின்றான்-இருந்தான்-கிடந்தான் என்னும் மூன்று நிலைகளில், இத் தீர்த்தத்தின் கரையில் மூன்று அடுக்குகளாக உள்ள சந்நிதியில் எழுந்தருளி விளங்குகின்றார். ஒரு சமயம் திருமகள் திருமாலின்பால் ஊடல் கொண்டு, இங்கு வந்து அமபிகையை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருந்தாள். அப்போது திருமால் திருமகளைத் தேடிக்கொண்டு வந்து, ஒரு கள்வனைப் போல மறைந்து நின்று கண்டார். இருவரும் காமாட்சி யம்மையின் அருளைப் பெற்றுக் களித்து மகிழ்ந்தனர்.

இதற்கு அறிகுறியாகக் காமாட்சி அம்மையின் சந்நிதியின் வாயிலுக்கு அருகில், திருமாலுக்குக் 'கள்வனூர்' என்னும் ஒரு சந்நிதி அமைந்துள்ளது.

R RAJU
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE

இது மங்களாசாசனம் பெற்ற, வைஷ்ணவத்திருப்பதிகள் நூற்று எட்டனுள் ஒன்று. திருமங்கையாழ்வார் தமது பாடலில் இச் சந்நிதியைக் குறிப்பிட்டுள்ளார் (2059).

இக்கோயிலில் உலகாணித் தீர்த்தத்திற்கு அருகிலுள்ள உயரிய சபா மண்டபம், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியது.

நச்சித் தொழுவீர்கள்! நமக்கிது சொல்லீர்!
கச்சிப்பொலி காமக் கொடியுடன் கூடி
இச்சித்து இரும்பூளை இடங்கொண்ட ஈசன்,
உச்சித் தலையிற் பலிகொண்டுழல் ஊணே!

—சம்பந்தர்

## திருவேகம்பநாதர் கோயில்

சைவ சமய ஆசிரியர்கள் நால்வரும் பாடியது. கரிகால் சோழன் அமைத்தது. 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித்திருவேகம்பன் செம்பொற் கோயில்' என மாணிக்கவாசகர் இதனைப் புகழ்ந்துள்ளார். காமாட்சியம்மை மணலால் அமைத்து வழிபட்ட லிங்கமாதலின், இது பிருதிவித் தலம் என்பர்.

ஏகாம்பரநாதர் என்பதற்கு, ஒற்றை மாமரத்தின் அடியில் வீற்றிருப்பவர் (ஏகம் ஒன்று; ஆம்ரம்-மாமரம்) என்பது பொருள். வேதங்களே மாமரமாக விளங்குகின்றன என்பது ஐதிகம். கந்த புராணம் குறிப்பிடும் விகடசக்கர விநாயகர், ஆயிரக்கால் மண்டபத்துக் கோபுரத்தின் கீழ் விளங்குகின்றார். இக் கோயிலினுள் 'நிலாத் திங்கள் துண்டம்' என்னும் வைணவத்தலம் உள்ளது. சிவகங்கை, கம்பைநதி என்னும் இரு தீர்த்தங்கள், கோயிலின் வெளிப் பிராகாரத்தில் உள்ளன. இங்கு ஒரு சந்நிதியில் 1008 இலிங்கங்கள், ஒரே இலிங்கத்தில் அமைந்துள்ளன. ஆட்சன் (*Hodgson*) என்னும் கலெக்டர், இக்கோயிலில் திருமதில் திருப்பணி நடைபெறுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தார். அவரின் நினைவாகத்தான், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' என்று ஒரு பகுதிக்குப் பெயர் ஏற்படுவதாயிற்று.

திருவேகம்பர் கோயிலின் கொடிமரத்திற்கு அருகில் கச்சிமயானம் என்னும் பாடல் பெற்ற தலமுள்ளது. அதற்குக் கிழக்கே வாலி வழிபட்ட வாலீச்சரம் உள்ளது. காமாட்சியம்மை வழிபட்ட மூலலிங்கத்திற்குத் தெற்கில், பிரமன் வழிபட்ட வெள்ளக் கம்பம், வடக்கில் திருமால் வழிபட்ட கள்ளக்கம்பம், உருத்திரன் வழிபட்ட நல்லகம்பம் ஆகியவை உள்ளன. இதன் கோபுரம் 192 அடி உயரம்

உள்ளது. கி. பி. 1516 இல் கிருஷ்ணதேவ ராயர் இதனைக் கட்டினார்.

முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070), இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146), இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133) மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178) முதலிய பல அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுகின்றன.

மறையானை, மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப், பெண்ணொடு ஆண்ஆகிய பெம்மானை,
இறையானை, ஏர்கொள் கச்சித் திருஏகம்பத்து
உறைவானை, அல்லது உள்காது எனதுள்ளமே.
—சம்பந்தர் (1)

ஆகம்பத்து அரவணையான் அயன்அறிதற்கு
அரியானைப்,
பாகம்பெண் ஆண்பாகமாய் நின்ற பசுபதியை,
மாகம்ப மறைஓதும் இறையானை, மதிற்கச்சி
ஏகம்பம் மேயானை, என்மனத்தே வைத்தேனே
—அப்பர் (2)

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை,
பெண்ணொடுஆண் என்று பேசற்கு அரியவன்;
வண்ணம் இல்லி, வடிவு வேறுயவன்,
கண்ணி னுள்மணி கச்சி ஏகம்பனே! —அப்பர் (3)

## வரதராசப் பெருமாள் கோயில்

கஜேந்திரன் என்னும் யானையே மலை வடிவாக அமைந்து நிற்க, அதன் மீது இங்குப் பெருமாள் எழுந்தருளியிருப்பதாக ஐதிகம்.

ஆதலின் இது அத்திகிரி, அத்தியூர் என வழங்கப்பெறும். 'அத்தியூரான் புள்ளையூர் வான்' என்பது பூதத்தாழ்வார் பாடல். சுவாமி தேவராஜர், தேவாதிராஜர், பிராணதார்த்தியரர், பேரருளாளர், அருளாளப் பெருமாள். அம்பாளின் பெயர் பெருந் தேவித்தாயார் என்று வழங்கப்படும். நின்ற திருக்கோலம். படைப்பாற்றலைப் பெறுவதற்காகப் பிரம தேவர் இங்கு வேள்வி புரிந்து அருள் பெற்றார்.

பிரமன்பால் ஊடல்கொண்ட சரசுவதி தேவி, பெருநீர் வெள்ளமாகப் பெருகி வேள்வியை அழிக்க முயன்றாள். அவள் நதி வடிவம் கொண்டு வேகமாக ஓடி வந்ததனால் ஆற்றுக்கு வேகவதி எனப் பெயர் வந்தது. பிரமதேவரின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருமால், திருவெஃகா யதோக்தகாரி எம்பெருமானாகக் குறுக்கே பள்ளி கொண்டு, வேகவதியின் வெள்ளத்தைத் தடுத்துப் பிரமனுக்கு அருள் புரிந்தார். பிரமனின் வேள்வியிலிருந்து புண்ணிய கோடி விமானம் தோன்றியது. அப்புண்ணிய கோடி விமானத்திலேயே வரதராசர் எழுந்தருளி விளங்குகின்றார். கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்கள் உள்ளன. அவைகள் முதலாம் வேங்கடபதி, இரண்டாம் வேங்கடபதி (கி.பி. 1575-1642) அரசர்களால் கட்டப்பெற்றன. கோயிலின் கருவறையை அடைவதற்கு 24 படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டும், 24 எழுத்துக்கள் கொண்ட காயத்திரி மந்திரத்தையும், 24 தத்துவங்களுக்கு மேல் 25-ஆம் தத்துவமாகப் பரவாசுதேவன் ஆகிய திருமால் விளங்குகின்றார் என்னும் தத்துவ நுட்பத்தையும், இவ்வமைப்பு உணர்த்துகின்றது. இங்கு ஐந்து பிராகாரங்கள் உள்ளன. வரதர் மேற்கு நோக்கியுள்ளார். அத்திகிரியின் கீழ் உள்ள குகையில் அழகிய சிங்கரும், ஹரி தார்த்ததேவியும் விளங்குகின்றனர். கோயிலின் நூற்றுக்கால் மண்டபம் சிற்ப அழகு மிக்கது. அது விசய நகர அரசர்கள் கட்டியது. அதன் வடக்கே உள்ள குளம் அனந்த தீர்த்தம். கொடிக் கம்பம் ஒரே கல்லில் 100 அடி உயரம் உடையது. ஐந்து பிராகாரங்களையுடைய இக் கோயில் 23 ஏக்கர் நிலப்பரப்புடையது. கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த இராபர்ட் கிளைவ் நவரத்தின மாலையும், லியோனார்ட் பிளேசு நவரத்தின கிரீடமும் போன்ற, விலை மிகுந்த அணிகலன்களைச் சுவாமிக்கு வழங்கியுள்ளனர். ''காசி முதலாகிய நன்னகரி எல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா'' என்பர் வேதாந்த தேசிகர்.

அத்தி யூரான், புள்ளை ஊர்வான், அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான், —முத்தீ
மறையாவான், மாகடல் நஞ்சுண்டான் தனக்கும்,
இறையாவான் எங்கள் பிரான்.

## கச்சிநெறிக் காரைக்காடு

இத்தலம் இக்காலத்தில் திருக்காலி மேடு என மருவி வழங்கி வருகின்றது. காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத்திற்குத் தென் கிழக்கே முக்காற் கல் தொலைவில் உள்ளது. இதற்குச் சத்திய விரத க்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு. இங்கே ''மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்'' உள்ள சிவபெருமான், சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத்திய சங்கற்பர், சத்தியகாமர், சத்திய விரதர் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றார். முன்னொரு காலத்தில் சிபி என்னும் அரசன் இத்தலத்தை வழிபட்டு இந்திர பதவி பெற்றான். இந்திர பதவியிலிருந்த அவன் தேவர் உலக இன்பங்களில் திளைத்து மகிழ்ந்த பிறகு, அவ்வின்பம் தெவிட்டி உவர்ப்பு அடைந்து, வீடுபேறு எய்த விரும்பி நின்றான். அதனால் தேவர்களின் குருவாகிய பிருகற்பதி பகவானை அழைத்து, வீடு பேறு எய்துதற்குரிய நெறியை அறிவிக்குமாறு வினவி, அவரது அறிவுரையின்படி இங்கு வந்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றான். அவனால் அமைக்கப் பெற்ற தீர்த்தம் 'இந்திர தீர்த்தம்' என வழங்குகின்றது. முன்னொரு காலத்தில் சந்திரனின் மகனாகிய புதன், இங்கு வந்து சிவபெருமானை வழிபட்டு முதன்மை மிக்க கிரகங்களுள் ஒன்று ஆகும் பேறு பெற்றான். ஆதலின் இந்தத் தலத்திற்குப் புதன் கிழமை சிறப்புடைய ஒரு நாளாகும். இத்தலத்தில் விநாயகர், அம்பிகை, முருகப் பெருமான் முதலியவர்களும், இறைவனை வழிபட்டு மகிழ்ந்தனர். இத்தலத்தைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். ஒரு காலத்தில் காரைச்

செடிகள் அடர்ந்து காடு போல வளர்ந்திருந்ததனால், இத்தலத்திற்குக் 'கச்சி நெறிக் காரைக் காடு' எனப்பெயர் ஏற்பட்டது.

ஏழ்கடல்சூழ் தென்இலங்கைக் கோமானை
எழில்வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியதோர் தன்மையினர்,
நன்மையினர்,
ஆழ்கிடங்கும் சூழ்வயலும் மதில்புல்கி அழகமரும்
நீண்மறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே!
—சம்பந்தர்

### மணிகண்டீசுவரம்

இது காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத்திற்கு மிக அருகில், திருக்கச்சி நம்பி தெருவில் உள்ளது. திருப்பாற் கடலினின்று தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சினை, உலகத்து உயிர்களும் தேவர்களும் எல்லாம் உய்வதன் பொருட்டுத், தமது பெருங் கருணையினால் சிவபெருமான் உண்டருளி, அதனைத் தமது கண்டத்தின்கண் தம்முடைய அருட்டிறனுக்கு அறிகுறியாக நிறுத்தி வைத்தருளினர். அதனால் அவரது கண்டம் நீலமணி போலும் நிறமுடையதாயிற்று. எனவே அவருக்கு மணிகண்டீசுவரர் என்று பெயர் ஏற்படுவதாயிற்று. இத்தலத்தைத் தேவர்கள் அனைவரும் வழிபட்டுத் தொழுது அமுதம் உண்ணும் பேறு பெற்றனர்.

### புண்ணிய கோடீசுவரம்

இது மணிகண்டீசுவரத்திற்குத் தெற்கே காற் கல் தொலைவில் உள்ளது. திருமால் இங்கு வழிபட்டுக் காத்தற்றொழில் புரிவதற்கு மட்டுமேயன்றிப், படைத்தற் றொழில் இயற்றவும் ஆற்றல் பெற்றனர். இங்குள்ள திருக்குளத்திலேயே, தம்மை வழிபட்டு வந்த கஜேந்திரன் என்னும் யானையின் காலைப் பற்றிய முதலையைத் திருமால் தமது சக்கரப்படையை ஏவிக் கொன்று அருள் புரிந்தார். அதனால் இங்குள்ள தீர்த்தம் 'கஜேந்திர தீர்த்தம்' எனப்பெயர் பெறும்.

### சிவாத்தான ஈசுவரம்

இது புண்ணிய கோடீசுவரத்திற்குக் கிழக்கில் அரைக்கல் தொலைவில், மிகவும் பாழ்பட்டுச் சிதைந்த நிலையில் உள்ளது. பிரமதேவர் இத்தலத்திற்கு வந்து பாசுபத விரதம் பூண்டு, பிரமீசர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பிரமதீர்த்தம் என்னும் திருக்குளத்தை அமைத்து, சோம யாகம் செய்து சிவபெருமானை வழிபட்டு, உலகங்களைப் படைக்கும் ஆற்றலைப் பெற்றார். தாம் யாகம் செய்த இவ்விடத்தைச் சிவபெருமான் தமக்குரிய இருப்பிடமாக ஏற்றுக் கொண்டு எழுந்தருளி, அடியவர்களுக்கு அருள் புரிந்து வருமாறு பிரம தேவர் வேண்டிக் கொண்டதினால், பிரம ஆஸ்தானம் என்பது மாறிச் சிவஆஸ்தானம் (சிவாத்தானம்) என வழங்கப் பெறுவதாயிற்று.

### சார்ந்தாசய ஈசுவரம்

இத்தலம் சிவாத்தான ஈசுவரத்திற்கு அரைக் கல் தொலைவில் உள்ளது. முன்னொரு காலத்தில், காசியில் வாழ்ந்திருந்த முனிவர்கள் வேத வியாச முனிவரை வணங்கித் தொழுது, வேத முடிவாயுள்ள பொருள் எது என்பதனை விளக்கிச் சுருக்கித் தெள்ளத்தெளியச் சொல்லியருள்க என வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர் ''நாராயணன் ஒருவனே பரப்பிரம்மம், ஏனையர் அன்னர் அல்லர்'' என்பதே, அனைத்து நூல்களும் ஆராய்ந்து கூறும் உண்மை என்று, காசி விசுவநாதப் பெருமானை இகழ்ந்தது போன்ற குறிப்பு அமையக் கூறினர். அப்போது திருநந்திதேவர் அவரைச் சினந்து, விசுவரூபன் விசுவாதிகன் விசுவார்ந்தர்யாமி, விசுவசேவியன், விசுவநாதன் என விளங்கும் சிவபெருமானை இகழ்ந்த குற்றம் நீங்க, காசியின் மேம்பட்ட காஞ்சியிற் சென்று சிவபெருமானை வழிபடுமாறு பணித்தனர். அதன்படியே வேதவியாசர் காஞ்சியை அடைந்து, மஞ்சள் நதிக்கரையின் பக்கத்திலுள்ள மணிகண்டீசுவரத்திற்கு நிருதிதிக்கில் சார்ந்தாஸ்ரய லிங்க ஈஸ்வரர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார். ''சார்ந்தாஸ்ரய ஈசுவரர்'' என்னும் தொடர் தம்மைப் புகலிடமாகக் கொண்டு சார்ந்தவர்களுக்குத் துணையாகத் திகழ்பவர் எனப் பொருள்படும் (ஆஸ்ரயம்-புகலிடம்), இஃது, இந்நாளில் ''சாந்தாலேசுவரர் கோயில்'' என மருவி வழங்குகின்றது.

### பணாதர ஈசுவரம்

இது பணாமணீசம் எனவும் வழங்கும், இது ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. இஃது ஆயிரம் பணாமணிகளையுடையதாகிய ஆதிசேடன் வழிபட்டு அருள் பெற்ற தலம். (பணம்-படம், மணி-இரத்தினம், ஆயிரம் தலைகளையும், அவற்றில் இரத்தினங்களையும் உடையவன் ஆதிசேடன். ஆதலின் அவனுக்குப் பணாதரன், பணாமணீதரன் என்பது பெயர்).

### முத்தீசுவரம்

இத்தலம், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' (*Hodgson Pet*) என வழங்கியிருந்த காந்தி சாலையில், அறுவை வாணிகர் அறச்சாலைக்கு அருகில், பணாதரீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கிலுள்ளது. காசிப முனிவர்க்குக் கத்துரு, வினதை (சுபருணை) என மனைவியர் இருவர் இருந்தனர். அவ்விருவரும் தங்களுக்குள், அழகிற் சிறந்தவர் யார்? என விவாதித்து, கணவராகிய காசிப முனிவரிடம் சென்று தங்கள் இருவருள் அழகிற் சிறந்தவர் யார் எனக் கூறுமாறு வேண்டினர். அவர் கத்துருவே அழகிற் சிறந்தவள் என்று தீர்ப்புரை வழங்கினார். வினதை தோல்வியுற்றாள். ஒப்பந்த நிபந்தனையின்படி, கத்துரு வினதையைச் சிறையிலிட்டாள். அவள் காஞ்சிபுரத்தை வந்து அடைந்து, ஆதிபிதேச்சரத்திற்கு வடகிழக்கிலுள்ள முத்தி ஈசுவரர் கோயிலை வழிபட்டு,

கருடனை மைந்தனுகப் பெற்றுச் சிறைநீங்கும் வரத்தைப் பெற்றுள். வினதையும் கருடனும் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர். இது, சைவசமயத்தைச் சார்ந்த வரும், அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒரு வரும், ஏகாலியர் குலத்தவரும் ஆகிய திருக் குறிப்புத் தொண்டநாயனுர் அன்புடன் வழி பட்டு முத்திபெற்ற தலம்.

### பராசரேசுவரம்

இது காஞ்சிபுரத்தில் காந்தி சாலையிலுள்ள வழக்கறுத்தீசுவரர் கோயிலின் உள்ளே உள் ளது. வசிட்ட முனிவரின் புதல்வராகிய பரா சரமுனிவர், தமது பாட்டனுர் ஆகிய வசிட்ட முனிவர்பால் பகைமை கொண்ட விசுவாமித் திர முனிவர், தமது தந்தைமார்களாகிய சக்தி முதலிய நூற்றுவரைச், சுதாசனன் என்னும் அசுரப் பிறப்படைந்த அரசனைக் கொண்டு கொன்று ஒழித்த செய்தியைத், தன் தாயினுல் உணர்ந்தார். அதனுல் மிக்க துக்கமும் சின மும் அடைந்து, கொடியவர்களாகிய அசுரர் களை ஒழிக்க உறுதி கொண்டு, அசுரர்களைக் கொல்வதற்குரிய இரட்சோகனம் என்னும் யாகம் புரிந்து, பராசரர் இறைவனை வழி பட்டு அருள் பெற்றதலம் இது.

### திரிகாலஞானேசுவரம்

இக்கோயில், காஞ்சிபுரம் பேருந்து நிலை யத்திற்குள், மதுரன் தோட்டம் என வழங்கிய இடத்தில் அமைந்துள்ளது. முனிவர்கள் பலர் தாம் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலத்திலும் நடைபெறும் நிகழ்ச்சி களை அறிந்து கொள்ளும் அறிவு பெறுதற் பொருட்டு வழிபட்டதலம். அண்மையில் இச்சிறிய கோயில் திருப்பணி செய்யப் பெற்று நன்கினிது நடைபெற்று வருகின்றது.

### சப்த ஸ்தானம்

முற்காலத்தில் அத்திரி, குச்சன், வசிஷ் டன், பிருகு, கௌதமர், காசிபர், அங்கிரசு என்னும். ஏழு முனிவர்கள் முத்திபெற விரும்பி னர். அவர்கள் தமக்குப் பிரமதேவன் அறி வித்தபடி காஞ்சியை அடைந்து சிவகங்கை யில் முழுகி, மஞ்சள் நதிக்கரையில், சார்ந்தா சயத்திற்கு அருகில் தங்கள் பெயரால் ஒவ் வோர் இலிங்கம் தாபித்துப் பூசித்தனர். அந்த ஏழு இலிங்கங்களும் அமைந்துள்ள கோயிலே ''சப்த ஸ்தானம்' என வழங்கி வருகின்றது (சப்தம், சத்தம்-ஏழு, ஸ்தானம்- இடம்).

### தக்கேசம்

இத்தலம் பிள்ளையார் பாளையத்தில், நடுத்தெரு என்னும் கச்சியப்பன் தெருவில் உள்ளது. பிரமதேவனின் புதல்வனுகிய தக் கன் என்பவன், அகங்காரத்தினுல் சிவபெரு மானை இகழ்ந்து அவமதித்து, ஒரு வேள்வி செய்யத் தொடங்கினுன். அங்ஙனம் செய்தலா காது என்று தடுத்துத் ததீசி முனிவர் அவனுக் குப் பல அறிவுரைகள் கூறினர். ஆயினும் அவன் கேளாமல் அவ்வேள்வியைச் செய்ய முற்பட்டான். அதனைக் காணுவதற்கு வந்த தன் மகளாகிய அம்பிகையையும் அவமதித்து இகழ்ந்தான். அதனுல் வீரபத்திரரும், பத்திர காளியும் தோன்றி, அவ்வேள்வியை அழித்து, அதற்கு வந்திருந்த தேவர்களையும் தண்டித்த னர். வீரபத்திரர் தக்கனது தலையை வெட்டி வீழ்த்தினர். பின்னர் அவன் ஆட்டுத் தலை யைப் பெற்றுன்.

அவன் தனது குற்றமுணர்ந்து அது தீரு தற்பொருட்டுச் சிவலிங்கம் தாபித்து வழி பட்டு உய்திபெற்ற இடமே, தக்கேசம் எனப் படும்.

### காயாரோகண ஈசுவரம்

இத்தலம் பிள்ளையார் பாளையத்தில், புதுப்பாளையத் தெருவின் கோடியில் வேக வதி ஆற்றின் கரையிலுள்ளது. இக்கோயி லுக்கு அருகே மாத்தூர் சுவாமிகள் மடம், மெய்கண்டார் ஆதீனத் திருமடம் முதலியன உள்ளன. காசி விநாயகர் கோயில், சிந்தா மணி விநாயகர் கோயில் என்பனவும், இவ்விரு மடங்களுக்கு அருகில் இருக்கின்றன. மனித வருடங்கள் 17,28,000 கொண்டது கிரேதா யுகம், 12,96,000 கொண்டது திரேதாயுகம், 8,64,000 கொண்டது துவாபரயுகம், 4,32,000 கொண்டது கலியுகம். ஆக 43,20,000 கொண்டது ஒரு சதுர்யுகம்.

இத்தகைய சதுர்யுகம் ஆயிரம் கொண் டது பிரமதேவருக்கு ஒரு பகல். இம்முறை யில் நூறு ஆண்டுகள் கழிந்தால், ஒரு பிரம தேவர் இறப்பார். ஒரு பிரமாவின் காலம் திருமாலுக்கு ஒரு பகலாகும். இம்முறையில் நூறு ஆண்டுகள் கழிந்தால், ஒரு திருமால் இறப்பார். இங்ஙனம் இருவரும் இறக்க வரும் ஒவ்வோர் ஊழியின் முடிவிலும், சிவ பெருமான் அவர்களைத் தம்முள் ஒடுக்கி, அவர் களின் உடலைத் தமது தோள் மேல் தாங்கி நடனம் செய்தருளுவார். சிவபெருமான், பிரம விஷ்ணுக்களின் காயத்தை ஆரோகணம் செய்து கொள்ளும் தலமாதலின், இதற்குக் 'காயாரோகணம்' எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள தீர்த்தம் 'காயாரோகண தீர்த்தம்' 'காயார் குளம்' என வழங்கும். இத்தலத்தில் மகாலட்சுமி இறைவனை வில்வத்தால் வழி பட்டுத் திருமாலைத் தனக்குக் கணவனுகப் பெற்றுள். தேவ குருவாகிய பிருகற்பதி பக வான் இங்கு இறைவனை வழிபட்டார். ஆத லின் வியாழக் கிழமையன்று, காயாரோகண தீர்த்தத்தில் நீராடி, இங்கு வழிபடுபவர்கள், இம்மை மறுமை வீடு என்னும் எல்லா நன்மை களையும் பெறுவார்கள். இயமன் இங்குப் பூசித்துத் தென்திசைக்குத் தலைவனுகும் பேறு பெற்றுன். ஆதலின் இங்குள்ள காயா ரோகண தீர்த்தத்தில் பிதிரர்கடன் செய்வது மிகவும் சிறப்பாகும்.

## சித்தேசுவரம்

இது, காஞ்சிபுரத்தில், இராஜாம் பேட்டைத் தெருவில் உள்ளது. காமாட்சியம்மை கம்பையாற்றங்கரையில் தவம் புரியுங்கால் மஞ்சள் காப்பணிந்து முழுகியநீர், மஞ்சள்நீர் நதியாகப் பெருகியது. சிவ பெருமான் மகிழ்ந்து அந்த நதிக்கரையில் இலிங்கமாகத் தோன்றியருளினார். அவருக்கு 'மஞ்சள் நீர்க் கூத்தர்' என்னும் திருப்பெயர் உண்டாயிற்று. அப்பெருமானைப் பற்பல சித்தர்கள் பூசித்து எண்ணிறந்த சித்திகளை அடைந்தார்கள். அதனால் சித்தேசர் என்னும் பெயர் இப்பெருமானுக்கு ஏற்பட்டது. சித்தேசுவரர் திருமுன்பில், கச்சேரித் தெருவில் 'சித்த தீர்த்தம்' என்னும் கிணறு ஒன்று உள்ளது. அதில் ஞாயிறு, சனிக்கிழமைகளில் முழுகி வழிபடுபவர்கள், எல்லா நலன்களும் எய்துவார்கள்.

## அரிசாப பயந்தீர்த்த ஈசுவரம்

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் தெற்கு வரிசையில் உள்ளது. முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் ஏற்பட்டது. திருமால் தேவர்களுக்குத் துணையாகச் சென்று அசுரர்களை எதிர்த்தார். அசுரர்கள் அஞ்சிப் பிருகு முனிவரின் மனைவியும், இலக்குமி தேவியின் அன்னையுமாகிய, கியாதி என்பவள்பால் அடைக்கலம் புகுந்தனர். அசுரர்களுக்குத் துணை புரிந்ததனால் திருமால் தமது சக்கரப் படையை ஏவிக் கியாதியைக் கொன்றார். அதனால் பிருகுமுனிவர் மிக்க சீற்றம் கொண்டு, நிலவுலகில் பத்துப் பிறப்புகள் அடையுமாறு திருமாலுக்குச் சாபம் கொடுத்தார். அதனால் திருமால் மிகவும் மனம் வருந்தி, காஞ்சியை அடைந்து திருவேகம்பரைத் தவம் புரிந்து வழிபட்டார். சிவபெருமான் வெளிப்பட்டு, ''எனது அடியார்கள் இட்ட சாபத்தை மாற்றுதல் யார்க்கும் அரிது; அதனை அனுபவித்தே ஆதல் வேண்டும்; ஆயினும் எம்மை வழிபட்டதனால் நீர் அடையும் பத்துப் பிறவிகளும் உலகுக்கு நன்மை பயக்கும்'' என்று அருளிச்செய்து, திருமாலின் அச்சமும் கவலையும் போக்கினார். அதனால் இவருக்கு 'அரிசாப பயந்தீர்த்த ஈசுவரர்' எனப் பெயராயிற்று.

## மதங்கேசம்

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் கிழக்குக் கோடியில் இறையூழிய மருத்துவ மனைக்கு (Misson Hospital) எதிரில் உள்ளது. இங்கேயுள்ள சிவலிங்கம் மிகப்பெரியது. ஐம்புலன்களை அடக்கி ஆளும் ஆற்றல் பெறுதற் பொருட்டு மதங்கமுனிவர் வழிபட்ட தலமாதலின் இதற்கு மதங்கேசுவரம் எனப்பெயர் அமைந்தது.

## அபிராமேசம்

இக்கோயில் உலகளந்தார் சந்நிதித்தெருவில், சங்குபாணி விநாயகர் கோயிலுக்கு எதிரில் உள்ளது. திருமால் வாமனராகி மகாபலியை அழிக்கும் பொருட்டு இத்தலத்தை வழிபட்டார். தேவேந்திரனின் யானையாகிய ஐராவதத்திற்குப் பெண்யானையாகிய அபிராமம், பூசித்ததினால், இதற்கு அபிராமேசம் எனப் பெயர் வந்தது.

## ஐராவதேசுவரம்

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் மேற்குக் கோடியில், கச்சபேசுவரர் கோயிலின் எதிரில் உள்ளது. இராசசிம்ம பல்லவமன்னன் (கி. பி. 685-705) கட்டியது. இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்னும் வெள்ளையானை இங்கு வழிபட்டு யானைகளுக்கெல்லாம் தலைமை பெற்றதுடன், தேவேந்திரனுக்கு வாகனமாகும் சிறப்பையும் அடைந்தது.

## இஷ்டசித்தீச்சுரம்

இந்தத்தலம் பெரிய காஞ்சிபுரம் இராச வீதியில் இருக்கின்ற கச்சபேசுவரர் கோயிலின் உள்ளே இருக்கின்றது. ஒரு காலத்தில் பிருகு முனிவர் குலத்தில் தோன்றிய ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புக்கொண்டு வாழ்ந்து வந்தார். ஒருநாள் இவர்களிடையே அந்தணர்-அரசர் என்னும் இருவரில், யார் சிறந்தவர் என்று சர்ச்சை எழுந்தது. ததீசி அந்தணரே சிறந்தவர் என்றார், குபன் அரசரே சிறந்தவர் என்றான். இருவருக்கும் பூசல் மிகுந்தது. அரசன் வெகுண்டு முனிவரை வாளால் இரண்டு துண்டாக வெட்டினான். வெட்டுண்டு விழுங்கால், ததீசி முனிவர் மந்திர ஆற்றலில் வல்ல அசுரகுருவாகிய சுக்கிரனை நினைத்தார். சுக்கிரர் தோன்றி வெட்டுண்ட உடலைப் பொருத்தி முனிவரை எழுப்பினார். ''காஞ்சியிலுள்ள இஷ்டசித்தீசப் பெருமானை வழிபட்டே, இறந்தவரை உயிர்ப்பிக்கும் மிருத சஞ்சீவினி என்னும் மந்திரத்தை யான் பெற்றேன். இஷ்ட சித்தீசுவரத்திற்குத் தென்பால் 'இஷ்ட சித்தி தீர்த்தம்' உள்ளது. அதில் மூழ்கிப் பிரமனும் சரசுவதியும் படைத்தற்றொழிலும், சத்திய லோக வாழ்வும் பெற்றனர். சூரியன் தேவ உருவமான உடலும், ஆயிரம் கதிர்களும் பெற்றான். திருமாலும் இலக்குமியும் காத்தற்றொழிலும், வைகுண்ட வாழ்வும் பெற்றனர். அம்பிகை இறைவனின் திருமேனியில் பாதியாகக் கலந்தார். குபேரன் இழந்த கண்களைப் பெற்று இறைவனுக்குத் தோழனாயினன். துச்சருமேஎன் என்பவன் ஊர்வசியின் இன்பம் பெற்றான். கண்ணபிரானின் புதல்வனாகிய சாம்பன் என்பவன், தொழுநோய் தீர்ந்து நலமடைந்தான். நளனும், பஞ்ச-பாண்டவர்களும் இதில் மூழ்கித் தமது பகைவர்களை வென்று இழந்த அரசைப் பெற்றார்கள். இத்தீர்த்தத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் மூழ்குதல், சிறப்பாக வைகாசி மாசி கார்த்திகை ஆடி என்னும் மாதங்களில் மூழ்குதல் பெருநலம் பயக்கும்'' என்று சுக்கிராசாரியார் கூறினார். அதன்படி ததீசி முனிவர் இங்கு வந்து, இஷ்டசித்தீசத்தில் மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனியை வழிபட்டு வச்சிரயாக்கை பெற்றனர். குபன்

என்னும் அரசனையும் அவனுக்குத் துணையாக வந்த திருமாலையும் வென்றனர்.

### கச்சபேசுவரம்

இத்தலம் பெரிய காஞ்சிபுரம் இராஜ வீதியில், வடக்கு நோக்கிய கோபுர வாயிலுடன் விளங்குகின்ற, ஒரு சிறந்த பெரும் கோயிலாகும். இக்கோயிலின் உள்ளேயிருக்கும் இஷ்டசித்தீச்வரத்திற்குத் தெற்கில் சச்சமேசுவரர் எழுந்தருளியுள்ளார். ஒரு காலத்தில் ஊழியின் முடிவில் உலகங்கள் அழிந்தபோது இங்குச் சிவபெருமான் சோதிலிங்கமாகத் தோன்றி உலகங்களைப் படைத்தார். பிரமன் சரசுவதியுடன் அவரைப் பூசித்துப் படைத்தற்றொழிலில் தலைமையைப் பெற்றான். தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தபோது மத்தாகிய மந்தர மலை கடலில் அமிழாமல் மிதக்கும்படி, திருமால் ஆமையாக இருந்து தாங்கி, தேவர்கள் அமுதம் பெறத் துணை புரிந்தார். கச்சபம் என்னும் ஆமையின் வடிவம் கொண்டு திருமால் வழிபட்டதனால் இங்குள்ள இறைவனுக்குக் 'கச்சப ஈசுவரர்' என்ற பெயர் வந்தது. துர்க்கை அய்யனார் சூரியன் வைரவர் விநாயகர் முதலியவர்களும் கச்சபேசுவரரை வழிபட்டு அருள் பெற்றனர். இங்குள்ள 'சத்திய மொழி விநாயகர்' வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரும் வள்ளலாக விளங்கி வருகின்றனர். கச்சபேசுவரத்திற்கு முள்முருக்கமரம் தலவிருட்சம் ஆகும்.

### சுரகரேசுவரம்

இது திருவேகம்பநாதர் சந்நிதித் தெருவில் உள்ள கோயில். மிகப் பழமை வாய்ந்தது. பல்லவர் காலத்தது. தூங்கானை மாட அமைப்பை உடையது. ஒரு சமயம் தேவர்கள் அனைவருக்கும் கொடிய வெப்பு நோயாகிய 'சுரம்' ஏற்பட்டது. அப்போது அவர்கள் அனைவரும் இங்கு வந்து சுரகர தீர்த்தத்தில் மூழ்கித் தமது சுரம் நீங்கப் பெற்றனர். சுராக்கன் என்னும் அசுரனை இங்குச் சிவபெருமான் அழித்தருளினார். சுரநோயினால் வருந்துபவர்கள் சுரகரேசரை வணங்கினால் அந்நோய் நீங்கி நலம் பெறுவர்.

### தான்தோன்றீசுவரம்

இது சுரகர தீர்த்தத்திற்குத் தெற்கில் உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு மூர்த்தமாகத் தானே தோன்றியது. ஆதலின் 'தான் தோன்றி ஈசுவரர்' எனப் பெயர் பெற்றார். வியாக்கிரபாத முனிவர். வசிட்ட முனிவரின் தங்கையை மணந்து பெற்ற உபமன்யு என்னும் சிறுகுழந்தை, வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து வந்தது. பின்னர் அது தன் தந்தையாகிய வியாக்கிரபாத முனிவரின் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றது. அங்குப் பசுவின் பால் கிடைக்காமையால் நெல்லரிசி மாவை நீரில் குழைத்துக் கலக்கிப் பாலாகத் தாய் கொடுத்தாள். குழந்தை அதனை உண்ண மறுத்துப் புலம்பி அழுது வருந்தியது. அக்குழந்தையாகிய உபமன்னிய முனிவர் பின்னர் தன் தந்தையார் உபதேசித்தபடி, இங்கு வந்து சிவ பெருமானை வழிபட்டு. அவரால் திருப்பாற் கடலை அருநந்துதற்கு அளிக்கப் பெற்றார். ''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற் கடல் அன்று ஈந்தபிரான்'' எனவரும் திருவிசைப் பாடல் இவ்வரலாற்றையே குறிக்கின்றது.

### மாண்டு கன்னீசுவரம்

இக்கோயில் பாண்டவப் பெருமாள் கோயிலுக்குத் தென்கிழக்கில் அரைக்கல் தொலைவில் உள்ளது. மாண்டுகன்னிய முனிவர் இங்கு வழி பட்டு, விண்ணுலக இன்பங்களை மண்ணுலகில் அனுபவிக்கப் பெற்றார். இங்குள்ள தீர்த்தம் ஐயரம்பையர் தீர்த்தம் என வழங்குகின்றது.

### வன்னீசம்

இது மாண்டு கன்னீசுவரத்திற்கு மேற்கே உள்ளது. இங்குள்ள இறைவனை வழிபட்டு அக்கினி தேவன் தேவர்களுக்குத் தரப்படும் அவிசைச் சுமக்கும் ஆற்றல் பெற்றான். வன்னி எனப்படும் அக்கினி தேவனால் நிறுவி வழிபடப் பெற்றமையால் இதற்கு வன்னீசம் எனப் பெயர் வந்தது.

### சவுனக ஈசுவரம்

இது வன்னீசத்திற்கு ஒரு பர்லாங்கு தொலைவில் உள்ளது. சவுனகர் என்னும் முனிவர் இங்கு வழிபட்டு அருள் பெற்றார்.

### அமரேசுவரம்

இது பெரிய காஞ்சிபுரம் நிமந்தக்கார ஒற்றைவாடைத் தெருவில் உள்ளது. ஒரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அப்போரில் தேவர்கள் வெற்றி பெறுமாறு இறைவன் செய்தருளினான். வெற்றி பெற்ற தேவர்கள், இறுமாப்பு எய்திச் செருக்குற்றனர். அவர்களின் செருக்கை அடக்க, இறைவன் ஓர் இயக்கனாக வந்து தேவர்களின் முன்னே ஒரு துரும்பை நட்டு, அதனை வெட்டுபவனே அசுரர்களை வென்ற வீரனாவான் என்று கூறினார். தேவர்கள் அனைவரும் எவ்வளவோ முயன்று பார்த்தும், அத்துரும்பை அசைக்கவும் இயலாதவர் ஆயினர். அந்நிலையில் அம்பிகை வெளிப்பட்டு இறைவனே இயக்கனாக வந்தருளிய செய்தியை உணர்த்தியருளினாள். தேவர்கள் தம் தவறு உணர்ந்து இங்கு இறைவனை வழிபட்டனர். அமரர் (தேவர்கள்) வழிபட்டதனால், இதற்கு அமரேசுவரம் எனப் பெயர் அமைந்தது. முப்பத்து முக்கோடி தேவர்கள் வழிபட்ட ஈசுவரர் ஆதலின், இவருக்குத் திரிதச ஈசுவரர் என்றும், பெயர் வழங்கும். (திரிதசம்-முப்பத்து மூன்று).

(தொடரும்)

# சிவராத்திரி விரதச் சிறப்பு

['சிவநேசன்']

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

சிவராத்திரியானது, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, முக்கோடி சிவராத்திரி, பட்ச சிவராத்திரி என்று ஐந்து வகைப்படும்.

(1) அவற்றுள் யோக சிவராத்திரியானது, சோம வார தினத்தில், திங்கட் கிழமையில் சூரியோதய வேளை தொடங்கி, அன்றிரவு முடியும் வரை அமாவாசை வரையிற் பொருந்தியிருப்பது. அமரபட்சத்துச் சதுர்த்தசி, திங்கட் கிழமை, இரவு நான்கு சாமங்களிலும் தொடர்ந்திருப்பினும், அல்லது இரவின் நான்காம் சாமத்திற்குப் பின் அரை நாழிகை யளவு அமாவாசை பொருந்தியிருப்பினும் அமரபட்சத்துச் சதுர்த்தசியானது நான்காம் சாமத்தின்முன் அரை நாழிகை வந்து கூடினாலும், யோக சிவராத்திரி என்று கூறப்படும்.

(2) ஓர் ஆண்டின், இளவேனில் முதுவேனில் கார் குளிர் முன்பனி பின்பனி என்னும் ஆறு பருவங்களைக் கொண்ட பன்னிரண்டு மாதங்களிலும், சந்திரன் தேய்ந்தும் வளர்ந்தும் வருவான். வளர்வது பூர்வ (சுக்கில) பட்சம் எனவும், தேய்வது அபர (கிருஷ்ண) பட்சம் எனவும் வழங்கும். பன்னிரண்டு மாதங்களிலும் இங்ஙனம் வருகின்ற பூர்வ அபர பட்சத்துச் சதுர்த்தசியாகிய 24 தினங்களிலும் வருவது, நித்திய சிவராத்திரி எனப்படும்.

(3) மாசி மாதத்தில் அபரபட்சத்துச் சதுர்த்தசியும், பங்குனி மாதத்தில் பூர்வ பட்சத் திருதியையும், சித்திரை மாதத்தில் அபரபட்சத்து அட்டமியும், வைகாசி மாதத்தில் பூர்வ பட்சத்து அட்டமியும், ஆனி மாதத்தில் பூர்வ பட்சத்துச் சதுர்த்தசியும், ஆடி மாதத்தில் அபர பட்சத்துப் பஞ்சமியும், ஆவணி மாதத்தில் பூர்வ பட்சத்து அட்டமியும், புரட்டாசியில் பூர்வ பட்சத் திரயோதசியும், ஐப்பசியில் பூர்வ பட்சத் துவாதசியும், கார்த்திகை மாதத்தில் பூர்வபட்ச சப்தமியும், அபர பட்ச அட்டமியும், மார்கழி மாதத்தில் பூர்வ அபர பட்சங்கள் இரண்டிலும் உள்ள சதுர்த்தசியும், தை மாதத்தில் பூர்வ பட்சத் திருதியையும் ஆகிய நாட்கள், சிவபெருமானை அருச்சனை செய்து வழிபடுதற்குரிய நாள்களாகும். இவைகள் மாத சிவராத்திரி எனப்படும்.

(4) மார்கழி மாதத்துச் சதுர்த்தசி திதியானது, திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடி வந்தால், அது மிகவும் உத்தமமாகும். மாசி மாதத்தில் அமரபட்சத்துச் சதுர்த்தசியானது, செவ்வாய்க் கிழமையிலேனும், ஞாயிற்றுக் கிழமையிலேனும், பொருந்தி வந்தால், அது முக்கோடி சிவராத்திரி எனப்படும்.

இவ்வாறு பன்னிரண்டு மாதத்தினும் வருகின்ற மாத சிவராத்திரிகளில், மாசியில் பிரமதேவனும், பங்குனியில் திருமாலும், சித்திரையில் பார்வதி தேவியும், வைகாசியில் சூரியனும், ஆனியில் உருத்திரனும், ஆடியில் முருகப் பெருமானும், ஆவணியில் சந்திரனும், புரட்டாசியில் ஆதிசேடனும், ஐப்பசியில் இந்திரனும், கார்த்திகையில் சரசுவதியும், மார்கழியில் மனோன்மணியும், தை மாதத்தில் நந்திதேவரும் சிவபெருமானைப் பூசித்து அருள் பெற்றனர்.

(5) தை மாதத்து அபர பட்சத்துப் பிரதமை திதி முதல் தொடங்கி, பதின்மூன்று தினங்களிலும் ஒரு வேளை மட்டும் உண்டு, பதினான்காம் திதியாகிய சதுர்த்தசி தினத்தில் உபவாசம் செய்வது பட்ச சிவராத்திரியாகும்.

இவ்வாறு ஐந்து வகைப்படும் சிவராத்திரிகளையும், அன்புடன் கடைப்பிடிப்பது சிறப்புடையதாகும். ஐந்தும் இயலாவிடில், இவற்றில் ஒன்றையேனும் அன்புடன் கடைப்பிடித்து ஒழுகினால், எல்லா நலங்களும் வரங்களும் பெறலாம்.

சிவராத்திரி விரதமானது, உத்தமம் மத்திமம் அதமம் என மூன்று வகைப்படும். சூரியன் மேற்குத் திசையில் மறைந்து அந்திக் காலம் வரும் வரையில் திரயோதசித் திதியானது இருந்து, பின்பு சதுர்த்தசித் திதியானது கூடப்பெற்று, அது இரவில் மட்டுமின்றி மறுநாள் பகல் முழுவதும் இருந்தால், அது உத்தமோத்தம சிவராத்திரி என்று கூறப்படும்.

தோன்றிய சூரியன் மறைந்த பின்னர்க் கூடுகின்ற சதுர்த்தசியானது, உத்தம சிவராத்திரியாகும். ஒரு நாள் சூரியோதயம் தொடங்கி மறுநாள் சூரியோதயம் ஆகும் வரையில் உள்ள பகலும் இரவும் சேர்ந்து நிற்கின்ற சதுர்த்தசியும், சூரியன் மறையும் முன்னர்க் கூடுகின்ற சதுர்த்தசியும், இரவில் 10 நாழிகைக்கு மேல் வருகின்ற சதுர்த்தசியும், மத்திம சிவராத்திரியாகும்.

இரவில் 20 நாழிகை வரையும் சதுர்த்தசியிருந்து, அதற்கு மேல் அமாவாசைத் திதி தொடங்கிச் சதுர்த்தசியோடு பொருந்துமாயின், அதம சிவராத்திரியாகும். ஆதலின் இரவு முழுதிலும் உள்ள திரயோதசித் திதியோடு பொருந்தும் சதுர்த்தசித் திதியே நல்லதாகும். இரவில் திரயோதசியோடு ஒரு சிறிதேனும் சதுர்த்தசி சேர்ந்து வந்தால், அதுவே சிவராத்திரியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். சதுர்த்தசித் திதி சிவ வடிவமும், திரயோதசித் திதி சக்தி வடிவமும் ஆகும். இவ்விரண்டு திதிகளும் சேர்ந்து வருகின்ற இரவானது, சிவலிங்க வடிவம் உடையது என்று பெரியோர்கள் கூறுவர்.

அமாவாசைத் திதியை நள்ளிரவில் தீண்டி நிற்கும் சதுர்த்தசியானது, உயிர் நீங்கிய உடலுக்குச் சமமாகும். ஆதலின் அப்போது சிவபூசை செய்தல் கூடாது. அமாவாசைத் திதியோடு கூடிய சதுர்த்தசியானது, அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் உரிய விரத நாளாகும், ஆகமத்தைப் பின்பற்றும் சைவர்கள் அதற்கு முதல் நாளிலேயே விரதம் அனுட்டித்தல் வேண்டும்.

திருவோண நட்சத்திரத்தோடு சேர்ந்து வரும் அமாவாசையுடன் கூடிய சதுர்த்தசியானது, துறவறத்தார்க்கும் இல்லறத்தார்க்கும் உரியதாகும். திருவோண நட்சத்திரத்துடன் கூடி வருவதனுல் சதுர்த்தசியானது, அமாவாசையைத் தீண்டி வந்தாலும், அதற்குக் குற்றம் இல்லை.

சதுர்த்தசித் திதியானது, நடு இரவில் ஒரு கலையளவு கூடி நின்ருல், அத்தினத்தில் விரதம் அனுட்டிக்கலாம். நடு இரவிற்குப் பின் சதுர்த்தசித் திதி, ஒரு கலையளவு எஞ்சி நின்ருல், வைதிகரும் துறவிகளும் மறுநாளில் விரதத்தைக் கடைப் பிடித்தல் வேண்டும். சதுர்த்தசித் திதி இரண்டு நள்ளிரவுகளில் பொருந்தி, இரண்டுபட்டு வருமாயின், சதுர்த்தசித் திதி இரவில் அதிகமாக நீடித்து இருக்கும் தினமே, விரத தினமாகக் கொள்ளத் தக்கது.

திரயோதசியின் பிற்கூறும், சதுர்த்தசியின் முழுக் கூறும், அமாவாசையின் முற்கூறும் ஆகிய மூன்று திதிகளும் ஒரு நாளில் வருமாயின், அந்நாள் வைதிகர்களுக்கும் சைவர்களுக்கும் சிறப்புடையதாகும்.

விரத தினமாகக் கொள்ளப் பெற்ற தினத்தில் இரவின் முடிவில், அமாவாசை வந்து சேரும் முன்னர்ச் சிவபூசை செய்வது, ஆகமங்களைப் போற்றும் சைவர்களுக்கு நல்லதாகும். சோமவாரத்தில் வருகின்ற சதுர்த்தசித் திதிக்கும் இது பொருந்தும்.

சதுர்த்தசித் திதியானது, இரவிற் 15 நாழிகையளவு முதல் நாளிற் கூடி, மறுநாள் இரவு 15 நாழிகை அளவு அமாவாசை வந்து ஒன்று சேருமாயின், மறு தினத்தில் பூசை செய்தல் நல்லதன்று. அதனுலேயே அதன் முதல் நாளில் சிவ பூசை செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்க விரும்புபவர்கள், முன் திதியாகிய திரயோதசி நாளில் ஒருபொழுது மாத்திரம் உணவு கொண்டு, இடையில் வரும் சதுர்த்தசித் திதியில் பட்டினியிருந்தும் கண் விழித்தும், நான்கு சாமங்களிலும் சிவ பூசை செய்து, அடுத்து வரும் திதியாகிய அமாவாசையில் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தல் வேண்டும்.

திங்கட் கிழமையில் வருகின்ற யோக சிவராத்திரிக்குச் சதுர்த்தசித் திதியில் ஒரு வேளை மட்டும் உணவு கொண்டு, அமாவாசைத் திதியில் நான்கு சாமங்களிலும் பூசை செய்து அடுத்து வரும் பிரதமைத் திதியில் பாரணம் செய்தல் வேண்டும். முற்கூறிய மகாசிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பட்ச சிவராத்திரி என்னும் ஐந்து சிவராத்திரிகளில், சதுர்த்தசித் திதியே சிவராத்திரி நாளாகக் கொண்டாடப் பெறுகின்றது.

சிவராத்திரி விரதத்தை அனுட்டிப்பவர்கள், அதன் முதல் நாள் ஆகிய திரயோதசித் திதியில் ஒரு வேளை உணவு கொண்டு, பெண்களோடு சேராமல் திரயோதசி இரவைக் கழித்து, அதன் விடியற்காலையில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, சூரியோதய காலத்திற்குள் நாட் கடமைகளையெல்லாம் செய்து முடித்து, சிவாலயம் சென்று வலம் வந்து தரையில் வீழ்ந்து பணிந்து, வாயினுல் துதிப் பாடல்களைப் பாடித் தொழுது, பின் வீட்டிற்குச் சென்று நீராடி, தூய நல்லாடை தரித்து நண்பகற் கடமைகளை முடித்துக் கொண்டு, பூசைசெய்யும் இடத்தை கோமயத்தால் மெழுகிக் கோலமிட்டு, வாழை கரும்பு முதலியவற்றை நட்டு, பூமாலைகளும் தோரணங்களும் கட்டி, சிவபூசைக்குரிய பொருள்களையெல்லாம் தூயனவாகத் தொகுத்து, சூரியன் மறையும் வேளையில் சிவாலயம் சென்று, சந்தனம் தூபதீபம் முதலியபொருள்களைக் கொடுத்து, சாயுங்காலத்தில் அருக்கியம் முதலிய கிரியைகளையும், மந்திர செபம், தியானம் முதலியவற்றையும் முடித்துப், பிறகு சிவ பூசை செய்யத் தொடங்குதல் வேண்டும்.

முதல் சாமத்தில் பஞ்ச கவ்வியத்தினுலும், இரண்டாம் சாமத்தில் பஞ்சாமிர்தத்தினுலும், மூன்ரும் சாமத்தில் தேனுலும், நான்காம் சாமத்தில் கருப்பஞ் சாற்றினுலும் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல் வேண்டுமென்று காரணுகமம் கூறுகின்றது. கோசலம் கோமயம் தயிர் பால் நெய் ஆகிய ஐந்தும் பஞ்சகவ்வியம் எனப்படும். தேன் தயிர் பால் நெய் சர்க்கரை ஆகிய ஐந்தும் பஞ்சாமிர்தம் எனப்படும்.

முதல் சாமத்தில் சந்தனம், இரண்டாம் சாமத்தில் அகிலஞ்சனம், மூன்ரும் சாமத்தில் பச்சைக் கற்பூரம், நான்காம் சாமத்தில் நறு

மணம் வாய்ந்த குங்குமம் ஆகியவற்றைச் சிவ லிங்கத்திற்கு அன்புடன் சாத்துதல் வேண்டும்.

முதல் சாமத்தில் வில்வதளம், இரண்டாம் சாமத்தில் தாமரை மலர், மூன்றும் சாமத்தில் சிறு செண்பகப் பூ, நான்காம் சாமத்தில் நந்தி யாவர்த்தப் பூ, ஆகியவற்றைச் சிவராத்திரி நாளில் சிவபிரானுக்குச் சூட்டுதல் வேண்டும் என்று சித்ததந்திரம் என்னும் ஆகமம் கூறு கின்றது.

சிந்தியம் என்னும் ஆகமம், முதற் சாமத் தில் தாமரையும், இரண்டாம் சாமத்தில் துளசி யும், மூன்றும் சாமத்தில் வில்வத் தளிரும், நான்காம் சாமத்தில் நீலோற்பல மலரும் சாத் துதல் வேண்டும் எனக் கூறுகின்றது.

வில்வம், நொச்சி, மாவிலங்கை முட்கிளுவை, விளா ஆகிய ஐந்தையும் பஞ்சவில்வம் என்று பெரியோர்கள் கூறுவர். இவற்றின் தழைகளில் மூவிதழ்கள் கொண்ட பத்திரங்களைக் கொண்டு, நான்கு சாமங்களிலும் சிவ பூசை செய்தல் வேண்டும் என்று காரணுகமம் கூறுகின்றது.

முதற் சாமத்தில் பயிற்றம் பருப்புச்சோறு, இரண்டாம் சாமத்தில் பாயசம், மூன்றும் சாமத்தில் எள் கலந்த சோறு, நான்காம் சாமத்தில் தூய தனிச் சோறு (சுத்தான்னம்) என்பவற்றை, இறைவனுக்கு முறையே நிவே தனம் செய்தல் வேண்டும். இயலாவிட்டால், நான்கு சாமங்களிலும் சுத்தான்னம் மட்டுமே நிவேதனம் செய்யலாம்.

அங்ஙனம் நிவேதனம் செய்யுங்கால், சர் வன் உக்கிரன் சங்கரன் சிவன் சாம்பவன் ஈசா னன் மகாஉக்கிரன் பூதாதிபதி என்னும் மட்டு மந்திரங்களையும் உச்சரித்து, தூப தீபம் முதலிய அனைத்து உபசாரங்களையும் மனம் ஒருமித்துச் செய்தல் வேண்டும். சிவராத்திரியில் உணவை ஒழித்தும், உறக்கத்தை நீக்கியும், நான்கு சாமங்களிலும் முறைப்படி பூசித்து, அருக்கிய சலத்தினுல் உபசரித்து, பூசையை ஏற்றுக் கொண்டு அருளும்படி, சிவபிரான் திருமுன்பு தண்டனிட்டு வீழ்ந்து துதித்தல் வேண்டும். பொழுது விடிந்ததும் வைகறைப்பொழுதில் நல்ல ஆறு குளம் போன்ற புண்ணிய தீர்த்தங் களில் நீராடி, காலைக் கடன்களை முடித்து, முற் கூறியபடியே அன்றும் பகல் வேளைகளில் சிவ பூசை செய்து, தீட்சா குருவை வணங்கி, சிவ னடியார்களுக்குத் திருவமுது முதலியன வழங்கி பின்னர்ப் பாரணம் செய்தல் பவண்டும். கீழ்த் திசையில் சூரியன் வந்து தோன்றிய ஆறு நாழிகைக்குள் பாரணம் செய்தால், சிறந்த நல்ல பலன்களை எய்தலாம். இவ்வாறு சிவ ராத்திரி விரதம் கடைப்பிடிப்பவர்கள், மேலான சிவகதியை அடைவார்கள்.

''மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி''

என்று மாணிக்கவாசகர் பாடுவதுபோல, இவர் கள் மட்டுமேயன்றி, சிவராத்திரி விரதம்கடைப் பிடித்தவர்களின் உறவினர்களாய் இருபத்து ஒரு (21) தலைமுறையில் உள்ளவர்களும், சிவ பிரான் அருளால் வீடு பேறு அடைவார்கள்.

சிவராத்திரியில் சிவ பூசை செய்யுங்கால், நான்கு சாமங்களிலும் முறையே நான்கு வேதங்களையும் ஓதுதல் பெரு நலம் பயக்கும். அஃது இயலாதவர்கள் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதினுல், அஃது ஒன்றே அவர் களுக்கு எல்லா நலன்களையும் தந்துதவும். இங் ஙனம் விவரிக்கப்பட்ட முறைகளில் சிவ பூசை செய்தற்கு இயலாத முதியவர்கள், பெண்கள், பிணியாளர்கள் ஆகியோர் உணவு கொள்ளா மலும், உறக்கம் கொள்ளாமலும், நான்கு சாமங்களிலும் சிவபிரானின் திருவருட் பெரு மைகளை விளக்கிக் கூறுகின்ற சிவபுராண நூல் களைக் கேட்டும், திருமுறைகள் ஓதியும், திரு வைந்தெழுத்தைச் செபித்தும், தாம் தாம் வதி யும் இடங்களுக்கு அருகில் உள்ள சிவபிரான் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் நல மாகும். சிவராத்திரி நாளில் முதற் சாமத்தில் சிவ பூசை செய்து முடித்தவர்கள், தமக்கு மிகுந்த பசியும் களைப்பும் ஏற்பட்டால், சிறித ளவு நீராவது, பாலாவது, பழங்களாவது அருந் தலாம். நீர் பருகுதல் உத்தமம். பால் பருகு தல் மத்திமம். பழம் உண்ணுதல் அதமம், அப்பம் தோசை பிட்டு முதலியன உண்ணல், அதமாதமம் ஆகும்.

சிவராத்திரி விரதத்தின் பயனை அடைய விரும்பும் அன்பர்கள், அமாவாசை கூடும் முன்னரே, பாரணத்தைச் செய்து முடித்தல் வேண்டும். பாரணம் செய்து முடித்த நாளின் பிற்பகலைச் சிவபுராணம் கேட்டும், சிவசிந்தனை யோடு இருந்தும், கழித்தல் வேண்டும். அன்று மாலை வேளையில் சந்தியாவந்தனம் முதலிய கட மைகளை முறைப்படி செய்து, அன்று மாலையும் உணவு கொள்ளாதிருத்தல் நல்லது. இவ்வாறு முறையாக இருபத்துநான்கு (24) ஆண்டுகள் சிவராத்திரி விரதம் அனுட்டிப்போர், இம்மை மறுமை ஆகிய எல்லா நலங்களும், அவற்றிற்கும் மேலாகிய வீடுபேறும் எளிதில் பெற்று இன் புறுவர்.

இச்சிவராத்திரி விரதத்தின் சிறப்பினைச் சிவபெருமான் நந்தி தேவருக்கு உபதேசித்தார். நந்தி தேவரிடமிருந்து சூரியன் முருகன் இயமன் காமன் தேவர்கள் தேவேந்திரன் அக்கினித் தேவன் சந்திரன் குபேரன் முதலிய பலரும் சிவராத்திரி விரதத்தின் சிறப்பினைக் கேட்டு உணர்ந்து, சிவராத்திரி விரதத்தினைக் கடைப் பிடித்துத், தாங்கள் தாங்கள் விரும்பிய நலங் களையெல்லாம் பெற்றுச் சிறப்புற்றுர்கள்.

—ஆசிரியர்.

# கந்தபுராணக் காப்பிய நலம்

"திருக்குறள்மணி"
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், M.A., M.Litt.,
உலகத் தமிழ்ஆராய்ச்சி நிறுவனம், சென்னை—20.

(முற்றொடர்ச்சி)

**வள்ளி பற்றிய தொன்மையம் :**

அகப்பொருள் இலக்கண மரபுகளின் பெட்டகமாக விளங்குவது, இந்நூலினை நிறைவுறச் செய்யும் படலமாகும். அதனை ஆசிரியர் 'வள்ளியம்மை திருமணப் படலம்' எனச் சுட்டுவர். 'மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்' (தொல்.அகத். 55) என்னும் அகப்பொருள் விதி ஒன்றே, இங்குக் கடைப்பிடிக்கப்பட வில்லை. 'தலைவன், தலைவி' ஆகியோரின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. அன்பின் ஐந் திணையுள் குறிஞ்சித் திணையின் முதல், கரு, உரிப்பொருள்கள் சிறந்த முறையில், இந்தத் தெய்விகக் காதலரின், காதல் வாழ்க்கைக்குப் பின்னணியாக அமைந்துள்ளது. அகப்பொருட் கோவை இலக்கியத்தின் நோக்கினையும் போக்கினையும் இப்பகுதியில் நாம் காணுகின்றோம்.

இக்காப்பியத்தில் வள்ளியம்மை தனிச் சிறப்பு வாய்ந்த பாத்திரமாவார். குறவர் மடமகளாகிய மண்ணக மங்கையை மணம் புரிய, விண்ணகத்துத் தேவாதி தேவனுன முருகன் ஆராக்காதல் கொண்டு வந்த வரலாற்றைக் கச்சியப்பர் மனிதப்பண்புகளும் உணர்வுகளும் நிறைந்த காதற் காப்பியமாகச் சித்தரித்துள்ளார்.

சங்க இலக்கியத்துள் 'முருகன்-வள்ளியின் காதல்' ஒரு 'தொன்மைய'க் கருத்தாகப் போற்றப்படுகிறது. தொல்காப்பியத்தின் 'வாடா வள்ளி வயவர் ஏத்திய' என்னும் புறத்திணை நூற்பா (5), வள்ளி முருகன் காதல் களியாட்டத்தைச் சுட்டுவதாகவே உரையாசிரியர்கள் கூறுவர். 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல' என அம்மள்ளனூர் எனும் புலவர் இந்த அமரகாதலரைச் சித்தரித்துள்ளார்.

குறிஞ்சிக் குன்றவர் மறம்கெழு வள்ளிதமர்
வித்தகத் தும்பை விளைத்தலால் வென்வேலாற்கு
ஒத்தன்று தண்பரங் குன்று.

என வள்ளியம்மையின் வரலாற்றின் ஒரு பகுதியைச் சுட்டுகிறது. அறுமுகப்பெருமானின் ஒரு முகத்தை,

குறவர் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே

என நக்கீரர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

வேங்கை மரநிழலில் சோகமே வடிவமாக நிற்கும் கண்ணகியைக் கண்ட குன்றவாணரின் கொழுஞ் செல்வியர், 'மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர்' (சிலப். 24:1) என விளிக்கின்றனர். அவர்கள் ஆடிய குரவைக்கூத்தினுள்,

குறமகள் அவளெம குலமகள்! அவளொடும்
அறுமுக வொருவநின் அடியிணை தொழுதோம்

என்று போற்றி வழிபடுகின்றனர். இவ்வாறு தமிழரின் சிந்தனையில் அரும்பிய 'முருகன் வள்ளி'யின் 'தொன்மை' நாயன்மார் பாடல்களிலும், பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருத்தொண்டர்புராணம் போன்ற காப்பியங்களிலும் போதாகிப் பொலிவுற்று, கச்சியப்பரின் கந்தபுராணத்தில் காதற் காப்பியமாக மலர்ந்து மணம் பரப்புவதைக் காணுகின்றோம். தமிழிற்கே, தமிழருக்கேயுரிய 'தொன்மைய'த்தைக் கச்சியப்பர் தம் வீறூர்ந்த கற்பனைத் திறத்தால், வியத்தகு சொல்லோவியமாக இப்படலத்துள் படைத்துத் தந்துள்ளார்.

இப்படலத்தில் களிறுதரு புணர்ச்சி, மடலேறுவேன் என அச்சுறுத்தல், இற்செறித்தல், இரவுக்குறி, வெறியாட்டு, உடன்போக்கு எனும் களவொழுக்கத்திற்குரிய கிளவிகள் புதுமைப் பொலிவும், பழமை வலிவும் பெற்றுத் திகழுகின்றன. இப்படலத்தில் தொல்காப்பியத்தின் கருத்துக்களும், இறையனாரின் எண்ணங்களும், நக்கீரரின் விளக்கங்களும் இணைந்து ஒரு புதிய வண்ணத்தையும், வடிவத்தையும் பெற்றுள்ளன. பழைய நறவினையே அப்படியே புதிய குவளையில் ஊற்றித்தாராமல், பல புதிய ஒப்பனைத் திறன்களையும், கற்பனை வகைகளையும் கையாண்டு, கலைநலம் கனிந்த குறுங்காப்பியமாக ஆசிரியர் இதனைப் படைத்துள்ளார். இதனால் கந்தபுராணத்திற்குத் தமிழிலக்கியத்தில் ஒருவகைத் தனிச் சிறப்பும், கச்சியப்பருக்குப் பொன்றாப் பெரும்புகழும் கிடைத்துள்ளதை யாரும் எளிதிற் புறக்கணிக்க இயலாது.

வடமொழியில் காளிதாசன் படைத்த 'குமாரசம்பவம்' எனும் காப்பியம் பதினேழு படலங்களை உடையதாகும். அவற்றுள் முதல் எட்டுப் படலங்களையே (திருமணப் படலம் முடிய) கவிச்சக்கரவர்த்தி காளிதாசன்

படைத்தான் என்பது ஆராய்ச்சியாளர் துணி வாகும். அந்த எட்டுப் படலங்களோடு வள்ளி யம்மை திருமணப் படலத்தை ஒப்பிடுவோ மானுல், இரண்டும் 'அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவரின்' கற்பனை வளமார்ந்த ஒத்த சிறப் புடைய காதற் குறுங்காப்பியங்களாகத் திகழ் வது புலனுகும். காளிதாசரின் படைப்பில், புலனுகர் இன்ப எக்களிப்புப் பொங்கி வழி வதையும், கச்சியப்பரின் படைப்பில் பக்தி யுணர்வு சிறிது மேலோங்கி நிற்பதையும் எளிதில் உணரலாம்.

இவை யாவும் சமஸ்கிருத மொழிக் கந்த புராணத்தில் காணப்படாதவை. எனவே, முருகன் வழிபாட்டு மரபோடு தமிழகத்தில் பின்னிப் பிணைந்து வளர்ந்த, பல நம்பிக் கைகள், கதைகள், கொள்கைகள், நெறிகள் முதலியவற்றை மதித்துப் போற்றும் வகையில் அவற்றிற்குத் தம் நூலில் கச்சியப்பர் கலை வடிவம் கொடுத்தார். இதனுல் அவற்றை நிலைத்து வாழச் செய்தார்.

**கந்தபுராணத்தின் அமைப்பு :**

பழைய காப்பிய மரபையொட்டியே, கச்சியப்பர் இந்நூலினை ஆறு காண்டங்களாகப் பகுத்துள்ளார். ஒவ்வொரு காண்டத்தின் உட் பிரிவுகளாகக் கம்பனைப்போல, படலங்களை அமைத்துள்ளார். உற்பத்திகாண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண் டம், தேவகாண்டம், தட்சகாண்டம் எனும் ஆறு காண்டங்களுள், தேவ காண்டம் அள வால் மிகவும் சிறியது. ஒவ்வொரு காண்டத்தி லும் பல படலங்கள் உள்ளன. மொத்தம் 139 படலங்களும், பாயிரம், கடவுள் வாழ்த்து, அவையடக்கம் எனும் பகுதிகளும் இடம்பெற் றுள்ளன. இவற்றில் 'பாக்களின் இனத்தினுள் மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளால்' பாக்களைக் கச்சியப்பர் அமைத்துள்ளார். தேவ காண்டத்துள் நான்காவதாகிய 'கந்தவெற்புறு படலத்தில்'தான் மிகக் குறைந்த அளவில், ஆறே திருவிருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. யுத்த காண்டத்துள் பதின்மூன்றும் படலமாகிய 'சூரபன்மன் வதைப் படலத்தில்' மட்டுமே 507 திருவிருத்தங்கள் உள்ளன. இப்படலமே பேரளவினதாகிய செய்யுள் எண்ணிக்கையுடை யது. மற்றப் படலங்களில், கதையின் போக் கிற்கு ஏற்ப, இவற்றிற்கு இடைப்பட்ட நிலையில் பாடல்கள் மிகுந்தும் குறைந்தும் உள்ளதைக் காணுகின்றேம்.

**கிளைக் கதைகள் :**

கந்த புராணம் என்பது கந்தனுடைய பழைய வரலாற்றினை உரைப்பது எனப் பொருள்படும். இந்த நோக்கத்தின் அடிப்படை யில் நூல் முழுவதும் அமைக்கப்பட்டிருக்குமா னுல் நான்கு காண்டங்கள், 40 படலங்கள், 4,500 பாடல்கள் என்னும் முறையில் இந்நூல் கச்சிதமாக அமைந்து விட்டிருக்கும். ஆனுல் முருகவேளினுடைய தந்தையின் அருட் செயல் கள் பலவற்றையும் இடையிடையே இணைத்து, அவற்றிற்குரிய கதைகளை விரித்துரைப்பதால் இப் புராணம், வடிவிலே பெருத்து விட்டது. இதனை, ஆசிரியர் கதை சொல்லும் பாங்கி லேயே நாம் உணர முடிகிறது. படிப்பவருக்குச் சலிப்பு உண்டாகாதவாறு, கச்சியப்பர், ''அறு முகம் உடையவோர் அமலன் மாக்கதை''யில் பல்வேறு கிளைக் கதைகளை இடையிடையே சேர்த்துச் சுவைபடக் கதையைக் கூறிச் செல்லு கிறார்.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

இக் காப்பியத்தில் 2,432 கிளைக் கதைகள் உள்ளன. அவற்றை, நாம் துணைக் கதைகள், விளக்கக் கதைகள் என இரு வகையாகப் பாகு படுத்தலாம். இவற்றுள் ஒரே கதைக் குறிப்புப் பத்துப் பன்னிரண்டு முறை வெவ்வேறு நோக் கோடு கருத்து விளக்கத்திற்காகப் பயன்படுத் தப்பட்டுள்ளதைப் பார்க்கிறேம். அவற்றை, எல்லாம் கணக்கில் கொண்டால், நாலாயிரத் திற்கு மேற்பட்ட கிளைக் கதைகள் இடம் பெற் றிருப்பதாகத் தோன்றும்.

துணைக் கதைகள் என்பன மூலக் கதை யோடு, நேரடியாகத் தொடர்புடையது ; காப்பியத் தலைவனின் பேராற்றலையும் பெருந் திறனையும், உணர்ந்து போற்ற உதவும் வகை யில் அமைக்கப்படுவன. ஒரு கருத்தினை அல்லது நிகழ்ச்சியை விளக்குவதற்கு உவமையாகவோ, உருவகமாகவோ, நேரடியாகவோ, ஒரு தொட ரிலோ, ஒரு செய்யுள் முழுவதிலுமோ யாதா கிலும் ஒரு கதை கூறப்படுமானுல், அதை விளக்கக் கதை என நாம் கொள்ளலாம். இந்த நோக்கிலே ஆராய்கிறபொழுது, ஈராயிரத்திற்கு மேற்பட்ட விளக்கக் கதைகள் கந்த புராணத் தில் இடம் பெற்றுள்ளமை புலனுகின்றது.

அகத்திய முனிவர் சிறந்த சிவ பக்தர் ; முருகப் பெருமானிடம் ஞானுேபதேசம் பெற்ற வர். அவரைச் சிவபெருமான், தம் திருமணத் தின்பொழுது உலகின் சமநிலை கெட்டதால், அதைச் சமநிலைப்படுத்தத் தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைக்கின்றுர். இந்தக் கருவை அடிப் படையாகக் கொண்டு, கந்த புராணத்தில் ஏழு படலங்கள் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி காண்டத்தில் பத்தாம் படலமான திருக்கல்யாணப் படலத்தில், ஒன்பது பாடல் களில் அகத்தியரை இறைவன், தென்னகத் திற்குச் செல்லுமாறு பணிப்பது விரித்துரைக்கப் பட்டுள்ளது. இதன் பிறகு, அசுர காண்டத்தில் விந்தகிரிப் படலம், அகத்தியப் படலம், கிர வுஞ்சப் படலம், விந்தம் பிலம்புகு படலம், திருக்குற்றுலப்படலம் என ஏழு படலங்கள் அகத்தியரின் வரலாற்றை முழுமையாகப் பேசு கின்றன. இவையல்லாமல், மற்றக் காண்டங் களிலும், அகத்தியர் விந்தம் அடக்கியவரலாறு, தமிழ் கற்றமை, தமிழ்ச் சங்கத்தில் முருக வேளின் தலைமையில் தமிழ்ப் பணி ஆற்றியது போன்ற பல செய்திகள், விளக்கக் கதைக ளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. எனவே, கந்த புராணத்தின் துணைக் கதைகளுள் சிவ பெருமானுடைய வரலாறுகளுக்கு அடுத்த நிலை யில், அதிகமான இடத்தையும் முக்கியத்துவத்

தையும் பெறுவது அகத்தியரின் வரலாறு என உறுதியாக நாம் கூறலாம்.

அடுத்து, அசுர காண்டத்தில் உள்ள மார்க்கண்டேயரின் வரலாறு, 285 பாடல்களில் விளக்கப்பட்டுள்ளதைக் காணுகிறோம். இதே காண்டத்தில் உள்ள மகாசாத்தப் படலம்(32), ஐயப்பனின் கதையை 68 பாடல்களில் சுவை பட எடுத்துரைக்கிறது. யான் அறிந்த வரையில், ஐயப்பன் வரலாறு, முதன் முதல் முழுமையாகக் கச்சியப்ப சிவாசாரியாராலேயே, தமிழ் இலக்கியத்துள் விரித்துரைக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. தட்ச காண்டத்தினுள், சந்திர சாபப் படலத்தில், சந்திரனுடைய வரலாறும், ததீசிப் படலத்தில் சலந்தரன் விருந்தை (பிருந்தா) வரலாறும், இரசவாதம் செய்வதாக ஊரை ஏமாற்றி வந்த ஒருவனைப் பற்றிய கதையும் விளக்கப்பட்டுள்ளன. இவை போன்ற துணைக் கதைகள் நூற்றுக்கு மேல் உள்ளன.

மற்றவை யாவும் விளக்கக் கதைகளே. அவற்றுள், கச்சியப்பர் புதியதாகப் புகுத்தியுள்ள கதைகள் என்று முன்னர்ச் சுட்டப்பட்டவை, சிறப்பிடம் பெறுகின்றன. அவையல்லாமல், அகலிகை கதை, திரிபுரம் எரித்தல், அடிமுடி தேடுதல், கங்கையை மண்ணுலகிற்குக் கொண்டு வருதல், திருமாலின் பத்து அவதாரங்கள், வைரவர் காளியின் கதை, கயமுகன் தோற்றம், சிபிச்சக்கரவர்த்தி, முசுகுந்தன் வரலாறு போன்ற ஆயிரக்கணக்கான விளக்கக் கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு கதைகளின் களஞ்சியமாக விளங்குவதனால்தான், கற்பவரின் சிந்தனைக்கு விருந்தாக இந் நூல் அமைந்துள்ளது.

**கதைச் செறிவு :**

இத்தனைக் கதைகளையும் சுவைபட அமைத்துக்கூறும் கலையில், கச்சியப்பர் கைதேர்ந்தவராக உள்ளார். முதலில் முருகனுடைய வரலாற்றை நைமிசாரணியத்து முனிவர்களுக்குச் சூத மாமுனிவர் கூறுவதாகச் சொல்லத் தொடங்குகிறார். அவரே, முருகப் பெருமானுடைய வரலாறு முழுவதையும் சொல்லி முடிப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்த நீண்டதொரு கதைக்குள், வியாழ பகவான் முருகக் கடவுளுக்கு, அசுரர்களின் தோற்றம், வரம் பெற்ற வரலாறு, ஏகாதிபத்தியவாதிகளாக அவர்கள் மாறித் தேவர்களைச் சிறைப்பிடித்தமை ஆகியவற்றைக் கூறுவதாக 1,929 திருவிருத்தங்களில் கச்சியப்பர் அமைத்துள்ளார். பின்னர் இந்திரன் வாழ்க்கையில் சலிப்புற்ற பொழுது அவனுக்கு, வியாழனே உலகியல் பற்று மிக்க உலோகாயதச் சார்பான கதைகள் பலவற்றைக் கூறிச் செல்லுகிறார். அதன் இறுதியில் 'மதன நூல் துணிபு' என வாத்சாயனரின் காம சாத்திரக் கருத்துக்கள், 42 விருத்தங்களில் சுருக்கமாக, ஆனால் தெளிவாக வியாழ பகவானால் எடுத்துரைக்கப்படுகின்றது.

பின்னர், 'அகந்தை தன்னால், மிக்குறு தக்கன் அழிந்த' வரலாற்றைச் சுரர் குருவே சயந்தனுக்குக் கூறுகிறார். அப்பகுதியே, ஆறுவது காண்டமாகிய தட்ச காண்டமாகும். இக் கதையின் இடையே ததீசி முனிவர், முழு முதற் கடவுளாகிய சிவபெருமானின் இறைமைப் பண்பையும், திருவருட் செயல்களையும், திருச்சின்னங்களையும் அறுபதுக்கு மேற்பட்ட கதைகள் வாயிலாக விளக்குகின்றார். இவையெல்லாம் முடிந்த பின்னர், கச்சியப்பர் தம்முடைய தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த 'வள்ளியம்மை திருமணப் படலத்தை அமைத்து முருகன்—வள்ளியின் காதற் கதையைக் கூறி, கந்தன் கதையை முழு நிறைவுடையதாக்குகிறார். இவற்றிற்கு இடையே, ஏழெட்டு இடங்களில் நாரத முனிவர் தோன்றுகிறார். அவர் மண்ணுலகில் நடைபெறுவதை விண்ணுலகத்திற்கும், தேவருலகில் நடைபெறுவதை மகேந்திரபுரத்திற்கும் எடுத்துச் சென்று, கதைப் பின்னலில் சில முடிச்சுக்களைப் போடுகிறார். இதனால், அடுத்து என்ன நடைபெறப் போகிறது என்னும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நூலாசிரியர் கதையைக் கூறிச் செல்லுகிறார். இக் கதைகள் ஒன்றுக்குள் ஒன்றாக அடுக்கடுக்காகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. சீன மத்தாப்புப் பெட்டியைத் திருவிழாக்களில் கொளுத்துவார்கள். பெரிய உருளை வடிவில் தொங்கும் சீன மத்தாப்புப் பெட்டியின் மையப் பகுதியினை முதலில் கொளுத்துவர். அதிலிருந்து அழகழகான வடிவங்களும் பொம்மைகளும் வண்ணவண்ணப் பொறிகளோடு வெளிப்படும். பின்னர் அதைச் சூழ்ந்துள்ள முதல் வட்டம் அவ்வாறே எரியும். இதைப் போன்று ஏழெட்டுவட்டங்கள், வண்ண வண்ணக் கோலத்தில் ஒன்றினையொட்டி மற்றொன்றாக வெளியே குதிக்கும். இதைப் போன்று, இலக்கியச் சீன மத்தாப்புப் பெட்டியாகக் கச்சியப்பரின் காப்பியம் அமைந்துள்ளது. அடுக்கடுக்கான கதைகளை ஒன்றுக்குள் ஒன்றாகப் பொருத்திக் காப்பியத்தின் சுவை நலத்தை ஆசிரியர் மிகுவித்துள்ளார். இவ் வகையில், தக்க இடத்தில் கதைப் பின்னலின் முடிச்சுகளைப் போட்டு, ஆர்வத்தைப் பெருக்கி, பின்னர் அம் முடிச்சுகள் தாமே அவிழ்ந்து விடுமாறு செய்வதில் கச்சியப்பர் வல்லவராக விளங்குகிறார்.

கச்சியப்பருக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில், நாரதர் வருவது இல்லை. முதன் முதலாக இந்நூலிலேயே நாரதர் கதையைக் கூறும்—நடத்தும்—பாத்திரமாக இடம் பெற்றுள்ளார்.

—தொடரும்.

# சேக்கிழார் எடுத்த செஞ்சொற்கோயில்

''சேக்கிழார் பாதசேகரர்''
**திரு சி. சு. கண்ணுயிரம், கோவை**

( முற்றெடர்ச்சி )

**துவார பாலகர் :**

சிவ வேதியரின் வரவேற்பில் மகிழ்ந்து, அவருடன் சுவாமி சந்நிதியில் நுழையும் நாம், நுழைவாயிலின் இருபுறமும் நிற்கும் துவார பாலகர் இருவர் முன்பும் சற்று நிதானித்து, அவர்களை வணங்கி உட்புக அனுமதி வேண்டுகின்றேம். யார் இந்தத் துவாரபாலகர் இருவரும்? ஒரு காலத்தில் சிவபெருமான் திரிபுரங்கள் மூன்றையும் எரித்து அழித்தார். அம் முப்புரங்களின் தலைவர்களாகிய அசுரர் மூவரும், தங்கள் குடிமக்களுடன் எரிந்து அழிந்து போயினர். அந்த மூன்று புரங்களிலும் சிலமுடைய வேறு மூன்று அசுரர்கள் சிவ பூசை புரியும் நியதியுடையவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் மூவர் மட்டும் நெருப்பில் அழியாது எஞ்சி நின்றனர். இவ்வரலாற்றையே, ''உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு, எய்ய வல்லானுக்குந் தீபற'' என்று திருவாசகம் போற்றுகின்றது. இம் மூவருள் இருவரை இறைவன் தமது கோயிலின் வாயில் காவலர்களாகவும், மற்றெருவரைத் தமது நடனத்தில் ''குடமுழா'' என்னும் பேரிகை முழக்குபவராகவும் நியமித்துள்ளார் என்று திருப்புன்கூர்த் தேவாரம் தெரிவிக்கின்றது. இவ்விரு துவாரபாலகரையும் சேக்கிழார் சுவாமிகள் தாமெழுப்பியுள்ள பெரிய புராணக் கோயிலில் நிறுவியுள்ளார். அதை அவர் கதைப் போக்கில் காட்டிச் செல்வதைக் காண்போம்.

''மாதவம் செய்த தென்திசை'' வாழ வேண்டும் என்று சிவபெருமான் திருவுள்ளம் பற்றினர். அதற்காகச் சுந்தரமூர்த்திசுவாமிகளைப் பூவுலகுக்கு அனுப்ப முடிவு செய்தார். அதன் பொருட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீது ஓர் குற்றம் சுமத்தினர். அதற்குக் கழுவாயாக அவர் பூவுலகில் பிறக்க வேண்டும் என்று ஆணையிட்டார். அது கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை நோக்கிப் ''பிரபு'' தங்கள் ஆணைப்படி நான் பூவுலகில் பிறப்பேன் அங்கு வளர்ந்து வரும்பொழுது மயங்கிமானுட வாழ்வில் ஈடுபட்டு விடுவேன். பிறகு சங்கிலித் தொடர்போல வினையும் அதன்பயனும் என்னைப் பற்றிக்கொள்ளும். ஆகையால் நான் பூவுலக வாழ்வில் மயங்கி ஈடுபடத் தொடங்கும் பொழுதே தாங்கள் என்னைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டும்'' என்று விண்ணப்பித்து அவனிடம் அதற்கு வரமும் பெற்றுக் கொண்டார். உலகில் பிறந்து உரிய வயதடைந்து மணப்பருவம் எய்தியபின் பெற்றோரும் உறவினரும்' ஓர் கன்னியைத் தேர்ந்தெடுத்து மண நாளும் குறித்தனர். திருமணச் சடங்குகள் தொடங்கி நிகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது இறைவர் தாமளித்த வரத்தின்படி தடுத்தாட் கொள்ள ஓர் கிழ வேதியராக அங்கு வந்து, மணமகன் தமது அடிமை என்று வாதித்தார். அதற்கு ஆதரவாகத் தம்மிடம் ஆவணம் இருப்பதாகக் கையிலிருந்த ஓர் ஓலையையும் காட்டினர். ஆனல் அதை மணமகன் படிக்கக் கொடுக்கவில்லை. சச்சரவு ஏற்படவே பந்தலுள் அவரைத் துரத்திப் பிடித்த மணமகன் அவ்வோலையை கைப்பற்றிக் கிழித்தெறிந்து விட்டார். இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் ஓர் அழகான ஓவியமாகத் தீட்டுகின்றர்.

''ஆவணம் பறிக்கச் சென்ற
அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக்
கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்றர் ;
அவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னரை
யார்தொடர்ந் தெட்ட வல்லார்?''

துவார பாலகர் வடிவங்கள் சில கோயில்களில் அழகிய சிற்பங்களாக நிறுவப்பட்டிருப்பன; வேறு சில ஆலயங்களில் இவை ஓவிய உருவில் காணப்படுவன. இன்னும் சில சிறு கோயில்களில் இவை ஓவிய வடிவிலும் இரா. எனினும் அவர்களை அவர்களுக்கு உரிய இடங்களில் நாம் மானசீகமாகத் தரிசித்து அனுமதி பெற்ற பிறகே மேற்செல்ல வேண்டும். இந்தப் பெரியபுராணமாகிய கோயிலினும் அவர்கள் இருவரும் ''புரங்கள்' 'செற்ற' என்ற இரு சொற்களுள் மறைந்து நிற்கின்றனர். 'புரங்கள்' செற்ற' போது அவர்கள் அவற்றுள் இருந்தும் அழியாமல் உய்ந்தார்கள். பிறகு துவாரபாலகராகவும் நியமனம் பெற்றனர் என இவ்வரலாற்றைத் தொடர்ந்து விரித்து இவர்கள் இருவரையும் நாம் இந்தச் செஞ்சொற் கோயிலுள் கண்டுகொள்ள வேண்டும். மறைந்து நிற்கவும், சொல்லுக்கு ஒருவராகத் துவாரபாலகர் இருவருக்கும் 'புரங்கள்' 'செற்ற' என்ற இருசொற்கள் அமைத்துள்ள கவிநயம் காண்க.

R. RAJU,
Dy Commissioner H.Q.S.
(Retired)
HR&CE Administration Dept

### சிவலிங்க தரிசனம் :

நாம் இனி நேரே இறைவன் சந்நிதியில் சென்று சிவலிங்க வடிவிலுள்ள பெருமானை வணங்கலாம். பரம ஆசாரிய மூர்த்திகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடனேயே நாமும் சென்று தரிசிக்கும்படி சேக்கிழார் பெருமான் இகோயிலை எழுப்பியுள்ளதைக் கதைப் போக்கில் காண்க.

மணக்கோலத்திலிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் கிழவேதியரின் ஓலையைக் கிழித்தெறிந்தார். வழக்கு மூண்டது. அது திருவெண்ணெய் நல்லூரில் வேதியர்கள் சபையில் விசாரிக்கப்பட்டது. சபையோர் கிழவேதியர் சார்பில் தீர்ப்புச் செய்தனர். தங்களூரினர் என்று கூறி முறையிட்ட கிழவேதியரை அச் சபையோர் அவ்வூரிலுள்ள அவரது வீட்டைக்காட்ட வேண்டினர். கிழவேதியர் அவர்களை அழைத்துக் கொண்டு அவ்வூர்ச் சிவாலயத்தினுட் புகுந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பின் தொடர்ந்தார். கிழ வேதியர் மறைந்தார். திகைத்து நின்ற அவர்களுக்கு இறைவன் உமாதேவியுடன் விண்ணில் ரிஷப வாகனத்தில் காட்சி தருகிறார். அவர்களுடன் சேர்ந்து நாமும் தரிசிப்போம்.

எம்பிரான் கோயில் நண்ண,
இலங்குநூல் மார்பர் எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க
தென்கொலோ ? என்று நம்பி
தம்பெரு விருப்பி னேடு
தனித்தொடர்ந் தழைப்ப, மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி
அவர்தமக் குணர்த்தல் உற்ருர்.

### தட்சிணுமூர்த்தி :

ஆனந்த தரிசனம் முற்றித் துதித்து வரம் பெற்றபின், சுந்தரமூர்த்தி சுவாமிகளுடனே நாமும் சந்நிதியினின்றும் வெளிப்பட்டுப் பிராகாரத்தில் மீண்டும் வலம் வருகின்ருேம். இப்பொழுது நாம் வலம் வருவது மூன்ருவதுமுறை. ஆலயத்தைக் குறைந்தது மும்முறையேனும் வலம் வருதல் வேண்டும் என்ற சிவாலய தரிசன விதியை, நாம் எக்காலத்தும் மறத்தல் கூடாது. இம்முறை தட்சிணுமூர்த்தியையும் கோட்டத்தில் உள்ள பிற மூர்த்தங்களையும் வணங்குதல் வேண்டும். தட்சிணுமூர்த்தியின் சந்நிதி அமைதி மயமானது. அங்கு அம்பிகை இல்லை. சுவாமியே தவ வேடங்கொண்டு கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ளார். அங்குச் சனகாதி முனிவர் நால்வருக்கும் மௌன மாகவே உபதேசம் நடக்கின்றது. சின்முத்திரையே உபதேசம். ''பாசங்கள் மூன்றையும் நீங்கி நீ என்னுடன் ஒன்றிவிடு'' என்பதே இம்முத்திரை காட்டும் தவநெறி. கோயிலில் அன்பர்கள் இச்சந்நிதியில் அமர்ந்தே தியானத்தில் ஈடுபடுவர். இந்தத் தவநெறியைத் தந்தருள வேண்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துறையூர் என்னும் பதியில் இறைவனை வேண்டுவதே, சேக்கிழார் பெருமான் எடுத்துள்ள செஞ்சொற் கோயிலுள் தட்சிணுமூர்த்தி சந்நிதியாக அமைந்துள்ளது.

''சிவனுறையுந் திருத்துறையூர்
சென்றணைந்து தீவினையால்
அவநெறியில் செல்லாமே
தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருள்என்று
தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகும்
திருப்பதிகம் பாடினர்.

### கோஷ்டம்—அண்ணுமலையார் :

தட்சிணுமூர்த்தியைத் தரிசித்து நாம் மேற்செல்லுகின்ருேம். சுவாமியின் கர்ப்பக்கிரகச் சுவர்களின் வெளிப்புறம், பிராகாரத்தில் மூன்று பக்கங்களிலுமுள்ள கோட்டங்களிலும் மூர்த்திகள் இருப்பது நியதி. தெற்குக் கோட்டத்தில் தட்சிணுமூர்த்தியைத் தரிசித்த நாம், மேற்குக் கோட்டத்தில் அண்ணுமலையாரைத் தரிசிக்கின்ருேம். இறைவன் அனலுருவாயத் தூணய் அண்டமுற நிமிர்ந்து நிற்கிருர். திருவடிகள் பாதாளம் ஏழையும் கடந்து செல்லுகின்றன. முடியையும் திருவடிகளையும் தேடிச் சென்ற பிரமனும் திருமாலும் தோல்வி கண்டு திரும்புகிருர்கள். இவர்கள் நிலையே இவ்வாருனல், இந்திரன் முதலிய ஏனைய தேவர்கள் எவ்வாறு காண்பர்? எல்லாரும் ஓய்ந்து ஒதுங்கி நிற்கின்றனர். இதைச் சேக்கிழார் பெருமானே கூறுவதைக் கேளுங்கள்.

மால் அயன்சத மகன்பெருந் தேவர் மற்றும்
உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்
சில மாமுனிவர் சென்றுமுன் துன்னித்
திருப்பி ரம்பின் அடிகொண்டு திளைத்துக்
காலம் நேர்படுதல் பார்த்தயன் நிற்பக் காதல்
அன்பர்கண நாதர் புகும்பொற்
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக் குவித்த
செங்கை, தலைமேற்கொடு புக்கார்.

### நடராஜர்—கனகசபை :

அடிமுடி தேடி அலுத்து நிற்கும் அரியும் அயனும், இங்கேயே நின்று ஏனைய தேவர்களுடன் ஏங்கட்டும். நமக்காகவே இறைவன் அடியைத் தூக்கிக் கொண்டு முடிதுளங்கக் கனகசபையுட் காத்திருக்கின்ருன். அங்குச் செல்வோம் வாருங்கள். வழிகாட்டிக் கொண்டே நமக்கு முன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்று தரிசிப்பதைச் சேக்கிழார் பெருமான் நமக்குக் கூறுகின்ருர் கேளுங்கள்.

''ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''

சோமாஸ்கந்தர் :

நடராஜப் பெருமானின் தரிசனம் முடிந்தவுடன் அம்பிகை சந்நிதிக்குச் செல்லுமுன் சோமாஸ்கந்தரைத் தரிசித்து, நடராஜரின் தரிசனப் பலன் கிட்ட வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். இம்மூர்த்தம், சுவாமியும் அம்பிகையும் இடையில் பாலமுருகனுடன் கூடியதாகும். பெரும்பாலும் செப்புப் படிமமாகிய உற்சவ மூர்த்தமாகவே இருக்கும். கனகசபையினின்றும் அம்பிகை சந்நிதிக்குச் செல்லும் வழியில் திருக்கல்யாண மண்டபம் போன்ற இடங்களில் தரிசிக்கலாம். இடவசதி இல்லாமல் கோயில்களில் வேறு எங்கேனும் வைத்திருப்பார்கள். இவர் எங்கு இருப்பினும் அங்குச் சென்று வழிபட்ட பிறகே, அம்பிகை திருமுன் செல்ல வேண்டுமென்பது விதி. பெரிய புராணமாகிய ஆலயத்துள்ளும் நாம் அவ்வாறு தேடிச் சென்றே, சோமாஸ்கந்தரை வழிபட்டுப் பிறகு அம்பிகையின் சந்நிதிக்கு வருவோம். அதற்கு நாம் சிறுத்தொண்ட நாயனுர் சரிதப் பகுதிக்குச் சென்று திரும்ப வேண்டும்.

சிறுத்தொண்ட நாயனுர் சரிதம், தமிழகம் முழுதும் அறிந்ததொன்ருகும். நாயனுர் சிவனடியாராகிய பைரவரை விருந்துண்ண அழைத்து அவர் விருப்பப்படி தமது ஒரே மகனை அறுத்துக் கறி சமைத்துப் படைக்கிருர். பைரவர் தாமுண்ணும் சமயத்தில் தம்முடனிருந்து புசிக்க அக்குடும்பத்தின் குழந்தையை அழைக்கப் பணிக்கின்ருர். குழந்தை ஏற்கனவே பிள்ளைக் கறியாகச் சமைக்கப்பட்டு அவர் இலையில் படைக்கப்பட்டு விட்டான். செய்வதறியாது திகைத்த நாயனுர் பைரவரின் ஆணைப்படி தமது மனைவியுடன் வெளியிற் சென்று மகனை அழைக்கின்ருர். மகன் உயிருடன் ஓடி வருகின்ருன். ஆனல் பைரவர் மறைந்து விடுகின்ருர். படைக்கப்பட்ட உணவும் மறைந்து விடுகின்றது. இறைவன் சோமாஸ்கந்த மூர்த்தமாக ஆகாயத்தில் காட்சி தருகின்ருன். நாமும் தரிசிக்கின்ருேம்.

''செய்ய மேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்,யாம்
உய்ய அமுது செய்யாதே
ஒளித்த தெங்கே எனத்தேடி,
மையல் கொண்டு புறத்தணைய
மறைந்த அவர்தாம் மலைபயந்த
தைய லோடும் சரவணத்துத்
தனய ரோடும் தாம்அணைவார்.''

—(தொடரும்)

## ''ஓங்கி உலகளந்த உத்தமன்''

''ஓங்கி உலகளந்த உத்தமன்'' எனவரும் திருப்பாவை வரியில் வரும்கின்ற ''உத்தமன்'' என்னும் சொல்லுக்குப் பின்வருமாறு, சிறந்த விளக்கவுரை பெரியோர்களால் தரப்பட்டுள்ளது.

(1) பிறரை இம்சித்துத் தன் வயிற்றை வளர்க்க வேண்டும் என்று இருப்பவன் அதமன்.

(2) பிறரும் ஜீவிக்க வேண்டும், நாமும் ஜீவிக்க வேண்டும் என்றிருக்குமவன் மத்திமன்.

(3) தன்னை அழிய மாறியாகிலும், பிறர் ஜீவிக்க வேண்டும் என்னுமவன், உத்தமன்.

சிதம்பர சுவாமிகள், தாம் இயற்றிய திருப்போரூர்ச் சந்நிதி முறையில், உத்தமர், மத்திமர், அதமர் என்னும் மக்கட் பாகுபாட்டினைக் குறித்து அருளியிருப்பதும், இங்கு இயைபுபற்றி அறிதற்குரியது. தாம் விரும்பும் சிறு சிறு இம்மைப் பயன்தனை விரும்பி, இறைவனை வழிபடுபவர்கள், அதமர். மறுமைப் பயனுகிய வீடு பேறு முதலியன குறித்து வழிபடுவோர், மத்திமர், எதனையும் தமக்கெனக் குறியாமல் அன்பினுல் மட்டுமே இறைவனைப் பணிபவர்கள், உத்தமர். எனச் சிதம்பர சுவாமிகள் கூறுகின்ருர்.

''மறுமை குறித்த பயத்தாற் பணிபவர் மத்திமரே;
சிறுமை குறித்துப் பணிவா ரதமர்கள்; செப்புமிந்த
உறுமை குறித்திலர் அன்பாய்ப் பணிபவர் உத்தமரே;
பொறுமை குறித்தவர் சூழ்சம ராபுரிப் புண்ணியனே''

என்பது, சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்துள்ள ''திருப்போரூர்ச் சந்நிதி முறை'' என்னும் ஓர் அரிய இனிய முருகன் துதி நூலின்கண் வரும் சிறந்த திருப்பாடல்களுள் ஒன்று. இவற்றின்படி, நாம் அனைவரும் ''உத்தமர்கள்'' என்னும் நல்ல பெயரைப் பெறும் நிலையில், நலமுற வாழ முயல்வோமாக!

—ஆசிரியர்.

# இராமாநுச நூற்றந்தாதி

[முற்றொடர்ச்சி] [—ஆசிரியர்]

**86) கற்றார் பரவும் இராமாநுசன்:**

பயன் சிறிதும் இல்லாத மனிதர்களைப் பெரிதாக நம்பிப் பற்றிக் கொண்டு, அவர்கள் பின்சென்று அலைந்து திரிந்து, அவர்கள் ஏவிய குற்றேவல்களைச் செய்வதற்காக இனிமேல் ஓடி உழன்று வருந்த மாட்டேன். சிறந்த ஞான நூல்களைக் கற்றவர்களால் புகழ்ந்து கொண்டாடப்படுகின்ற, இராமாநுசரை நினைந்து வணங்குதற்குரிய நெஞ்சை உடையவர்கள் யாரோ, அந்தப் பெரியவர்களே நம்மை நிலையாக அடிமைகொள்ளும் உரிமை யுடையவர்கள் ஆவர்.

பற்று மனிசரைப் பற்றி,
அப்பற்று விடாது, அவரே
உற்றார் எனஉழன்று ஓடி
நையேன் இனி; ஒள்ளியநூல்
கற்றார் பரவும் இராமாநுசனைக்
கருதும் உள்ளம்
பெற்றார் எவர்? அவர்எம்மை
நின்றாளும் பெரியவரே!

**87) கீர்த்தி இராமாநுசன் :**

அறிவு ஆற்றல்களால் நிறைந்த பெரு மக்கள் பேசினாலும், ஒன்றும் தெரியாது எளிய மக்கள் பேசினாலும், தமது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் பெற்றிருப்பவர் என்று பலகாலும் சொல்லி, சிறந்த ஞானிகள் நினைந்து புகழ்கின்ற தெய்விகப் புகழை உடையவரான இராமாநுசர், வேதங்களை ஆராய்ந்து இவ்வுலகத்தில் உபதேசித்தருளிய நல்ல ஞான நெறியிற் சேராதவர்களைக், கலிபுருடன் பிடித்துக் கொண்டு, பெரிதும் துன்புறுத்துவான்.

பெரியவர் பேசிலும், பேதையர்
பேசிலும், தன்குணங்கட்கு
உரியசொல் என்றும் உடையவன்
என்றென்று, உணர்வில்மிக்கோர்
தெரியும் வண்கீர்த்தி இராமாநுசன்,
மறைதேர்ந்து உலகில்
புரியும் நல்ஞானம் பொருந்தா
தவரைப் பொரும் கலியே!

**88) வலிமிக்க சீயம் இராமாநுசன் :**

நிலவளம் மிகுந்த செந்நெற் பயிர் வளரும் வயல்களை உடைய திருக்குறையல் என்னும் ஊரில் தோன்றியருளியவரும், கலைநலம் மிகுந்த திவ்வியப் பிரபந்தங்களை அருளிச் செய்த பெருமை வாய்ந்தவரும் ஆகிய திருமங்கையாழ் வாருடைய, வியக்கத் தக்க இசை நலம் பொருந்திய பெரிய திருமொழிப் பாடல்களை அனுபவித்துத் தமது திருவுள்ளம் பூரித்து, அதனால் பெருமிதம் நிறைந்த சிங்கம் போன்று திகழ்கின்ற இராமாநுசர், வேதத்தின் பொருள் அறியாமல் அழிவழக்குப் பேசுகின்ற சிற்றறிவினராகிய கொடிய புலிகள், இவ்வுலகம் ஆகிய காட்டில் மிகுதியாகிவிட்டனஎன்று, அவற்றைக் கடிந்து ஒறுப்பதற்காக, இவ்வுலகத்தில் திருவவதாரம் செய்தருளிய சிறப்பினை, யான் எப்போதும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பேன்.

கலிமிக்க செந்நெற் கழனிக்
குறையல் கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டு, தன்உள்ளம்
தடித்து, அதனுல்
வலிமிக்க சீயம் இராமாநுசன்,
மறை வாதியராம்
புலிமிக்கது என்று இப்புவனத்தில்
வந்தமை போற்றுவனே

**89) போற்றரும் சீலத்து இராமாநுசன் :**

புகழ்ந்து எல்லையிட்டு முடிக்க இயலாத சிறந்த சீலகுணங்களை உடைய இராமாநுசரே! தங்களுடைய புகழ்மிக்க மேலான பண்பு நலங்களை உணர்ந்து, யான் பேசத் தொடங்குவேனாயின், நீசனாகிய யான் பேசுவது, தங்கள் புகழுக்கு இழுக்காகும். அவ்வாறு நான் பேசுவது தவிர்ந்தால், தங்களின் திருக்குணங்களுக்குச் சிறந்த மேன்மையாகும் என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும், என்னுடைய நெஞ்சமானது தங்களின் திருக்குணங்களைப் புகழ்ந்து அன்றி ஆற்றியிருக்க மாட்டாது. அதனால் இது பற்றித் தாங்கள் யாது நினைக்கின்றீர்களோ என்று, யான் பெரிதும் அஞ்சுகின்றேன்.

போற்றரும் சீலத்து இராமாநுச!
நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல், அதுதாழ்வு; அது தீரில்
உன்சீர் தனக்குஓர்
ஏற்றம் என்றே கொண்டிருக்கிலும்,
என்மனம் ஏத்திஅன்றி
ஆற்றகில்லாது; இதற்கு என்நினைவாய்?
என்றிட்டு, அஞ்சுவேன்!

**90) எனை ஆளவந்த இராமாநுசன் :**

உலகியல் துன்ப வாழ்வினை ஒழித்தருளும் பேருதவியாளராகவும், இப்பெரிய நிலவுலகில் என்னை அடிமை கொள்ளுவதற்கே அவதரித்தவராகவும் உள்ள, இராமாநுசரை நினைந்து தொழாதவர்களாகவும், அவர் தம் புகழைக் குறித்து நல்ல பாடல்களைப் பாடாதவர்களாகவும், அவரைப் பற்றிப் பாடும் பேறு பெற்ற சிறந்த

பெருமக்களின் திருவடிகளில் மலர் மாலைகளைச் சாத்தி வணங்காதவர்களாகவும், உள்ள மனிதர்கள், அறியாமை நிறையப் பெற்று, உலகியல் வாழ்க்கையில் கிடந்து துன்பப்படுவார்கள்.

நினையார் பிறவியை நீக்கும்
பிரானை, இந்நீள் நிலத்தே
எனை ஆளவந்த இராமா
நுசனை, இருங்கவிகள்
புனையார், புனையும் பெரியவர்
தாள்களிற் பூந்தொடையல்
வனையார், பிறப்பில் வருந்துவர்
மாந்தர் மருள் சுரந்தே!

## 91) புண்ணியன் இராமாநுசன் :

சிவபிரான் சொன்ன சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு விவாதம் செய்கின்ற பாசுபதர்கள், அறியாமை மேலிடப்பெற்று, சிவபிரானின் பரத்துவம் குறித்துக் கூறுகின்ற பொருத்தமற்ற பொருள்களாகிய இருள்மிகுதிப் பட்டு, அதனால் மயக்கமுற்று வருந்திய உலக மக்களின் அறியாமை இருளானது நீங்கும்படியாகத் தம்முடைய சிறந்த அருளைப் பெருக்கி, 'எல்லா உயிர்களுக்கும் தலைவன் திருவரங்க நாதனே' என்னும் பொருளைத் தெளிவுற வெளியிட்டருளிய எங்களுடைய இராமாநுசர் சிறந்த புண்ணிய புருடராவர்.

மருள் சுரந்து ஆகமவாதியர்
கூறும் அவப்பொருளாம்
இருள் சுரந்து எய்த்த உலகிருள்
நீங்கத், தன் ஈண்டியசீர்
அருள்சுரந்து எல்லா உயிர்கட்கும்
நாதன் அரங்கனென்னும்
பொருள்சுரந்தான், எம் இராமாநுசன்
மிக்க புண்ணியனே

## 92) எண்ணருங் கீர்த்தி இராமாநுசன் :

நல்ல சாத்திரங்களைக் கற்றுக் கவிதை இயற்ற வல்லவர்களுக்கும், அளவிட்டு அறிய முடியாத புகழை உடைய இராமாநுசரே! நல்ல தவநலஞ் சான்ற ஒரு நோன்பினையும் அடியேன் கடைப்பிடிக்கவில்லை. தங்களுடைய திருவடிகளை வாழ்த்துதற்கு ஏற்ற நுண்ணிய அரிய கேள்வியை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லவும் செய்கிலேன். இவ்வாறு இருக்க, இன்று அடியேனது கண்ணினுள்ளும் நெஞ்சினுள்ளும் தாங்கள் புகுந்து எழுந்தருளி விளங்குதற்குக் காரணம் அருளிச் செய்தல் வேண்டும்.

புண்ணிய நோன்பு புரிந்தும்இலேன்;
அடிபோற்றி செய்யும்
நுண்ணருங் கேள்வி நுவன்றும்இலேன்;
செம்மை நூற்புலவர்க்கு
எண்ணருங் கீர்த்தி இராமாநுச!
இன்று நீபுகுந்து, என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற
இக்காரணம் கட்டுரையே.

## 93) இராமாநுசன் என்னும் மெய்த்தவன் :

அடியேன்பால் வந்து பொருந்தி நெருங்கித், தம்முடைய அருள் ஆகிய அழகிய வாளை உறையில் இருந்தும் உருவி, அதனால் எனது கொடிய பாவங்களை வேருடன் அறுத்து ஒழித்த இராமாநுசர் என்னும் மாமுனிவர், எத்தகையவர் என்னில், தீயவர்களான குறுகிய நோக்குடையவர்கள், தவறான பொருள்களை வேதங்களின் பொருளாகக் கொண்டு கூறுகின்ற புல்லிய சொற்களைக் கடிந்து ஒழித்த பெருமகனார் ஆவர்.

கட்டப் பொருளை இறைப்பொருள்
என்று, கயவர்சொல்லும்
பெட்டைக் கெடுக்கும் பிரான்
அல்லனே! என் பெருவினையைக்
கிட்டிக் கிழங்கொடு தன்அருள்
என்னும் ஒள்வாள் உருவி,
வெட்டிக் களைந்த இராமாநுசன்
என்னும் மெய்த்தவனே!

## 94) திவந்தரும் தீதில் இராமாநுசன்:

எவ்வகையான சிறு குற்றமும் இல்லாதவரான, இராமாநுசர், தம்மை வந்து அடைந்தவர்களுக்குச் சரணாகதி நிலையைக் கொடுத்தருள்வர் ; பக்தியாகிய செல்வத்தையும், தமது அருளாகிய பெருஞ்செல்வத்தையும் அளித்தருள்வர்; நீக்கி விலக்க இயலாத பிறவித் துன்பங்களை உண்டாக்குகின்ற கொடிய பாவங்களையெல்லாம் போக்கியருள்வர்; பரந்தாமம் என்னும் பரமபதமாகிய வீட்டுலகத்தை வழங்கி அருள்வர். ஆதலால் அடியேன் இராமநுசருடைய சிறந்த பண்பு நலங்களைத் தவிர, வேறு எதனையும் மனத்தாலும் விரும்பி நுகர்ந்து மகிழமாட்டேன்.

தவம்தரும்; செல்வும் தகவும்
தரும்; சரியாப் பிறவிப்
பவம்தரும்; தீவினை பாற்றித்
தரும்; பரந்தாமம் என்னும்
திவம்தரும்; தீதில் இராமாநுசன்
தன்னைச் சார்ந்தவர்கட்கு;
உவந்து அருந்தேன், அவன்சீர்அன்றி;
யான் ஒன்றும் உள்மகிழ்ந்தே

## 95) வீடு அளிப்பான் இராமாநுசன்:

எல்லா உயிர்களுக்குள்ளும் உயிர்க்குயிராய்க் கலந்திருந்து, அவற்றிற்கு நலம் பயப்பனவற்றையே இயற்றிக் கொண்டு, அவ் உயிர்கள் உய்தற்குரியனவற்றையே செய்து கொண்டிருக்கிற திருமாலும், உயிர்களிடத்தில் இராமாநுசரைப்போலப் பரிவு உடையவன் அல்லன் என்று சொல்லத் தகுந்த நிலையில், அனைத்துயிர்களுக்கும் வீடுபேற்றை அருள்வதற்காக, இராமாநுசர் வைகுந்தத்தில் இருந்து இந்நிலவுலகத்திற்கு வந்து அவதரித்து, எல்லார்க்கும் உய்தியைத் தருவதற்குரிய நான்கு வேதங்களையும் குறைவின்றி வளரச் செய்தருளினார்.

உள்நின்று உயிர்களுக்கு உற்றனவே
செய்து, அவர்க்கு உயவே
பண்ணும் பரனும் பரிவிலன்
ஆம்படி, பல் உயிர்க்கும்
விண்ணின் தலைநின்று, வீடு
அளிப்பான்; எம் இராமாநுசன்
மண்ணின் தலத்துஉதித்து, உய்மறை
நாலும் வளர்த்தனனே!

**96) எம் இறைவன் இராமாநுசன் :**

அளவற்ற துன்பங்களை விளைவிக்க வல்ல கொடிய தீவினைகளால் மிக மேலான அறமாகிய சரணாகதி நெறியில் பெரு நம்பிக்கை எய்தாமல், அருவருக்கத் தக்க நாற்றங்களுக்கு இருப்பிடமான உடலானது, கட்டுக்குலையும் வரையில் ஒருவாறு பொறுத்திருந்தும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்கின்ற ஐம்புல அவாக்களிற் போய் விழுந்தும், துணையின்றித் திரிகின்ற இழிகுணமுடைய எனக்குக் கண்கண்ட கடவுளர்கள், நம் இராமாநுசரைப் புகலடைந்த பெருமக்களேயாவர்.

வளரும் பிணிகொண்ட வல்வினையால்,
மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்து
அறியாது; முடைத்தலை ஊன்
தளரும் அளவும் தரித்தும்,
விழுந்தும், தனித் திரிவேற்கு
உளர்எம் இறைவர்; இராமாநுசன்
தன்னை உற்றவரே

**97) குணம் சாற்றும் இராமாநுசன்:**

இராமாநுசர், தம்மைப் புகலாகப் பற்றி இருப்பவர்கள் உளரே தவிர, தம்மைப் பற்றி யிருப்பவர்களின் நற்குணங்களைப் புகழ்ந்து மகிழும் அடியார்க்கு அடியவர்கள் ஒருவரும், தம்மை அடைந்தவர்களில் இல்லை என்று திருவுள்ளம் கொண்டு, அடியேனை, இந் நாளில் தமது அருளாலே தம்மை அடைந்து தொண்டு புரியும் இயல்பு உடையவர்களான தன் அடியார்களினுடைய, திருவடித் தாமரைகளை, அடைந்து ஆட்செய்யும்படி செலுத்தி அருளினார். அத்தகைய இராமாநுசரின் சிறந்த குணங்களை நாம் போற்றுவோமாக!

தன்னைஉற்று ஆட்செய்யும் தன்மையினோர்
மன்னு தாமரைத்தாள்
தன்னைஉற்று, ஆட்செய்ய என்னை
உய்த்தான் இன்று; தன்தகவால்
தன்னைஉற்றார் அன்றித் தன்மையுற்றார்
இல்லை என்று அறிந்து,
தன்னைஉற்றாரை; இராமாநுசன்
குணம் சாற்றிடுமே

**98) நம் இராமாநுசன் :**

நம் இராமாநுசர், உமது திருவடிகளே அடைக்கலம் என்று நாம் கூறிவிட்டோமாயின், சிலர்க்கு இனிதாகத் தோன்றுகின்ற சுவர்க்கத்தில் நம்மைக் கொண்டுசேர்த்து மகிழ்விப்பரோ? அல்லது நரகத்திலே கொண்டு சேர்த்துச் சுடுவித்து வருத்துவிப்பரோ? அந்த சுவர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடப்பதும், தொன்று தொட்டுச் சுழன்று வருவதுமாக உள்ள பிறவியிற் செலுத்துவரோ? அல்லது இனிமேலுள்ள காலங்களில் நாம் செல்கின்ற வழியிலேயே நம்மை விட்டு வைப்பாரோ? இவைகளில் யாதொன்றும் நம் திறத்துச்செய்யார். ஆதலின் நெஞ்சமே! பேறுபெறும் செய்தி குறித்து நீ சிறிதும் கவலைப்படுதல் வேண்டா?

இடுமே இனிய, சுவர்க்கத்தில்?
இன்னும் நரகில் இட்டுச்
சுடுமே? அவற்றைத் தொடர்ந்து
தொல்லைச் சுழல்பிறப்பில்
நடுமே? இனிநம் இராமாநுசன்
நம்மை நம்வசத்தே
விடுமே? சரணம் என்றால்;
மனமே! நையல் மேவுதற்கே.

**99) பொற் கற்பகம் இராமாநுசன் :**

வீண் குதர்க்கம் செய்கின்ற சமணர்களும், பேய்கள் போலத் தாம் பிடித்த பிடியை விடாது நிற்கின்ற பௌத்தர்களும், நீண்ட சடைமுடியை உடைய உருத்திரனுடைய சொல்லாகிய ஆகம நூல்களைக் கற்ற தாமத குணமுடைய சைவர்களும், எல்லாம் சூனியம் என்கின்ற பாழும் கொள்கையினரும், நான்கு வேதங்களும் நன்கு விளங்கிக் கொண்டிருக்கவும் அவற்றிற்குச் சிறிதும்பொருந்தாத அழிபொருள்களைக் கூறுகின்ற குறுகிய நோக்குடையவர்களும் ஆகிய அனைவரும், சிறந்த கற்பக மரம் போன்ற உதாரகுணமுடைய வள்ளலார் ஆன இராமாநுசர், விரிந்து பரந்த இந்நிலவுகத்தில் தோன்றியருளிய பின்னர், அழிந்தொழிந்து போயினர்.

''தற்கச் சமணரும், சாக்கியப்
பேய்களும், தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும், சூனிய
வாதரும், நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும்,
மாண்டனர்; நீள்நிலத்தே
பொற் கற்பகம், எம் இராமாநுச
முனி போந்தபின்னே!''

**100) ஈந்தருளும் இராமாநுசன் :**

இராமாநுசரே! எனது நெஞ்சம் ஆகிய அழகிய வண்டானது, தங்களுடைய திருவடித் தாமரைகளில், அழகிய குணங்கள் ஆகிய தேனைப் பருகி, என்றும் தங்கி வாழ விரும்பித், தங்களிடத்தில் புகலடைந்து வந்து சேர்ந்தது; அத் திருக்குணங்களையே அதற்குத் தாங்கள் அளித்தருள்தல் வேண்டும். நும் திருக்குணங்களாகிய தேனைத் தவிர வேறு எதனையும், என்

நெஞ்சமாகிய வண்டு அருந்தமாட்டாது. ஆதலின் அதற்குத் தாங்கள் வேறு எதனையும் காட்டி மயக்குதல் வேண்டா.

போந்தது என்நெஞ்சு என்னும்பொன்வண்டு,
உனது அடிப்போதில் ஒண்சீர்
ஆம்தெளிதேன் உண்டு அமர்ந்திட
வேண்டி நின்பால்; அதுவே
ஈந்திட வேண்டும்; இராமாநுச!
இதுவன்றி ஒன்றும்
மாந்தகில்லாது; இனி மற்றொன்று
காட்டி மயக்கிடலே!

## 101) துயர் அகற்றும் இராமாநுசன் :

அறியாமையை விளைவிக்க வல்ல, புண்ணியம் பாவம் என்னும் இரு வகை வினைகளாகிய விலங்கில் அகப்பட்டுக் கொண்டு, அறிவு கெட்டு மயங்கச் செய்கின்ற, உலக வாழ்க்கையிற் பிறந்த அடியேனின் துன்பங்களைப் போக்கி, உய்யச் செய்து அருள்கின்ற இராமாநுசரே என்று, தங்களுடைய சிறப்புக்களைப் புகழ்கின்ற இந்தச் செயல், தங்களை நினைந்து உருகி எப்போதும் அன்புடன் இருப்பவர்களுக்குத் தகாதது என்று, நல்லோர்கள் சொல்லுவார்கள்.

மயக்கும் இருவினை வல்லியிற்
பூண்டு, மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய
என்னைத் துயர் அகற்றி,
உயக்கொண்டு நல்கும் இராமாநுச
என்றது, உன்னை உன்னி
நயக்கும் அவர்க்கு இது இழுக்கென்பர்,
நல்லவர் என்றும் நைந்தே.

## 102) ஐயன் இராமாநுசன் :

இராமாநுசரே! என்னுடைய நெஞ்சமானது தங்களுடைய திருக்குணங்களைச் சிந்தித்துக் கரைகின்றது ; எனது வாக்கானது நிலைநின்று எமக்குத் தலைவரான இராமாநுசரே என்று அழைக்கின்றது; பெரும் பாவியான என்னுடைய கைகளும் குவிந்து வணக்கம் செலுத்துகின்றன; கண்கள் தங்களைக் காணப் பெரிதும் விரும்புகின்றன; சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இந் நிலவுலகத்தின் உள்ளே, தங்களுடைய வள்ளன்மைக் குணம், அடியேன் மீது இவ்வாறு வளர்ந்ததற்குக் காரணம் யாதோ?

நையும் மனம் உன்குணங்களை
உன்னி; என்நா இருந்துஎம்
ஐயன் இராமாநுசன் என்று
அழைக்கும்; அருவினையேன்
கையும் தொழும்; கண்கருதிடும்
காணக்; கடல்புடைசூழ்
வையம் இதனில், உன் வண்மை
என்பால் என்? வளர்ந்ததுவே!

## 103) நன்ஞானம் அளித்த இராமாநுசன்:

முன்னொரு காலத்தில் கொடுமையான சீற்றம் நேரிடப் பெற்று ஒரு நரசிங்கமூர்த்தியாகத் தோன்றி, வாட்படையை உடைய இரணியன் என்னும் அசுரனின், செருக்கினுல் நிமிர்ந்திருந்த பொன்னிறமான மார்பைப் பிளந்து அழித்தவன் ஆகிய திருமாலின் புகழ்கள் ஆகிய பயிர் வளர்ந்து செழித்து விளையப் பெற்ற, திருவுள்ளத்தை உடைய இராமாநுசர், எனது உடலைப் பற்றியிருக்கின்ற வினைநோய்களையெல்லாம் ஒழித்து, உள்ளங்கை நெல்லிக்கனி போல எளிமையாகச் சிறந்த ஞானத்தைக் கொடுத்தருளினர்.

வளர்ந்த வெம்கோப மடங்கல்ஒன்றாய்,
அன்று வாள்அவுணன்
கிளர்ந்த பொன்ஆகம் கிழித்தவன்,
கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமாநுசன்
என்றன் மெய்வினை நோய்
களைந்து, நன்ஞானம் அளித்தனன்,
கையில் கனியென்னவே

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HRACE Administration Dept

## 104) செழுங்கொண்டல் இராமாநுசன் :

கொடுக்கும் திறனில் சிறப்புடைய மேகம் போன்ற இராமாநுசரே! தாங்கள் நம் கண்ணபிரான் ஆகிய திருமாலை, உள்ளங்கை நெல்லிக்கனி போல, காண்பித்துக் கொடுத்தாலும், தங்களுடைய திருமேனியில் விளங்குகின்ற அழகு பொலிவு முதலிய குணங்களைத் தவிர, வேறு ஒன்றிலும் யான் கண் வைக்கமாட்டேன். உலகியல் வாழ்க்கையாகிய நரகக் குழியில் அழுந்திக் கிடந்தேன் ஆயினும், ஒளி மயமான பரமபதத்தை அடைந்தேன் ஆயினும், தங்களுடைய திருமேனி அழகை அனுபவித்து இருத்தற்கு உரிய அருளைத் தாங்கள் செய்தருளினுல் தான், உலக வாழ்க்கையிலோ வீடுபேற்றிலோ யான் ஈடுபட்டுத் தரித்திருப்பேன்.

கையில் கனியென்னக் கண்ணனைக்
காட்டித் தரினும், உன்றன்
மெய்யிற் பிறங்கிய சீர்அன்றி
வேண்டிலன் யான்; நிரயத்
தொய்யில் கிடக்கினும், சோதி விண்
சேரினும், இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன், இராமாநுச
என் செழுங் கொண்டலே.

## 105) நன்ஞானி இராமாநுசன் :

அழகிய அலைகளை உடைய திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலின் திருவடிகளின் கீழ் விழுந்து பணிந்து கிடக்கின்ற, பெருமக்களுடைய திருவுள்ளத்திற் பொருந்தி எழுந்தருளியிருக்கின்ற சிறந்த ஞானியாகவும்,

நல்ல வேதங்களை ஓதிய பெரியவர்கள் தொழுகின்ற திருவடிகளை உடையவராகவும் திகழ்கின்ற, இராமாநுசரைத் தொழுகின்ற பெரியோர்கள், இன்பத்தால் துள்ளி மகிழ்ச்சியினுல் ஆரவாரித்துக் கூத்தாடுகின்ற இடமே, அடியேனுடைய இருப்பிடமாகும்.

செழும்திரைப் பார்கடற் கண்துயில்
மாயன், திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவும்
நன்ஞானி; நல் வேதியர்கள்
தொழும் திருப்பாதன் இராமா
நுசனைத் தொழும் பெரியோர்
எழுந்து இரைத்து ஆடும்இடம்,
அடியேனுக்கு இருப்பிடமே.

**106) மாயன் இராமாநுசன்:**

திருமால் இருந்து உறையும் இடம் வைகுந்தம், திருவேங்கடம், மற்றும் திருமாலிருஞ்சோலை என்னும் மலையாகிய இடம் என்று நல்லோர்கள் சொல்லுவர். இவற்றை இருப்பிடமாக உடைய திருமால், வைகுந்தம் முதலிய அந்தத் தலங்களோடு கூடி வந்து எழுந்தருளியிருப்பது இராமாநுசரின் திருவுள்ளத்திலேயாகும் ; அவ் இராமாநுசர்தாம் இப்போது வந்து தமக்கு இன்பம் மீக்கூர எழுந்தருளியிருப்பது, அடியேனுடைய இதயத்திலேயேயாகும்.

இருப்பிடம் வைகுந்தம், வேங்கடம்,
மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம், மாயனுக்கு என்பர்
நல்லோர்; அவைதன்னெடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமாநுசன்
மனத்து; இன்று அவன்வந்து
இருப்பிடம் என்றன் இதயத்தின்
உள்ளே தனக்கு இன்புறவே.

**107) இன்புற்ற சீலத்து இராமாநுசன்:**

இன்பம் மிகுந்து நிறைந்த சிறந்த சீல குணங்களை உடைய இராமாநுசரே! தங்களிடத்தில் அடியேன் விண்ணப்பிக்க வேண்டிய செய்தி ஒன்றுண்டு. என்பால் உறைந்து நலிவிக்கக் கூடிய பிணிகளுக்கு இருப்பிடமான உடல்களிலெல்லாம் சென்று சென்று பிறப்பதும் இறப்பதுமாய், எண்ண முடியாத துன்பங்களை அடைந்து முடிந்து போனுலும், எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் தங்களுடைய அடியார்கள் திறத்தில் உண்மை அடியவனுக இருக்கும்படி அடியேனைச் செய்தருளி, அந்த அடியார்கள் இடத்தில் எளியேனை ஆட்படுத்தி அருளுதல் வேண்டும். இதுவே என்னுடைய வேண்டுகோளாகும்.

இன்புற்ற சீலத்து இராமாநுசா!
என்றும் எவ்விடத்தும்,
என்புற்ற நோய்உடல்தோறும் பிறந்து
இறந்து, எண்ணரிய
துன்புற்று வீயினும், சொல்வது
ஒன்றுஉண்டு; உன்தொண்டர்கட்கே
அன்புற் றிருக்கும்படி, என்னை
ஆக்கி அங்கு ஆட்படுத்தே.

**108) பொங்கிய கீர்த்தி இராமாநுசன்:**

நெஞ்சமே! பக்தி முழுதும் தம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக, வீறுகொண்டு பரந்த புகழ் உடையவரான இராமாநுசருடைய திருவடித் தாமரைகள், நமது தலைமேல் என்றும் தங்கி நிலைபெறும்படி, நாம் செய்தற்குரிய செயல் யாது எனின், அழகிய கயல் மீன்கள் பாய்கின்ற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் திருவரங்கநாதனின் அழகிய திருமார்பில் நிலையாக வாழ்பவளும், சிறந்த தாமரை மலரில் பிறந்த பாவை போன்றவளுமான திருமகளை, வாழ்த்துவதேயாகும்.

அம்கயல் பாய்வயல் தென்அரங்கன்
அணிஆகம் மன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்
போற்றுதும்; பக்திஎல்லாம்
தங்கியது என்னத் தழைத்து,
நெஞ்சே! நம் தலைமிசையே
பொங்கிய கீர்த்தி இராமாநுசன்
அடிப் போது உறவே!

**(திருவரங்கத்து அமுதனுர் இயற்றியதும்,**

**பிரபந்ந காயத்திரி என்று போற்றப்படுவதும் ஆகிய**

**இராமாநுச நூற்றந்தாதி மூலமும், உரையும் முற்றுப் பெற்றன.)**

—ஆசிரியர்

# திருமால்நெறியின் சிறப்பு

'மகாவித்வான்'

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்

அநாதி காலமாகவே உலகில் பலபல மதங்கள் தோன்றி வேரூன்றியுள்ளன. மதமெனினும் கொள்கையெனினும் ஒக்கும். மதமென்பது வடமொழி, கொள்கையென்பது தென்மொழி. பொருள் ஒன்றே. ஒரு பெருங்கூட்டத்தார் கொண்ட கொள்கையையே மதமென வழங்குவர். வைணவம், சைவம், துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என வழங்கும் சில மதங்களே தென்னிந்தியர் பெரும்பாலும் அறிந்தவை. வட இந்தியாவில் நெடுந்தூரம் சென்றோமாயின் வல்லப மதம், நிம்பார்க்கமதம், சைதன்யமதம்...என்றிப்படி எண்ணிறந்த மதங்கள் வழங்குவது காண்போம். பொதுவாக மதத்தை இருவகையாகப் பிரிப்பர் பெரியோர். வைதிகமென்றும், அவைதிகமென்றும். வேதத்தைப் பிரமாணமென்று இசைந்து அதை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய மதம் வைதிகம் எனப்படும். அங்ஙனமல்லாதது அவைதீகம் என்றும் தன்னடையே விளங்கும். துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் மதங்கள், வேதத்தையே அப்படையாகக் கொண்டு தோன்றியவையாயினும், வேதப் பொருள்களை வெவ்வேறு வகையாகக் கொள்ளுங் காரணத்தினால் மதபேதம் ஏற்பட்டது.

வைதிக மதங்களுள் ஒன்றான வைணவ மதத்தைப் பற்றி இங்குக் கூறுவோம். வைஷ்ணவ மதம் அல்லது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் என்பதே, வைணவமெனப்படுகின்றது. இதனையே இராமாநுஜ மதம், இராமாநுஜ ஸம்பிரதாயம், எம்பெருமானார் தரிசனம் என்கிற பெயர்களாலும் வழங்குவதுண்டு. இதனால் எம்பெருமானார் எனப்படுகிற இராமாநுஜர் காலந்தொடங்கித் தோன்றிய மதம் வைணவ மதம் என்று, சிலரோ பலரோ எண்ணிவிடுவதும் சொல்லிவிடுவதுமுண்டு. உண்மை அங்ஙனமல்ல. ஆழ்வார் காலத்திலும் அவர்கட்குப் பிறகு நாதமுனிகள் என்னும் ஆசர்ரியருடைய காலத்திலும் தழைத்தோங்கிய மதம் வைணவம், நாதமுனிகளென்பவர் இராமாநுஜர்க்கு முந்நூறு வருடங்கள் முற்பட்டவர். இடையில் ஆளவந்தாரென்கிற பிரபல பண்டிதரான பேராசிரியர் தோன்றி, வைணவக் கோட்பாடுகளை யுணர்த்தும் பல நூல்களை (வடமொழியில்) இயற்றியுள்ளார். அவ்வாசிரியருடைய சீடர்களை அடிபணிந்து பெரும்புகழ் பெற்றவர் இராமாநுஜர். இவர் அவதார புருஷராகிப் பலபல கலைகளும் பயின்று விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல் மிக மேம்பட்டு விளங்கினபடியால், இவரது திருவடிகளை ஆயிரக்கணக்கான சீடர்கள் பணிந்து உய்வுபெற, அன்னவர்கள் முகமாகவும், வைணவம், உலகில் பரவி மிக்க வீறுபெற்றது.

வைணவத்தின் கொள்கையைச் சுருக்கமாகச் சிலர் தெரிந்து கொள்ள விரும்பினால், தத்துவம் இதம் புருஷார்த்தம் எனப்படுகின்ற மூன்றில், வைணவர்களின் சித்தாந்தத்தை உணரப்பெற வேண்டும். பரதெய்வமாகக் கொள்ளப்படுவது எது? அதனை அடையும் வழியாகக் கொள்ளப்பட்டது எது? அடைந்த பிறகு கொள்ளும் பயன் எது? என்கிற இவற்றையறிந்து கொள்வதே தத்துவ இதபுருஷார்த்த ஞானமெனப்படும். கொள்கைகளை உட்புகுந்து ஆராயுங்கால் பல்வேறு விஷயங்கள் ஒன்றின் மேலொன்றாக வந்துபுகும். அவ்வளவு விரிவுவேண்டா. இம்மூன்றையுணர்வது போதும்.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்றும், அவனது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுவதே இதமென்றும், ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே (அதாவது நித்திய கைங்கரியம் செய்வதே) புருஷார்த்தமென்றும் நிலையிடுவதே, வைணவ ஆசிரியர்களின் ஒருமிடறான சித்தாந்தம். வேதம் முதலிய நூல்களில் தெய்வங்கள் பலபல கூறப்பட்டிருந்தாலும், திருமால் ஒருவரே தெய்வம் என்று, அறுதியிடுதலும், கருமம், ஞானம் பக்தி....என்றிப்படி பல உபாயங்கள் (வழிகள்) பேசப்பட்டிருந்தாலும், புருடார்த்தமாக வெவ்வேறு பேறுகள் பேசப்பட்டிருந்தாலும், நூற்கொள்கைகளை ஆய்ந்து ஓய்ந்து அறுதியிடவல்ல பேராசிரியர்கள் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியையே வழிபடு தெய்வமாகவும், சரணாகதியையே தஞ்சமாகவும், அப்பரமபுருஷன்பால் தொண்டு செய்வதையே புருஷார்த்தமாகவும் நிலையிட்டுள்ளார்கள். இத்தகைய அர்த்த விசேஷங்களை உபதேச முகத்தாலும் நூன்முகத்தாலும் நிலைநாட்டினவர்களென்கிற காரணத்தினால் ஆழ்வார்களும் ஆசாரியர்களும், ஸ்ரீமந்நாராயணமூர்த்தியோடொப்ப ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள். இச்சம்பிரதாயத்திற்கு இவர்கள் செய்தருளிய உபகாரம் மிகப் பெரியதாதலால் இவர்கள் மகோபகாரர்களென்று குலாவப்படுகிறார்கள். அவரவர்கள் உயிரோடிருக்கும் நாளில், தம்அடி பணிந்தவர்களுக்கு உபதேசங்களை மட்டும் செய்து போனவர்களிற் காட்டிலும், உபதேசமுஞ் செய்து பிற்காலத்தவர்களும் நெடுக வாழுமாறு நூல்களைத் தேனும் பாலும் கன்னலுமமுதுமாகப் பொறித்து வைத்தவர்கள் மகோபகாரர்கள் எனப்படுவர். பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வாரளவாகவுள்ள ஆழ்வார்கள் பன்னிருவரும் தமிழ் வேதமென்றும் திவ்வியப் பிரபந்தங்களென்றும் வழங்கப்படுகிற பாசுரங்களைப் பாடிவைத்து மேற்சொன்ன தத்வ ஹித புருஷார்த்தங்களை விளங்க வைத்தார்கள். அத் திவ்வியப் பிரபந்தங்களில் மெய்யன்பு பூண்டு அவற்றைக் கண்டபாடஞ் செய்வதிலும், அவற்றின் செழும் பொருள்களை உணர்ந்து பிரசவனஞ் செய்வதிலும் ஊக்கமுடைமை, வைணவர்களுக்கு இன்றியமையாததாகும்.

வைணவ சம்பிரதாயப் பேராசிரியர்களான நாதமுனிகள் ஆளவந்தார் இராமாநுஜர் கூரத்

தாழ்வார் பட்டர் லோகாசாரியர் வேதாந்த தேசிகர் மணவாளமாமுனிகள் முதலான பெரியார்களினல் பல வழிகளிலும் வளர்க்கப்பட்டது. இச்சமயம். இவ்வாசிரியர்கள் அனைவரும் அந்தணர் தலைவராய் அவதரித்து வடமொழி வேதத்தில் ஊன்றினவர்களாயிருந்தும், அந்த வேதத்தின் உண்மைப் பொருள்களைக் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காட்டிக் கொடுப்பவை ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களே என்று கொண்டு, வடமொழி வேதத்தை இடக்கண்ணுகவும், தென்மொழி வேதத்தை வலக்கண்ணுகவும் கொண்டிருந்தார்கள். வேதாந்த தேசிகரென்னுமாசிரியர் ''செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றேமே'' என்று கூறியிருப்பதொன்றே இதற்குச் சான்ருகும்.

ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்கட்கு ''உபய வேதாந்த ப்ரவர்த்தகாசாரியர்கள்'' என்பது சிறப்புப் பெயர். வடமொழி வேதாந்தமும் தென்மொழி வேதாந்தமுமாகிய இவையே உபய வேதாந்தமெனப்படும். உபய வேதமெனினும் உபய வேதாந்தமெனினும் ஒக்கும். வடமொழி மறையிற் கூறின பொருள்களும், தென்மொழி மறையிற் கூறின பொருள்களும் வேறுபாடின்றி, ஒத்திருந்தாலும், வடமொழி மறைப்பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது தென்மொழி மறை என்பது பற்றியே, உபய வேதாந்தப் பேராசிரியர்களென்று பிரசித்திபெற்றவர் வைணவப் பெரியார்கள்.

இங்குச் சிலர் கருதக்கூடும்; உலகில் பல மொழிகள் தோன்றியுள்ளன. ஒவ்வொரு மொழியிலும் பக்திமிக்க பல கவிகள் தோன்றித் தத்தம் தெய்வங்களைத் துதித்துள்ளார்கள். அவை தோத்திர நூல்களெனப்படும். அவ்வண்ணமாகவே வைணவ பக்தர்களான ஆழ்வார்கள், தமிழ்நாட்டில் தோன்றித் தமிழ்ப் புலமை பெற்றுத் தெய்வ வழிபாட்டிலூன்றிப் பாசுரங்கள் பாடினர். இவை தோத்திரப் பாக்களே யன்றி, இவற்றைத் தமிழ் வேதமென்னலாமோ? இஃது உபசார வழக்காகு மத்தனையன்றோ என்று!

இங்குத் தத்துவத்தை யுணர்த்துகின்றேம். ஆழ்வார்களின் அருளிச் செயலான திவ்வியப் பிரபந்தங்கள் தோத்திர நூல்கள் என்பதில் ஐயமில்லை. ஆனுலும், இவை மற்ற தோத்திர நூல்கள் போலல்லாமல் வேதப்பொருள்கள் கமழ நின்றிருப்பதாலும், பாஞ்சராத்திர நூல்களில் இவற்றை வேதமென்றே யெடுத்துக்காட்டி, 'இவை அவதரிக்கப் போகின்றன' என்று கூறியிருப்பதாலும், வைதிகோத்தமர்களான பிராமண ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆதிகாலந்தொட்டே இவற்றை வேதமென்றே வழங்கி வருவதாலும், இவற்றுக்குத் தமிழ் வேதமென்னும் வழக்கு முக்கியமேயல்லது உபசாரத்தினலாயதன்று. திரிமதஸ்தர்களும் பிரமாணமாக இசைந்துள்ள ஸ்ரீபாகவதத்தில் பதினேராவது ஸ்கந்தத்தின் முற்பகுதியில் ''கலௌ கலுபவிஷ்யந்தி நாராயணபராயணு:..... த்ரமிடேஷு'' என்று தொடங்கியுள்ள சுலோகங்களில் தாமிரபர்ணி, வைகை, காவேரி, பாலாறு என்னும் நதிகளையெடுத்துக் காட்டி, இவற்றின் கரையில் நாராயண பக்தர்கள் அவதரிக்கப் போகிருர்கள் என்று கூறியிருப்பதும் காணத்தக்கது.

மதிப்புரை

# அறிமுகம்

**உணவில் புலால் தேவையா ? :** அண்மையில் நமது சென்னை மாநகரில், உலகத் தாவர உணவாளர் பேரவை-இந்தியக் கிளையின் சார்பில், மிகவும் சிறப்புற நடைபெற்ற தாவர உணவு மாநாட்டினை யொட்டி, அறிஞர் திரு. கருப்பையா, பி.ஏ., அவர்களால், புலால் உண்ணுமையையும், தாவர உணவின் சிறப்பையும் விளக்கி வற்புறுத்தி எழுதப் பெற்றுள்ள இந்நூல், பகவான் மகாவீரர் அகிம்சா பிரச்சார சங்கத்தின் ஆதரவில், சென்னைப் புரசை அகிம்சை நூலகத்தின் வாயிலாக அழகுற வெளிவந்துள்ளது. இந்நூல் 15 பிரிவுகளும், 2 புள்ளிவிவர இணைப்புக்களும் கொண்டு விளங்குகின்றது. புலால் உணவினுல் நேரும் பலவகைத் தீங்குகளும், தாவர உணவினுல் நாம் பெறத்தக்க நலங்களும், இந்நூலின் கண் அழகுற விவரிக்கப் பெற்றுள்ளன. புலால் மனித உணவுக்கு ஏற்றதன்று; புலால் உண்பதனுல், உடலில் பல நோய்கள் உண்டாகக்கூடும்; புலால் தேவையற்றது, தீதானது; புலால் அன்புநெறிக்கும், அறநெறிக்கும் மாறுபட்டது என்னும் கருத்துக்களை, அறிஞர் **திரு. கருப்பையா,** பி.ஏ., அவர்கள், இந்நூலில் அழகுற விவரித்துள்ளார். புத்தர், இராமலிங்கர், காந்தியடிகள் போன்ற அருளாளர்களும்; டாக்டர் ஜீன் போகர்ட், டாக்டர் ஹென்றி சி. ஷெர்மன், முதலிய உணவாராய்ச்சி நிபுணர்களாகிய அறிவியல் அறிஞர்களும், ஆகிய பலர் கூறுகின்ற அரிய பல தகவல்களும் கருத்துக்களும், இந்நூலில் ஒருங்கு தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. பொதுவாக, எல்லோருமே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய, நல்ல பயன்மிக்க சிறந்த நூல். சிறப்பாக, சன்மார்க்க நெறியில் செல்ல விழையும் தக்கோர்கள் ஆகிய அன்பர் அனைவரும், படித்தற்குரிய சிறந்த நூல். அழகிய திருத்தமான பதிப்பு. பக்கங்கள் 150. விலை ரூ. 5. கிடைக்குமிடம்: ''அகிம்சை நூலகம், 10, கந்தப்ப ஆசாரி தெரு புரசைவாக்கம், சென்னை-600007.''

**—ஆசிரியர்**

மதுரை மாவட்டம் சோழவந்தான் வட்டாரத் திருக்கோயிலின் திருப்பாவை — திருவெம்பாவை விழாவில், நமது ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு. கே. சிதம்பரம், திரு. சி. எஸ். தீனதயாளு, திரு. டாக்டர். இரா. நாகசாமி, ஆசிரியர் திரு. முத்துக்கிருஷ்ணன், திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், பேராசிரியர் திரு. நா. பாலுசாமி, அறங்காவலர் திரு. சி. கன்னியப்ப முதலியார், உதவி ஆணையர் திரு. என். சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல் [31—1—1978]

மதுரை மாவட்டம் சோழவந்தான் வட்டாரத் திருக்கோயிலின் திருப்பாவை — திருவெம்பாவை விழாவில், நமது ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு. கே. சிதம்பரம், திரு. சி. எஸ். தீனதயாளு, திரு. டாக்டர். இரா. நாகசாமி, ஆசிரியர் திரு. முத்துக்கிருஷ்ணன், திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், பேராசிரியர் திரு. நா. பாலுசாமி, அறங்காவலர் திரு. சி. கன்னியப்ப முதலியார், உதவி ஆணையர் திரு. என். சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல் [31—1—1978]



சென்னைக்கு அருகில் உள்ள பூவிருந்தவல்லி அருள்மிகு வரதராசப் பெருமாள்கோயில் (திருக்கச்சி நம்பிகள் சந்நிதி) மகாசம்ப்ரோட்சன விழாவில், நமது ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன், பி. ஏ. முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். [29—1—1978]

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.